உ

சிவமயம்

இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

# பாராட்டு விழா மலர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7, 57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6



பாராட்டு விழாச் சபை

14-8-1978


உ

சிவமயம்

இலக்கிய கலாநிதி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

# பாராட்டு விழா மலர்



பாராட்டு விழாச் சபை

14-8-1978

# இலக்கிய கலாநிதி
# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

## பாராட்டு விழாச் சபை

அச்சுப் பதிவு: வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# வெளியீட்டுரை

தமிழ் கூறும் நல்லுலகத்தில் சிவ நெறிக்கும் செந்தமிழுக்கும் உரைகல்லாகத் திகழ்பவரும், சங்க இலக்கியங்கள், சித்தாந்த சாத்திரங்கள், புராண இதிகாசங்கள் ஆகிய பல நூல்களையும் துறை போகக் கற்றுணர்ந்த பேரறிஞரும், பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களையும் பண்டிதர்களையும் உருவாக்கிய பேராசிரியரும், நாவலர் பெருமான் மரபுவழி வந்த நூலாசிரியர், உரையாசிரியரும், அநுபூதிச் செல்வருமான குருதேவர் பண்டிதமணி ஐயா அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையைப் பாராட்டும் நோக்கமாக ஒரு பாராட்டு விழா எடுத்து அவ் விழாவில் விசேட மலர் ஒன்றினையும் வெளியிட வேண்டுமென்று அவருடைய மாணக்கர்கள், கல்விமான்கள், அறிஞர்கள் பொது மக்கள் விருப்பப் பட்டார்கள்.

அவ் விருப்பத்தை நிறைவேற்று முகமாக இம் மலரை வெளியிடும் வாய்ப்பைத் திருவருள் கூட்டியுள்ளது.

'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பதற் கிணங்க இம் மலர் தீந்தமிழ் கமழ்ந்து பொலிகின்றது.

பண்டிதமணியை ஆசீர்வதித்து ஆதீன கர்த்தர்கள் பீடாதிபதிகள் அனுப்பிய ஆசிச் செய்திகள் இம் மலரை அலங்கரிக்கின்றன.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்களும் உரையாசிரியர்களும் பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கியுள்ளார்கள்.

பண்டிதமணியின் சகாக்கள் நண்பர்களாகிய பெரியோர் பலர் நல்வாழ்த்துக் கூறியுள்ளார்கள். பழைய மாணக்கர்களும் அன்பர்களும் செய்யுளிலும் உரைநடையிலுமாக வாழ்த்தும் வணக்கமும் நல்கியுள்ளார்கள்.

இங்ஙனம் சிறப்புச் செய்த பெருமக்கள் யாவருக்கும் பாராட்டுச் சபை மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

தினகரன் வீரகேசரி, சுதந்திரன், தினபதி, இந்துசாதனம் ஈழநாடு ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளும் டெய்லி நியூஸ், டெய்லி மிறர் ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் கலாநிதிப் பட்டம் அளித்த நாளில் செய்தியாக மாத்திரமன்றித் தலையங்கங்கள், எழுதியும், பின் யாழ் வளாகத்தில் விழா

வெடுத்த சமயத்திலும் செய்தியாகவும் தலையங்கங்கள் எழுதியும் பண்டிதமணியைப் பாராட்டிப் பெருமதிப்புக் கொடுத்தன. பாராட்டு விழாச் சபை இப்பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு என்றென்றுங் கடமைப் பாடுடையதாயுள்ளது.

அல்லும் பகலும் அயராது எம்மோடு ஒத்துழைத்து மலரை அழகுற அச்சிட்டுத் தந்த வஸ்தியன் அச்சக முகாமையாளர் ஊழியர் யாவருக்கும் எமது நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

நிறைந்த மனசுடன் குறைந்த நேரத்தில் சிறந்த முறையில் நிழற்படங்களையும் புளொக்குகளையும் செய்துதவிய ஞானம்ஸ் படப் பிடிப்பு நிலையத்தாருக்கு எவ்வளவு நன்றி கூறினுமமையாது.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது எண்பதாண்டு நிறைவையும் ஒரு நோக்கமாக வைத்து வெளியிடும் இம் மலரில் இடம்பெற்ற விஷயங்களை மூலப் பிரதிகளுடன் ஒத்துப் பார்த்துக் கூடுமானவரை பிழைகளின்றி இம்மலர் வெளிவருவதற்குப் பேருதவியாக இருந்தவர்கள், இளைப்பாறிய தபாலதிபர் உரும்பராய் திரு. மு.வைத்தியலிங்கம் அவர்கள், என்பது விசேடமாகக் குறிப் பிடத்தக்கது.

இம் மலரைச் சிறப்பாக வெளியிடுவதற்கு ஊக்கமும் ஒத்துழைப் புந் தந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பர்கள் யாவருக்கும் மிகுந்த நன்றியைப் பாராட்டு விழாச் சபை தெரிவித்துக்கொள்ளு கிறது.

அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி
இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. க.
பாராட்டு விழாச் சபை

உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

சைவத் தமிழ்ப் பேரறிஞர்



இலக்கியகலாநிதி பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

## திருவாவடு துறை ஆதீன கர்த்தர்
## ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டாரச் சன்னிதி அவர்கள்
# *வழங்கிய ஆசியுரை*

சைவமும், தமிழும் தனிச் சிறப்புடன் ஒப்புயர்வு இன்றி விளங்கப் பல்லாற்றானும் இலங்கை வாழ் சைவர்கள் மேற்கொண்டு செய்து வரும் பணிகள் பாராட்டிற்குரியனவாம். ஆறுமுக நாவலருக்கு ''நாவலர்'' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்டிய திருவாவடுதுறை ஆதீனம், அவரது வழிவந்த பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்களைப் பாராட்டுவதும் சால்புடையதேயாகும். பண்டிதமணி அவர்கள் ''கலாநிதி'' என்ற சிறப்புப் பட்டமும், சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் விருதும் பெற்றதோடு, ஆயிரம் பிறை கண்ட அரிய நிலையையும் அடைந்துள்ளார். இலங்கைப் பல்கலைக் கழகமும், சாகித்திய மண்டலமும் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தது அதன் தமிழ் மரபை நன்கு புலப்படுத்துகிறது.

பண்டிதமணி அவர்கள் ஆயிரம் பிறை கண்ட சிறப்போடு மேலும் பல ஆண்டுகள் இவ்வுலகிடை வாழ்வாங்கு வாழ்ந்து, தமிழுக்கும், சைவத்துக்கும் ஆவதனைத்துஞ் செய்ய ஞானமா நடராஜப் பெருமான் நல்லருளைச் சிந்தித்துள்ளோம்.

---

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி அவர்கள்
# *வழங்கிய ஆசியுரை*

பண்டிதமணி ஸ்ரீ சி. கணபதிப்பிள்ளையின் எண்பதாவது நிறைவு விழா நடைபெறுவதை அறிந்தும், அந்தச் சமயத்தில் இலங்கைப் பல்கலைக் கழகம் அவருக்கு ''இலக்கிய கலாநிதி'' என்ற சிறப்புப் பட்டத்தைக் கொடுப்பதையும் கேட்டுச் சந்தோஷமடைகிறோம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நம்முடைய சமய இலக்கியத்திற்குத் தொண்டு புரிந்துகொண்டு இறைவன் அருளுக்குப் பாத்திரராகும்படி ஆசீர்வதிக்கிறோம்.

## தருமையாதீனம்
## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
# *வழங்கிய ஆசியுரை*

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் விரும்புமாறு எடுத்துரைக்கும் சொல்லாற்றலும், எளிய இனிய தமிழ் நடையில் சுவைபட எழுதும் எழுத்தாற்றலும், நன்கு அமையப் பெற்றவர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை. பல ஆண்டுகளாகப் பேராசிரியராக விளங்கி மாணவர்களை அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த அறிஞர்களாக்கிய சிறப்பும் இவருக்கு உண்டு. இலங்கைப் பல்கலைக் கழகம் அண்மையில் கலாநிதி என்ற பட்டமளித்துப் பாராட்டியது இவர் பெருமைக்கு எடுத்துக் காட்டாகும்.

இலக்கியத் துறையிலும் சமயத் துறையிலும் அனைவரும் மதிக்கத்தக்க பெருந் தொண்டு புரிந்து வரும் பண்டிதமணிக்கு எண்பதாவது ஆண்டு நிறைவுறுகிறது. அந் நன்னாளில் அவரைப் பாராட்டி விழா எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. இவ்விழா ஆயிரம் பிறை கண்ட பெருமைக்குரியது. வாழ்வு முதிர முதிர இறையருளில் முழுதும் திளைக்கச் செய்து யாவற்றையும் சத்தியும் சிவமுமாகக் காணச் செய்வது.

பண்டிதமணியின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா சிறப்புற நிகழவும், விழா மலர் நன்கு மலர்ந்து படிப்போர் மனதில் தெய்வமணம் பரப்பவும் செந் தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

# வாழ்த்துரை

## சித்தாந்தச் செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள்
*'தனி அலுவலர் சைவ சித்தாந்தத் தத்துவத்துறைப் பல்கலைக் கழகம்'*

உயர்திரு. பண்டிதமணி அவர்கள் தலையாய அறிவும் பண்பும் வாய்த்துள்ள பெருமகனர். வாழ்ந்து வரும் திருப்பெருந் திரு நாவலர் எனக் கொண்டு போற்றத்தக்க பெரியார். சிறந்த சாத்திர மெய்யுணர்வும் பெருங்காப்பியங்களின் தெளிவும் ஒருங்கே உளங் கொண்டவர். எல்லாவற்றினும் தனி முடியாக 'ஒழுக்கத்து நீத்த பெருமை' உடையவர். அவர்களை யார் பாராட்டினும் அது பாராட்டுவோர் தனிப் பெருமையை உணர்த்துவதன்றி அவர்களது மலையனைய பெருமையினையும், மலரனைய மாண்பினையும் அளவு படுத்துவதாகாது! ஈழநாடு அவர்களை உணர்ந்து பாராட்டும் வாயிலாகத் தன்னையே உணர்கிறது என்பது தான் கருத்து.

அங்கயற் கண்ணி தன்னோடும் அமர்ந்து அருளாட்சி புரிந்து வரும் ஆலவாய் அவிர் சடைக் கடவுள், அவர்களை நீடினிது காத்துத் தமிழுலகத்திற்கும் திருநெறியாம் சிவமாய நெறிக்கும் பாதுகாப்பைக் கொடுத்தருள்க.

மதுரை ஆதீன கர்த்தர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# ஆசியுரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு, இலங்கைப் பல்கலைக்கழகம், ''கலாநிதி'' என்ற பட்டத்தை வழங்கியுள்ளதையும், அவருக்கு எண்பதாவது வயது நிறைவு பெறுவதையும் பாராட்டி, ஈழத் தமிழ் மக்கள் பெருவிழா எடுத்துக் கொண்டாட இருப்பதையும், அது சமயம் ஒரு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ் கிறோம்.

அவ்வாறு பாராட்டு விழாப் பெறுகின்ற, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு, சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர் வரிய மெஞ்ஞானமும், சிந்தித மனோரத சித்தியும், அரோக திடகாத்திரமும், தீர்க்காயுளும், அஷ்ட ஐஸ்வரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குரு கடாக்ஷமும், மேன்மேலும் பெருக உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம் வல்ல எம் அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்

---

# நுணுகி ஆராய்பவர்

உயிருள்ள இலக்கியம் படைக்கப்படல் வேண்டும் என்று பண்டிதமணி கூறியி ருக்கிறார். இப்பணியைப் பத்திரிகைகள் ஏற்கவேண்டும். எதையும் நுணுக்கமாக ஆராய்தல் பண்டிதமணியின் சிறப்பாகும். அவரில் இரண்டு ஆற்றல் சங்கமமாகி இருக்கின்றன. சில ஆங்கில நூல்களில் உள்ள நுண்ணிய கருத்துக்களைச் சொல்லுந் திறன் அவருக்குண்டு. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இலக்கியம் யாருக்குப் படைக்க வேண்டுமென்பதை உணர்ந்து பண்டிதமணி அவர்கள் இந்நூலை எழுதியிருக்கிறார். சிந்தித்துத் தெளிந்த எழுத்து பிறர் மனதில் ஊன்றக் கூடிய உணர்வோடு எழுத வேண்டும், ஆழ்ந்த புலன் உள்ளவர் பண்டிதமணி அவர்கள்.

பேராசிரியர் வி. செல்வநாயகம்
(சாகித்திய மண்டல விழாவில்)

## பண்டிதமணிக்குப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின்

# பாராட்டும் நல்வாழ்த்தும்

இலக்கிய கலாநிதி பண்டிதமணியும் நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளையில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள். அவர் சற்றே இளையவர். அக்கிர பூசை பெறுதற்கு உரியவர்.

என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதல்லரே? பண்டிதமணிக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையால், இலங்கைப் பல்கலைக்கழகம் தன்னையே கௌரவித்துக் கொண்டது. பல்கலைக் கழகத்துக்கு எனது மனம் நிறைந்த பாராட்டு உரியதாகும்.

பாராட்டு விழா இனிது நிறைவுறுக. கலாநிதிப் பட்டம் பண்டிதமணியை அடைந்தமையால் அது தனக்கே ஒரு மதிப்பைப் பெற்றுள்ளது, இனிப் பண்டிதமணி என்னும் காரணப் பெயர் அன்பனுக்கு இயற் பெயராகுக. கலாநிதி பண்டிதமணி என வழங்குவோம்.

பண்டிதமணி திருவருளால் நீடு வாழ்க.

தமது உடைமையையும் தம்மையும் திருவருளுக்கே அர்ப்பணஞ் செய்து வாழ்க. எங்கும் சாந்தி நிலவுக.

---

100, நொறிஸ் கனல் ரோட்டு,
கொழும்பு-10.
30-5-78

அன்புள்ள ஐயா,

உங்களுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குவதென இலங்கைப் பல்கலைக் கழகம் முடிவு செய்ததை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைந்தேன். காலங் கடந்தேனும் இம் முடிவு எடுத்தது மகிழ்ச்சியைத் தருகின்றது.

வழக்கமாகப் பட்டம், பெறுபவரை அலங்கரிக்கும்; உங்களைப் பொறுத்த வரையில் பட்டமே அலங்கரிக்கப்படும்.

விரைவில் உங்களை நேரில் சந்தித்து ஆசி பெற உள்ளேன்.

பணிவான வணக்கம்.

மு. சிவசிதம்பரம்

## அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும்
## உயர் நீதி மன்ற முன்னாள் நீதியரசருமான
## திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களின்

# வாழ்த்துரை

நல்லூர் நாவலர் பெருமான் சைவமும் தமிழும் மறுமலர்ச்சியுற வைத்த மகான்; அவ்வரலாற்று நாயகரின் வழியில் நின்று, செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்குவதற்காக, அரை நூற்றாண்டு காலமாகச் சிறப்பான பணி புரிந்து வருபவர் பண்டிதமணி அவர்களாவர்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தீந்தமிழ்ப் போதனாசிரியராக அவர் திகழ்ந்தபோது, பல நூற்றுக் கணக்கான நல்லாசிரியர்களை அவர் உருவாக்கினார். ஆசிரியர்களுக்கு ஆசிரியராக அவர் விளங்குகிறார். அவர் அள்ள அள்ளக் குறையாத அறிவுச் சுரங்கம். 'ஆன்ற விந்தடங்கிய சான்றோன்'.

நாவலர் பெருமானைப் போலவே நாவன்மையும் கொண்டவர் நமது பண்டிதமணி அவர்கள். சைவசித்தாந்தம் தமிழ் இலக்கியம் முதலிய துறைகளில் அவர் ஆற்றும் சொற்பொழிவுகள் தீஞ்சுவை கொண்டவை. செந்தமிழ் அவர் நாவில் அழகுடன் நடமாடும். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என வாதிட்ட நக்கீரன் பரம்பரையில் வந்த பண்டிதமணி உண்மையை நிலை நாட்டுவதற்காக அறிஞர்கள் எனக் கூறிக்கொண்டோர் பலரைப் பல தடவைகளில் சாடிக் கொள்ளவும் தயங்கியவரல்லர்.

பண்டிதமணி அவர்களின் கம்பீரமான எழுத்து நடையில் அமைந்த சமயக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் படிக்கப் படிக்கப் பயனும் சுவையும் தருவன; அவர் தமது பேனாவினாலும் நாவினாலும் தமிழ் மொழிக்கு வீறும் வலிமையும் சேர்த்திருக்கிறார்கள்.

சித்தாந்தச் செம்மலாக, சிவாநுபூதிச் செல்வராக, செந்தமிழ் மூதறிஞராக எம் மத்தியில் விளங்கும் பேரறிஞர் பண்டிதமணி அவர்களுக்கு 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டம் அளிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது' இதன் மூலம் 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டம் தனக்குரிய தகுதியையும் பெற்றுவிட்டது.

செந்தமிழ்க் கடலாகிய பண்டிதமணி அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் அருளை இறைஞ்சுகின்றோம்.

# தமிழுக்கு வாழ்வைக் கொடுத்தவர்

**(பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள், தே. பே. உறுப்பினர்)**

இந் நூற்றுண்டில் தமிழுக்குத் தம் வாழ்வைக் கொடுத்தவர் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலர் பெருமான் காட்டிய நல்வழியினை நிலைநாட்டி வாழ்ந்து வந்த தமிழ்ப் பேரறிஞர் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் அவர். தம்முடைய நல்லொழுக்கத்தாலும், உயர்ந்த சிந்தனையாலும், சிறந்த சொல்வன்மையாலும், நிலைத்த தமிழ்த் தொண்டாலும் மாணவர் திருக்கூட்டம் ஒன்றை உருவாக்கினுர் அவர். இந்தத் தனிப்பெருமை இந்நாட்டில் அவருக்கு மட்டுமே உரியது. பழைய தமிழ் மரபில் கால்கொண்டு, புதிய தமிழ் மரபைப் படைப்போருக்குக் கைகொடுத்தவர் அவர். தமிழ் ஈழத்தில் ஒரு தலைமுறை காலத்துக்கு மேல் தமிழ் ஆசிரியர் கலாசாலைகள் தமிழைப் பேணி வளர்த்தன. இக் கலாசாலைகளில் தமிழ்த் தொண்டாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளில் இரு பேரறிஞர்கள் முன்னணியில் உளர். ஒருவர் மகாலிங்கசிவம்; மற்றையவர் பண்டிதமணி அவர்கள்.

பண்டிதமணி கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றுத் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் கற்பித்தார். அவர் சைவ ஆசிரியர் கலாசாலையில் கற்பித்த காலத்தில், அந்த ஆசிரியர் கலாசாலை ஒரு தமிழ்க் கோயிலாக விளங்கிற்று. அந்தத் திருக்கோயிலுக்குத் தமிழ் அறிஞர்களும் தமிழ் ஆர்வம் கொண்ட அடியார்களும் தொடர்ந்து சென்றனர். அத் திருக்கோயிலுக்கு மூலவராகப் பண்டிதமணி காட்சியளித்தார். தமிழ் மாணவருக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் அவர் கலைகளுக கை விளங்கினுர்.

தமிழ் அறிஞர் சிலர் 'அற்ப' சலுகைகளுக்காக தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் மாசு விளைத்து வரும் காட்சி மலிந்த இக் காலத்தில், பட்டத்திற்கோ பதவிக்கோ தம்முடைய வாழ்வை எந்தச் சூழ் நிலையிலும் திசை திருப்பாமல் அவர் வாழ்ந்தார். உயர் பதவியில் இருக்கும் தமிழர்கள் தமிழுக்கோ சைவத்துக்கோ இழுக்குத் தேடினுல் அவர்களை நக்கீரர் - நாவலர் - வழிமுறையில் கண்டித்தற்கும் அவர் பின் நிற்கவில்லை.

பட்டங்களால் உயர்வு பெறுவோர் பற்பலர்; பட்டங்களுக்கு உயர்வு கொடுப்போர் சிற்சிலர். இந்தச் சிற்சிலரிலும் இரண்டொருவரே தலையிடத்து வைத்து எண்ணப்படுவோர். இந்த நாட்டில் இலக்கிய கலாநிதிப் பட்டத்தைப் பெற்று தலையிடத்து வைத்து எண்ணப்படும் பெருமையைப் பெற்றவர் பண்டிதமணி ஒருவரே.

பல ஆண்டுகளுக்கு முன் அவரைப் பற்றி நான் எழுதியபோது அவருக்குக் கலாநிதிப் பட்டங் கொடுத்துப் பெருமைப் படுத்துதற்கு இந் நாட்டில் ஒரு பல்கலைக் கழகம் இல்லையே! என்று குறிப்பிட்டேன். இப்பொழுதுதான் இலங்கைப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாண வளாகத்தின் உந்துதலால் அவருக்குக் கலாநிதிப் பட்டத்தை வழங்கித் தமிழையும் தமிழ் மக்களையும் மதிக்க முற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் உருவாகப் போகின்றது; வாழ்க பண்டிதமணி; வளர்க அவருடைய தொண்டுகள்.

வடமாநிலக் கல்வி அதிபதி

திரு. தில்லைநாதன் மாணிக்கவாசகர் அவர்கள் விடுக்கும்

# பாராட்டுச் செய்தி

இலங்கைப் பல்கலைக் கழகம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைக் கௌரவித்துக் கலாநிதிப் பட்டம் வழங்குவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கைப் பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப்படும் முதல் தமிழ் அறிஞர் பெருமகன் அவரேயாகும். பல்கலைக் கழகம் பண்டிதமணியைப் பெருமைப் படுத்துகிறது என்பதைவிட, அவரைக் கௌரவிப்பதன் மூலம், பல்கலைக்கழகமே பெருமை தேடிக் கொள்கிறது என்பதே பொருத்தம்.

பண்டிதமணி அவர்கள் தமிழறிஞர்; சைவசித்தாந்தத்தில் துறைபோகியவர், கந்தபுராணத்தில் ஊறித்திளைத்தவர்; தான் அறிந்தவற்றை மாணக்கர்களுக்குச் சுவைபடக் கற்பிப்பதில் தலைசிறந்தவர். அவரிடம் சைவாசிரிய கலாசாலையில் போதம் பெற்றோர் எண்ணற்றோர். அவர்கள் நாடெங்கும் ஆசிரியர்களாகப் பரந்து தமிழிலக்கியத்தினதும், சைவசித்தாந்தத்தினதும் கலாசார மரபைப் பேணி வருகின்றார்கள். பண்டிதமணியை ஆசானுகக் கொண்டது நாடு செய்த தவம்; கந்தபுராண கலாசார மரபைப் பெற்ற நாம் செய்த தவம்.

பண்டிதமணி 'இலக்கிய வழி', 'சமயக் கட்டுரைகள்' உட்பட அவர் கைப்பட எழுதிய நூல்கள் பல. கந்தபுராணத்தின் தக்ஷகாண்டத்திற்கு அவர் எழுதிய உரை அவர் வாழ்வின் உன்னதமான பணி. அவரின் சைவசித்தாந்தத் தமிழறிவையும், உறங்கா உழைப்பையும், மேதகைமையையும் காட்டும் அந்த நூலுக்கே எத்தனையோ, கலாநிதிப்பட்டங்கள் வழங்கலாம்!

இந்தப் பணி எப்போதோ நிகழ்ந்திருக்க வேண்டும். காலம் தாழ்த்தியாகுதல் நடந்திருக்கின்றது என்பதில் மகிழ்ச்சியே. இச் சந்தர்ப்பத்தில் அவருக்கு எனது பாராட்டுதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

# வாழ்த்துரை

பேரறிஞர் ம. மு. உவைஸ் அவர்கள்
' மர்கஸி ' கனேமுல்லை, பாணந்துறை.

பொதுவாக அறிஞரை உருவாக்கும் இடம் பல்கலைக் கழகம். அங்கு பயின்று பட்டம் பெற்றதும் உலகம் அத்தகையோரை அறிஞர் என்று கணிக்கிறது; மதிக்கிறது; போற்றுகின்றது. பல்கலைக் கழகமும் அதனிடத்தே பயின்று தேர்ச்சி பெற்றோருக்கே பெரும்பாலும் பட்டங்களை வழங்கிக் கைதூக்கி விடுகின்றது. இலங்கையில் பல்கலைக் கழகம் தொடங்கிய நாள் தொட்டு இந்தப் பாரம்பரியமே மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளது. ஆனல் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. அறிவும், ஆற்றலும், அநுபவமும் மிக்கோரையும் கௌரவிக்கத் தொடங்கி உள்ளது. இந்த அடிப்படையில் கௌரவிக்கப்பட்ட முதலாவது தமிழ்மகன் என்ற பெருமைக்கு ஆளாகியுள்ளார் பண்டிதமணி சி, கணபதிப்பிள்ளை அவர்கள். அண்மையில் இலங்கை பல்கலைக் கழகம் பத்தாண்டுகளுக்குப் பின்னர் நடத்திய அதன் முதலாவது பட்டமளிப்பு விழாவில் பண்டிதமணி அவர்களை '' இலக்கிய கலாநிதி '' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது. உண்மையிலேயே தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் கௌரவித்ததற்கு இது சமமானதெனக் கருதலாம்.

பல்கலைக் கழகம் புகுமுகத் தேர்வுக்கான பாட நூல்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு 1960 ம் ஆண்டில் காலஞ்சென்ற பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களிடமும், என்னிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது. 1964 ம் ஆண்டிலிருந்து புகுமுகத் தேர்வுக்கான தமிழ்ப் பாடப் புத்தகங்களுள் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்களின் ' இலக்கிய வழி ' என்னும் நூல் இடம் பெறல் வேண்டும் என்று நாமிருவரும் விதந்தோதினேம். பல்கலைக் கழகமும், தேர்வுத் திணைக்களகமும் அதனை ஏற்றது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் தமது நூலைத் திருத்திப் பாடசாலைகளுக்கெனத் திருத்திய ஒரு பதிப்பை வெளியிட்டார்கள். பண்டிதமணி அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்ற ஆண்டிலும் 'இலக்கிய வழி' மீண்டும் கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சைக்குரிய பாட நூலாக அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

பண்டிதமணி அவர்களுடன் நேரடித் தொடர்பு எனக்கு இருக்கவில்லை யாயினும் அவருடைய கட்டுரைகளைப் படித்துப் பயன்பெறும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், இன்னும் பல ஆண்டுகள் சிறந்த உடல்நலத்தோடு வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

# வாழ்த்துரை

**மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்**

**(பேராசிரியர், மதுரைப் பல்கலைக் கழகம்)**

திரு. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் சேய் நாட்டிற்கும் தாய் நாட்டிற்கும் பயன் பெற்ற செந்தமிழ்ப் பேரறிஞர். இந் நாட்டிலும் சைவப் பயிரைத் தழைக்கச் செய்த சைவ சித்தாந்த ஞான பானு ஸ்ரீமத் ஆறுமுகநாவலர் அவர்களுடைய மரபு வழிச் செல்பவர். நைட்டிகப் பிரமச்சாரி. கல்வி எல்லா இடங்களிலும் மலரக் கூடும். ஒழுக்கம் ஒரு சில இடங்களிலேயே ஓங்கி வளரும். ஒழுக்கத்தோடு கல்வியும் இணைந்து பரிமளிக்கும் பழந்தமிழ்ப் பெருமகன் இன்று பல்கலைக் கழகத்தினால் கலாநிதி என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்படுகிறார். பட்டத்தால் உயர்பவர்கள் பலர். பட்டம் உயர்வது சிலரால். கணபதிப்பிள்ளை அவர்களுடைய உழைப்பும், உற்று நோக்கும் திறனும், கவிதா சக்தியும், கற்பனைத் திறனும் கலாநிதிப் பட்டத்தைக் கௌரவிக்கின்றன.

இலங்கைப் பல்கலைக் கழகம் தக்கவருக்குப் பழுத்த காலத்தில் பட்டமளிப்பதால் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றியிருக்கிறது என்று எண்ணும்போது, எந்த அறிஞன் உள்ளம் பல்கலைக் கழகத்தை உவந்து பாராட்டாமல் இருக்க முடியும்! பண்டிதமணி பல்லாண்டு வாழ்க! பணி பல செய்க! அவர்களைப் பாராட்டிய பல்கலைக் கழகம் தக்கார் பலரையும் இன்னும் பாராட்டித் தழைத்து ஓங்குக.

---

# சைவ சித்தாந்தப் பேரறிஞர் வாழ்க!

**திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E. அவர்கள்**

*(செயலாளர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை)*

நாவலர் பெருமான் என்ற பேராற்றிலிருந்து மூன்று கிளை நதிகள் பிரிந்து ஓடத் தொடங்கின. காசிவாசி செந்திநாதையர் ஒரு கிளை நதி. அவர் தம் குருவின் சமயப் பணியைத் தொடர்ந்தார். வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை இன்னொரு கிளை நதி. அவர் நாவலரவர்களின் தமிழிலக்கியப் பற்றிலிருந்தும் நயப்பிலிருந்துங் கிளை கொண்டார். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வேறொரு கிளை நதி. அவர் நாவலர் ஐயாவின் இலக்கண மொழியியற் புலமையினின்றும் பிறந்தவர்.

இந்நூற்றாண்டிலே நாவலர் பரம்பரைக்குப் பிரதிநிதிகளாய் நாம் கண்ட பெரியார்கள் மூவர். மகாவித்துவான் கணேசையர் தமிழிலக்கணப் பேரறிஞர்: புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை இலக்கிய நயப்பாளர், சிறந்த கவிஞர்; அண்மையிலே இலங்கைப் பல்கலைக் கழகத்தினால் இலக்கியக் கலாநிதிப் பட்டம் சூட்டப்பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் தலைசிறந்த சைவ சித்தாந்தப் பேரறிஞர். இம் மூவரும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் நன் மாணாக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலரவர்கள் புதியதொரு தமிழ் நடையினைத் தமிழுக்கு அறிமுகம் செய்து 'வசன நடை கைவந்த வல்லாளர்' ஆனது போலப் பண்டிதமணியவர்களும் தமக்கென ஓர் உரை நடையை வகுத்துக் கொண்டவர். அந்த நடை கம்பீரமானது; ஆற்றல் மிக்கது; பிறராலே பின்பற்ற முடியாத தனித் தன்மை வாய்ந்தது. அந்த நடையைத் துணைகொண்டு பேச்சாலும் எழுத்தாலும், நாவலரின் சைவ மரபினைக் காத்து வரும் பேரறிஞரான பண்டிதமணிக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கி, இலங்கைப் பல்கலைக் கழகம் தன்னையே பெருமைப்படுத்திக் கொண்டதெனலாம்.

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஆறுமுக நாவலர் சபை தனது வணக்கம் கலந்த பாராட்டுக்களை மகிழ்வுடன் சமர்ப்பித்துக் கொள்கின்றது.

# பண்டிதமணி பல்லாண்டு வாழ்க

திரு. சோ. பரமசாமி அவர்கள்
(செயலாளர், ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்)

ஈழத் தமிழகத்தின் முது பெரும் தமிழ்ப் புலவர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

நல்லைநகர் ஆறுமுகநாவலரை நினைவுறுத்தி நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து வரும் ஐயா அவர்கள் செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கத் தம் மாலான பெரும் பணிகளை ஆற்றி வந்துள்ளார். மேடைப் பேச்சிலும் எழுத்து நடையிலும் தமக்கே உரித்தான தனி முத்திரையைப் பொறித்துள்ளார்; பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியனுய்த் திகழ்ந்தவர்.

ஆயிரக் கணக்கான ஆசிரியர்களின் இதயங்களிளெல்லாம் இடம் பிடித்துக் கொண்ட திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை முன்னுள் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சொல்லாற்றலும், கற்பனைத் திறனும் கற்ருேர் நெஞ்சில் என்றும் நிலைப்பன. ஈழத்துத் தமிழ்ப் புலவர் எவரையேனும் ஒருவர் குறைபடக் கூறின் ஐயா அவர்களின் உள்ளம் கொதித்தெழும். பிறந்த நாட்டின் பெருமையைப் பேணி அதன் மண்வாசனை அகன்று விடாமல் காத்து வரும் பண்டிதமணிக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் வழங்குகின்ற கலாநிதிப் பட்டம் அன்னுரின் அளக்கலாகா ஆற்றலை அளவிட முடியாத போதிலும் அன்னுருக்குப் பெரு மதிப்புச் செய்வது அறிந்து தமிழர் நெஞ்சம் களிக்கின்றது. பண்டிதமணி கலாநிதியாகிப் பாரில் பல்லாண்டு வாழ இறைவனை வழுத்துவோமாக.

---

# அறிஞர்களுக்கு ஒரு திலகம்

(திருமலை ந. மகேந்திரன், செயலாளர், மு. வா. மு.)

கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இருபதாம் நூற்ருண்டின் அறிஞர் களுக்கெல்லாம் ஓர் திலகமாகத் திகழ்கின்ருர். பழைமைக்கும், புதுமைக்கும் பால மான இலக்கியங்களை உருவாக்கியதோடு, சைவத்திலும் தமிழிலுமுள்ள உயரிய கருத் துக்களைச் சகல இனத்தவரும் மதத்தவரும் அறியும்படி செய்த மேதை இவர்.

இவரது புலமைக்கும், ஞானத்திற்கும் இலக்கிய கலாநிதிப் பட்டம் பெரிதல்ல; எத்தனை பல்கலைக் கழகங்கள் சென்று படித்தாலும் இவரது அறிவுக்கு நிகராகாது அன்னுர் நீடூழி காலம் வாழ்ந்து தமிழாராய்ச்சியை மேற்கொள்வாராக.

## பண்டிதமா மணியின்சீர் அறியார் யாரே!

(கலைமகள் ஆசிரியர், வாகீசகலாநிதி
திரு. கி. வா. ஜெகந்நாதன் அவர்கள்)

---

வாழியென வாழ்த்துகின்றேன் இலங்கைப்பல்
கலைக்கழகம் வாழ்க என்றே;
ஆழியென ஆழ்ந்துமலை எனஉயர்ந்து
நிலமெனவே அகன்று நுட்பம்
சூழறிவு படைத்தவனும் கணபதிப்பேர்ப்
பெரும்புலமைத் தூயோ னுக்கிங்
கேழுலகும் புகழ்மணக்கக் கலாநிதிப்பட்
டந்தருமென் றியம்பக் கேட்டேன்.

பழந்தமிழின் ஆழத்தை நனியறிந்து
புதுத்தமிழின் பண்புங் கண்டு
தொழுந்தகைய பெரும்புலமை படைத்துள்ளான்;
நூல்நுட்பம் துணிந்து கண்டு
செழுந்தனிச்சொல் நடையினிலே எடுத்தியம்பும்
தகவுடையான்; சிவன்பால் என்றும்
அழுந்துமனம் உடையவனும் பண்டிதமா
மணியின்சீர் அறியார் யாரே!

இலங்கையிலும் தமிழ்நாட்டில் புலவர்தம்
உலகத்தும் இருகை கூப்பி
நலங்கெழுமத் தொழும்வகையில் மதிப்புற்ற
கணபதிப்பேர் நாவல் லோன்றான்
வலங்கெழுமு கந்தன்றன் புராணத்தில்
தக்ககாண் டத்தின் மாட்சி
துலங்கும்வகை உரையெழுதி ஓதுவார்
எவருமின்பம் துய்க்கச் செய்தான்.

பலநூல்கள் எழுதியுள்ளான்; பலஆசி
    ரியர்க்கெல்லாம் பாடம் சொல்லும்
நிலமேவிப் பேராசி ரியனுகித்
    திகழ்ந்திருந்தான் நினைத்த ஒன்றை
அலையாத படிதுணிவாய் எடுத்துரைக்கும்
    உறுதியுள்ளான்; அவையிற் பேசும்
கலையாரும் போற்றும்வகை கற்றவனும்
    கணபதிப்பேர்க் கலைஞன் வாழி.


நிலாஅணியும் ஈசன் நிமிரருளி னலே
கலாநிதிப்பேர் கொள்ளும் கனவான்—எலாருஞ்சொல்
பண்டிதம ணிப்பட்டப் பண்பன் கணபதிப்பேர்
கொண்டவன் வாழ்கநலங் கூர்ந்து.

# இலக்கிய கலாநிதி
# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
## பாராட்டு விழாச் சபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்கள் |
| காரியதரிசி | : | திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் |
| தனாதிகாரி | : | திரு. த. இராசேந்திரம் அவர்கள் |

**உறுப்பினர்கள்**


திருவாளர்கள் பண்டிதர் செ. சிவப்பிரகாசம், இ. சிதம்பரப்பிள்ளை, க. நல்லதம்பி, பண்டித வித்துவான் க. கிருஷ்ணபிள்ளை, சு. காசிநாதன், மு. நல்லையா, சீ. க. சுப்பிரமணியம், சைவப் புலவர் க. சி. குலரத்தினம், க. தி. சம்பந்தன், பண்டிதை பொ. பாக்கியம், க. சோதிலிங்கம், கெ. நடராசா, க. திருநாவுக்கரசு, இ. த. சுப்பிரமணியம் ஆகியோர்கள்.




கந்தபுராண தக்ஷகாண்ட உரைநூல்சிறப்புவிழா. பண்டிதமணி அவர்களுடன் வியாகரணசிரோமணி தி. கி. சீதாராம சாஸ்திரிகளும் புலவர்மணி அவர்களும். நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் தலைமையுரை வழங்குகிறார். பண்டிதமணி அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகிறார்கள்.



**4-11-68** திங்கள் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் நடைபெற்ற சாகித்திய விழாவில் கலாசார அதிபர் திரு. ஹேமஸ்ரீபிரேமவர்த்தன அவர்கள் சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதினை வழங்குகிறார். பண்டிதமணியின் பதில் உரை வாசிக்கப்படுகிறது. கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய பேராசிரியர் அ. சின்னத்தம்பி, பேராசிரியர்செல்வநாயகம் நவாலியூர் சோ. நடராசன் முதலானவர்களுடன் பண்டிதமணிகாட்சி தருகிறார்.



சைவாசிரிய கலாசாலையில் மூன்று அறிஞர்கள். மௌனதவமுனிவர் ஸ்ரீபொ. கைலாசபதி, அவர்கள் பண்டிதமணி அவர்கள் மூதறிஞர் மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்கள். வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெற்ற கந்தபுராணவிழாவில் பண்டிதமணியவர்களுக்கு திரு சுவாமிநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்கள்



5-1-67 புதன்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கந்தபுராணம் தக்ஷகாண்டம் உரை நூல் வெளியீட்டுவிழாவில் தக்ஷகாண்ட உரை நூல்பிரதி யானைமேல் ஏற்றப்பட்டு ஊர்வலமாக எடுத்துவரப்படுகிறது.

# மட்டுவில் தந்த பரோபகாரி
# இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

(பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள்)

மட்டுவில் ஒரு சிறிய கிராமம்; எனினும் அது பெருமை மிக்கது. இப் பெருமைக்குக் காரணங்கள் பல உள்ளன. இங்கு சந்திரமௌலீச்சுரர் திருக்கோயில் கொண்டெழுந்தருள் புரிகின்றூர். ஐரோப்பியர் படையெடுத்து வந்த காலம் முதல் பெரிதும் அஞ்சியும் அப்படையெடுப்பையடுத்து எமது நாட்டுட் புகுந்து வஞ்சகச் செயல்கள் புரிந்த வேற்றுநாட்டு மதாச்சாரியர்களின் சூழ்ச்சியாலும் உபதேசத்தாலும் இலவசக் கல்வியாலும் வேறு சலுகைகளாலும், மயக்கமுற்றும், எமது வாழையடி வாழையாக வந்த கந்தபுராண கலாசாரத்தை நாம் முற்றிலும் இழக்க இருந்த காலத்தில் எமது கிராமங்களுள் மட்டுவில் ஒன்று மட்டுமே, யாதும் அஞ்சாது, மயக்கமுறுது, சைவத்தையும் தமிழையும், சுருங்கக் கூறின், எமது கலாசாரத்தைப் பேணி வளர்த்து வந்துள்ளது. பட்டியலொன்று தயாரிக்கப்படின் சதுரமைலுக்குத் தமிழுக்கும், சைவத்துக்கும் அருஞ்சேவை புரிந்த மட்டுவில் பெரியோரின் எண்ணிக்கை எம்மை வியப்புறச் செய்யும். இந்த மண்ணிலே இந்தச் சூழலிலே பண்டிதமணி அவர்கள் அவதரித்துள்ளமை வியப்பன்று. பண்டிதமணி அவர்களுக்கு இலக்கியக் கலாநிதி என்னும் பட்டத்தினை இலங்கைப் பல்கலைக் கழகம் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. ஆனுல் உண்மையில் அச்செயலால் பல்கலைக் கழகம் தன்னைத்தானே பெருமைப்படுத்திற்று. பலரறிநிலையைஅவாவி நிற்காது, பிரசாரம் விரும்பாது, மௌனவிரதம் இயன்றளவு விடாது பற்றி, தமிழிலும், சைவத்திலும் தீர்க்கதரிசியாகவும் வழிகாட்டியாகவும் திகழும் பண்டிதமணி அவர்களின் பெருமையினை நன்குணர்ந்து இக்கௌரவப் பட்டத்தினை வழங்கியுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தை மாண்புடன் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியன் என்ற முறையிலும் தொலையிலிருந்து பண்டிதமணி அவர்களின் பெருமையினை உணர்ந்து நுகர்கின்றவன் என்ற முறையிலும் மெச்சிப் பாராட்டுகின்றேன்.

கலாநிதி பண்டிதமணி அவர்களின் இலக்கியப் புலமை பற்றியோ, சைவ அறிவைப் பற்றியோ எழுதுவதற்கும் பாராட்டுவதற்கும் நான் யார்? எனினும் இப் பெரியார் கையாளும் முறையினையும் காட்டும் வழியினையும் என்னுல் பாராட்டாமல் இருக்கவேமுடியாது. முன்னொரு காலம் மக்களுக்குப் போதிய அளவில் ஓய்வு இருந்தது. சுற்றி வளைத்து எழுதவோ அவ்வண்ணம் எழுதியுள்ள நூல்களைப் படிக்கவோ நேரம் இருந்தது; அதுதான் இலக்கியம், இலக்கிய மரபு என்றெல்லாம் பண்டிதர்மார் கூறுவர். ஆனுல் இன்று செலவிட நேரமுளதோ? சுருக்கத்தில் ஒரு தனி அழகின்றோ? இரண்டொரு சொற்களில் கருத்தொன்றைத் தெரிவிப்பதால் இலக்கியச் செவ்விக்குக் கேடுண்டோ? பண்டிதமணி அவர்களின் 'சமயக் கட்டுரைகள்' எனப் பெயரிட்ட அரிய நூலினைப் படித்தபோது இத்தகைய இறுக்கியிறுக்கி எழுதியுள்ள கருத்துக்கள் பல கண்டு மகிழ்வுற்றேன். எடுத்துக்காட்டாக, இவற்றுள் சிலவற்றை இங்கு தருகின்றேன்.

'இராவணன் அழுதான்; வாசீகர் இரங்கினர்.'

'அவன் குணி; அவள் குணம்.'

'காமியம் வேறு; நிஷ்காமியம் வேறு. காமியம் தரும தளத்திற் செய்வது; தருமம் திருவருளின் குறிப்பு.'

இந்நூலினைப் படித்தபோது எனது பள்ளிக்கூடப் படிப்பு ஞாபகத்திற்கு வந்தது. கேம்பிறிட்ஜ் சிரேஷ்ட பரீட்சைக்கு உரோமாபுரி தளபதி ஜூலியஸ் சீசர் என்பான் இலத்தீன் மொழியில் இயற்றிய ''பிரெஞ்சு நாட்டுப் பழங்குடி மக்களின் புரட்சி அடக்கின போர்'' பாடப்புத்தகமாக இருந்தது. இந்தப் புரட்சி நிகழ்ந்த அதேவேளை உரோமாபுரி ஆதிக்கத்தின் கீழிருந்த பிரித்தானியாவிலும் புரட்சியொன்று வெடிக்கலாயிற்று; அதனை அடக்கும் பொருட்டுத் தளபதி சீசர் அங்கு அனுப்பப்பட்டான். சீசர் வந்த வேலையினை முடித்துக்கொண்டு, மெழுகுப்படலமொன்றில் எழுத்தாணியால்

'வந்தேன், கண்டேன், அடக்கினேன்.'

என்ற செய்தியை எழுதியனுப்பினான். இதனைப் பண்டிதமணி அவர்களின் வாக்கியங்களுடன் ஒப்பிடுக. சுருக்கத்திலும் செறிவிலும் தனியழகொன்றின்றே என எமது இலக்கியக் கர்த்தாக்களிடம் கேட்க விரும்புகின்றேன். நூலொன்றிலே எல்லா வாக்கியங்களும் இவ் வண்ணம் சுருக்கமாக அமையவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் அதி முக்கியமான கருத்தொன்றினைத் தெரிவிக்க வேண்டிய இடத்து, பண்டிதமணி அவர்களின் இலக்கியப் படைப்பிலிருக்கிறதுபோல, எவ்வளவு சுருக்கமாக வாக்கியம் அமைகிறதோ அவ்வளவு பலமாகக் கருத்துப் படியும். மேலும், கருத்து மறக்கப்படவுமாட்டாது, அதை மறைத்து வைக்கவும் முடியாது.

1930 ஆம் ஆண்டளவில் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நான் கல்வி பயின்று வந்த காலத்தில், இங்கிலாந்தின் பிரதமராக இருந்த ஸ்ரான்லி பால்ட்வின் என்பவர் பல்கலைக் கழக வேந்தராக நியமிக்கப்பட்டு, பதவியேற்று, எமக்கு அளித்துள்ள பேருரையொன்றிலே பண்டைய கிரேக்க, உரோம எழுத்தாளர் மகத்தான விடயங்களைச் சின்னஞ்சிறு வாக்கியங்களால் எடுத்துரைத்தனர் என்றும், ஆனால், இன்று அதே கருத்துக்களைத் தெரிவித்தற்குப் பல நீண்ட வாக்கியங்கள் வேண்டியதாயிற்றே என்றும் கூறி வருந்தினர். அதே முறையினைக் கையாளும் பண்டிதமணி அவர்களை எமது எழுத்தாளர்கள் பின்பற்றுவரோ?

பண்டிதமணி அவர்கள் ஒரு சிந்தனைப் பட்டறையும் ஞானக் களஞ்சியமும் ஆவர். 1961இல் இப்பெரியாரின் 'சமயக் கட்டுரைகள்' எனப் பெயரிட்ட நூலின் வெளியீட்டு விழா மலருக்கெனக் கட்டுரை ஒன்றினை வரைந்து அனுப்பும்படி பண்டிதமணி அவர்களின் புத்தக வெளியீட்டுச் சபையினர் என்னைப் பணித்தனர். அதுவரை நான் பண்டிதமணி அவர்களை நேரில் கண்டதேயில்லை. ஆனால் இந்நூலில் உள்ளடக்கியுள்ள அவரது புகைப்படப் பிரதியினைப் பார்த்ததும் கேம்பிறிட்ஜ் கல்லூரி ஒன்றில் நான் கண்ட பண்டைக்கால கிரேக்க தத்துவஞானி சோக்கிரத்தீஸ் என்பானின் உருவ வரைப் படம் ஒன்று ஞாபகத்துக்கு வந்துள்ளது: இவ்விரு படங்களுக்குமிடையிலான ஒற்றுமை கண்டு வியப்புற்றேன். ஒற்றுமை அத்துடன் நிற்கவேயில்லை. கருத்திலும் கருத்தைத் தெரிவிக்குமிடத்துக் கையாளப் பட்ட முறையிலும் இவ்விரு மேதைகளுக்கிடையே ஒற்றுமை. பண்டிதமணி அவர்களின் நூலிலும் சோக்கிறத்தீசின் மாணாக்கன் பிளேற்றோ என்பானின் 'அரசியல்' என்னும் நூலில் விவரமாகக் கூறப்பட்டுள்ள சோக்கிரத்தீசின் சம்பாஷணைகளிலும் வினாக்கள் அடுக்கி அடுக்கியும் விடைகள் இறுக்கி இறுக்கியும் வரும்.

பண்டிதமணி அவர்களின் கருத்துக்களுக்கும் உரோமாபுரி மன்னரின் அன்ரோனைன் வரிசையில் இறுதித் தோன்றலாகிய மார்க்கஸ் அவுரீலியசின் 'ஆத்மசிந்தனை' என்னும் நூலிலுள்ள கருத்துக்களுக்கும் இடையேயும் ஒற்றுமையிருக்கின்றது. இன தேச கால மத பேதம் எதுவாகிலும் மேதைகள் அதே விடயங்கள் ஆய்வர்; கிட்டத்தட்ட அதே முடிவுக்கு வருவர் என்பதே துணிபு.

பண்டிதமணி அவர்கள் நாவலர் குரு—சீடர் பரம்பரை வழி வந்தவர். நாவலர் பெருமான் பக்தி மார்க்கம் சென்றவர்; பண்டிதமணி அவர்களோ ஞானபாதத்தைக் கடைப்பிடித்தவராவர். பண்டிதமணி அவர்கள் பொதுநெறியாம் திருக்குறளைக் கசடறக் கற்றுணர்ந்து அதற்கேற்ப ஒழுகி வருபவர்; நீலகண்டரினது பாடியத்தின் செந்திநதையர் தமிழாக்கத்தையும் சிவஞானபோதம் சித்தியார் முதலாய ஞானப் பனுவல்களைக் கற்றுத் தெளிந்தவர். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஹே. சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய ஆன்மவிசாரம் எனப் பெயரிட்ட நூலால் பெரிதும் இயக்கி வைக்கப்பட்டவர். திருநெல்வேலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், தனிமையில் மிகச் சிறந்த தத்துவ ஞானியாகவும் விளங்கிய கைலாசபதியின் ஆப்த நண்பராக இருந்தவர்; ஆகவே பண்டிதமணி அவர்கள் ஞான வழி கடைப்பிடித்தது வியப்பன்று.

சமய வாழ்வில் முதற்படி கர்மயோகம்—சுயதர்மம் உணர்ந்து அதன்படி ஒழுகுதல்; ராஜயோகம் உச்சப்படியில் இருப்பது. இவ்விரண்டிற்கும் இடையே பக்தியோகமும் ஞான யோகமும். இந்த வரிசைக் கிரமத்தை உணராது எம்மிற் பலர் இன்று பக்தியையோ, ஞானத்தையோ கடைப்பிடித்து ஒழுகி வருகின்றனர். இதன் வழி வருவது கேடு. பல இன்னல்களுக்கு ஆளாகிவிட்டோம். கர்மயோகம் எம்மைப் புனிதமாக்கும். புனிதமான பின்னரேதான் பக்தி வழி செல்ல நாம் தகுதியுள்ளவர்களாகிறோம். இதனைப் பண்டிதமணி அவர்கள் கந்தபுராணத் திருப்பாடலொன்று மூலம் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

'முந்தொரு காலத்தில் மூவுலகந் தன்னில்
வந்திடும் உயிர் செய்த வல்வினை அதனாலே
அந்தமில் மறையெல்லாம் அடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரும் மருளுற்றார்'

இதனைத் தொடர்ந்து பிறிதொரு நூலில் பண்டிதமணி அவர்கள் கூறுகிறதாவது

'தேவர்களுக்குப் புலவர்கள் என்பது மற்றொரு பெயர். புலம்—அறிவு. தேவர்களை அசுரர்கள் வருத்தினார்கள்; சிறைப்படுத்தினார்கள். அப்பொழுது புலவர்களாகிய தேவர்கள் அசுரர்களைக் குறை கூறவுமில்லை, மன்றாடவுமில்லை. தாம் தெய்வத்தை மறந்தமையால் நேர்ந்த பலன் அநுபவத்துக்கு வந்திருக்கிறதென்றுணர்ந்து தவத்தை மேற்கொண்டார்கள். பகை பறந்தோடியது. இந்த உண்மையைத் தேவாலயங்கள், வித்தியாலயங்கள், சைவத் தாபனங்கள் என்றிவைகள் உணர்ந்து தெளியுமானால் நம்மை எதிர்நோக்கும் பகைமுகம் இன்முகமாம் என்பது சத்தியம்! சத்தியம்!! மும்முறை சத்தியம்.

இந்திர ராகி ..' என்ற பாடல் கந்தபுராணத்தின் பயன் கூறுகிறது. அப்பயனை அடையும் வழியைப் படிக்கிரமஞ் செய்து காட்டுகிறது 'புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி' என்ற பாட்டு.

'விலக்கியன ஒழிதலும் விதித்தன செய்தலும் ஆக இரு அம்சங்கள் கொண்டது அறம். அதன் மூலவேர் சுவதருமம். உச்சம் 'மனத்துக்கண் மாசிலனாதல்'

இதனையெல்லாம் மறந்து
'நல்ல வழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநாளுந் தருவோம் நாம் சொல்வதைக் கேளும்.'

என்ற அந்தநாள் பாதிரிமார்களினதும் இந்தநாள் கல்வித்தாபனங்களினதும் உபதேசங்களுக்குச் செவிமடுத்து, இன்று அல்லற்படுகிறோம். நாம் உய்யும் வழி யாது? அன்றுஇடுக்கணுற்ற தேவர்மார் தவம்செய்ததுபோல, நாம் இன்று தவம் மேற்கொள்

ளல் வேண்டும். இந்தத் தவம் யாது? பாரதியார் மிகச் சுருக்கமாகக் கூறுகிறுர். 'தன்னைத்தானே அறியவேண்டும்; தன்னைத் தானே அடக்க வேண்டும்; தன்னைத் தானே ஆள வேண்டும்; தன்னைத் தானே உயர்த்தவேண்டும்.' இத்தவம் செய்தற்குக் கந்தபுராணம் உபகாரநூல்; அது மிக்கு நீண்டதாயிற்றே — அதனைப் படித்து ஓதி உணர்ந்து ஒழுக எமது வாழ்நாள் போதியதாகுமா? நாம் இதையிட்டு வருந்த வேண்டியதேயில்லை. எவ்வாறு உபநிடத மாம் பாலிலிருந்து கடைந்தெடுத்த நெய் போல் கீதை விளங்குகிறதோ, அதேபோல் விளங்கும் கந்தபுராணத்தின் சாரமாம் தட்சகாண்டத்துக்குப் பண்டிதமணி அவர்கள் இயற்றியுள்ள அதியற்புத உரையைப் பாராயணஞ்செய்து உய்வோமாக. இதுவே எம்மாற் செய்யக்கூடிய தவம். இவ்வுரையைத் தந்த பரோபகாரியைப் போற்றுவோமாக.

கலாநிதி பண்டிதமணி அவர்கள் நீடூழி வாழ்க!

---

# நாவலருக்குப் பின் பண்டிதமணி

(வித்துவான் F. X. C. நடராசா அவர்கள்)

நல்லைநகர் ஆறுமுகநாவலருக்கு நாவலர்ப்பட்டம் வழங்கியது திருவாவடுதுறை ஆதீனம். பண்டிதமணிக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குகின்றது இலங்கைப் பல்கலைக்கழகம். இருவேறு தாபனங்களால் தம்முள் வேறுபடாத இருவர்க்கு இருவேறு பட்டங்கள் அதுவும் முதன்முதலாக வழங்கப்பட்டுள்ளன. ஆதீனம் முதன்முதலாக அளித்த பட்டம் நாவலர்ப்பட்டம். அதுபோல் தமிழறிஞர்கள் என்ற வகையில் இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதிப் பட்டமும் முதன்மை பெறுகின்றது.

தம்முள் வேறுபடாத இருவர் என்றும். இருவரும் நைட்டிகப் பிரமசாரியர். ஆசாரியர்க்கும் பெற்றேர்க்கும் பணிவிடை செய்துகொண்டு மரணம்வரை பிரமசரியம் பூண்டிருப்பவரே நைட்டிகப் பிரமசாரி. தமிழ் மொழிக்கும், சைவசமயத்திற்கும் இருவரும் தொண்டு செய்தவர்கள். தமிழ் மூலம் சைவம், சைவம் மூலந் தமிழ் என்ற கொள்கையிற் திறம்பாதவர்கள்.

நாவலரும் நல்லாசிரியர் குரு சீட பரம்பரையை ஈழத்திருநாட்டிலே உருவாக்கியவர். பாடசாலைகள் பல நிறுவிய பெருமகன். பெரும் புலவர்கள் பேரறிஞர் பலரைச் சீடர்களாகக் கொண்டவர் நாவலர். பண்டிதமணியும் ஆசிரியர்களுக்கு ஆசிரியராகப் பயிற்றப்பட்ட ஆசிரியர் பலருக்குக் குருமூர்த்தியாக விளங்குகின்றுர். அன்றியும் இன்று யாழ்நகர் பண்டிதர்மார் யாவரும் இவரின் சீடர்களாம்.

நாவலர் பெருமான் பிரசங்கஞ் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். சேய்நாட்டில் மாத்திரமன்று தாய் நாட்டிலும் பிரசங்கமாரி பொழிந்தார். சிறந்த பல மேடைகளை அலங்கரித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ள பெருமை பண்டிதமணிக்குரியதாகும். கருத்துத் தெளிவு, தருக்க அமைதி, சொற்சித்திரம், உணர்ச்சிவேகம், இவை பொலிந்த வண்ணம் பண்டிதமணியின் பேச்சு மிளிரும். இருவரின் பேச்சென்ன எழுத்தென்ன பரிமேலழகரின் சொல்லொழுக்குப்போல் அமைந்திருக்கும். நச்சினுர்க்கினியரின் முரண்பாடு இருக்கவே இருக்காது.

முரண்படும் மக்களை நாவலர் கண்டிக்கத் தவறியது கிடையாது. கண்டிக்க

வேண்டியவர்களைக் கண்டிக்க வேண்டியது மரபு, முகத்தாட்சணியம் பார்க்கவே மாட்டார்கள். சிலேடை சொல்லம்பு, எழுத்தாணி இவர்களிருவரின் கண்டனத்தில் வெகு கூர்மையாகவே இருக்கும்.

நாவலர் பெருமான் சமய நூல்களையும் தமிழ் இலக்கியங்களையும் எழுதியுள்ளார்; பதிப்பித்துள்ளார். இலக்கண நூல்களிற் சிறந்து விளங்குவது இலக்கணச் சுருக்கம். உரை எழுதியுள்ள நூல்கள் பல. இவ்வண்ணம் பண்டிதமணியும் சமய தத்துவக் கட்டுரைகளை எழுதியதன்றி சமய நூல்களையும் ஆக்கியுள்ளார். ஆனால் இவரின் வசன நடை வேறு. நாவலர் வசன நடை கைவந்தவர். பண்டிதமணியோ அவ்வாறான வசன நடையைக் கையாளாது தவில் வித்துவான் பழனி சொட்டிக் காட்டித் தாளம் அறுத்து வாசிப்பது போல் சொற்கள் தனித்தும் சேர்ந்தும் தமிழை மேலும் இனிமை செய்யும்.

ஆறுமுகநாவலரின் திருமுருகாற்றுப் படை உரை நனி சிறந்தது. நச்சினார்க்கினியரின் உரையினையும் விஞ்சியது; தெளிவும், விளக்கமும் பொருந்தியது. அஃதினை ஒப்பப் பண்டிதமணியவர்களின் கந்தபுராணம் — தக்ஷ காண்டம் உரை என்றும் நின்று ஒளிபரப்பக் கூடியது.

நாவலர் பெருமான் சைவசித்தாந்தி, சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள் பல தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும் செய்துள்ளார். தாய்நாட்டிற் பல இடங்களில் வரவேற்பு உபசாரங்கள் அளிக்கப்பட்டன. பண்டிதமணியும் நல்லாசிரியராகப் பணி புரிந்து இளைப்பாறிய காலமெல்லாம் சித்தாந்த விடயங்கள் பற்றிப் பத்திரிகைகளில் வாரந்தோறும் எழுதிவரலாயினர்.

கந்தபுராணம் யாழ்ப்பாணத்தில் பெருஞ் செல்வாக்குடையது. படித்தவர்கள் படியாதவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் இவர்கள் யாவருக்கும் அப்புராணத்திற் பெருமதிப்பு. இதற்குக் காரணம் நாவலர் பரம்பரை. அப்பரம்பரையில் வந்தவர் தான் பண்டிதமணி. கந்தபுராணம் பண்டிதமணியின் உயிர் நாடி.

நாவலர் பரம்பரையில் வந்த ஒருவருக்கு, சிறந்த தமிழறிஞருக்கு, நல்ல பேச்சாளருக்கு, உரையாசிரியருக்கு, எழுத்தாளருக்கு, சிந்தனையாளருக்கு, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளருக்கு, ஈழவளத திருநாட்டில் தமிழ் என்னும்போது தமிழர்கள் அத்தனைபேருக்கும் கண்முன்னே நிற்பவருக்குக் கலாநிதிப்பட்டம் - அதுவும் இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்குகின்ற தென்றல் யாவருக்கும் மனங்குளிரும்; மகிழ்ச்சி பொங்கும். இதுவரை நடவாத சம்பவமென்று பேராறுதலுமுண்டாகும்.

*கலாநிதி பண்டிதமணி நீடுவாழ்க;*
*தமிழ் வாழ்க.*

---

# பல்கலைக்கழகம் பக்குவம் பெற்றது

**(கோவை வாணன் அ. வி. மயில்வாகனம் அவர்கள்)**

ஒருவர் பேசும் பேச்சிலே ஆழ்ந்த உண்மைகள் பொதிந்திருக்கலாம். அதனைக் கேட்போர் மனத்திலே பதியவும் செய்யலாம். ஆனால் அதனைப் பல நாட் பதித்திருக்க ஒரு பசை பூசி அழுத்தி விட்டால் அது உறுதியாகப் பதிந்துவிடும். இந்த உபாயத்தைக் கையாள முதற்கண் ஆழ்ந்த அறிவு வேண்டும். பல துறைகளிலும் சென்று ஒப்புமை வேற்றுமை கண்டு அறிவை அணிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பின்பு ஆணித்தரமாக உறுத்தவேண்டியதை ஒரு நகைச்சுவை வாகனத்தில் ஏற்றி வெளியே கொண்டு வரவேண்டும். அப்போது அதனை ஏற்

போர் மனது பண்படுத்தப்பட்ட வயல் போல் ஆயத்தமாக இருக்கும். இப்படிப் பட்ட கலை கைவந்தவர்களை ஆக ஒரு விரல்விட்டே எண்ணலாம்.

இருக்க 1941ஆம் ஆண்டில் ஒரு நாள் 'நான் பண்டிதமணியின் மாணவன்' என்று ஒரு ஆசிரியர் மகாநாட்டில் வெட்கமில்லாமல் சொல்லிவிட்டேன். பல ஆசிரியர் மார் தலைதூக்கி என்னை ஏறிட்டுப் பார்த்தார்கள். எப்படியென்றால்,

1933இலே 'இலண்டன் இன்ரர் சயன்ஸ்' பரீட்சையில் தேறிவிட்டுக் கிராமத்திலுள்ள நாவலர் பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரானேன். கல்வி உளநூல் தமிழறிவு சிறிதுமே இல்லை. பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கென இலவசமாய் அதிபர் சுவாமிநாதனும் உப அதிபர் கைலாசபதியும் பண்டிதமணியும் வகுப்பு நடாத்துகிறார்கள் என்று அறிந்து ஏகலைவனைப்போல நானும் உட்புகுந்து ஒரு மூலையில் இருந்துகொண்டேன். அந்த வகுப்பில் பண்டிதர்கள் பாலபண்டிதர்கள் பலர் இருக்கின்றார்கள். நான் தான் ஒரு பேதை. உளநூல் கல்வி போன்றன ஆங்கில நூல்களில் பரக்க உண்டு. அங்கே கற்றுக்கொள்ளலாம். ஆனால் இலக்கியத்திலுள்ள நுட்பங்களை நுணுகி ஆராயவும் அறியவும் சுவைக்கவும் ஒரு பண்டிதமணியைத்தான் நாடவேண்டும்.

எங்குறை வதித்தொழில்
இயற்றுபவள் என்றான்
சங்குறை சரத்தொடு
தனிச்சிலை தரித்தான்

என்பதை யாரும் விளக்கலாம். ஆனால் அதை இரசிக்க முடியாது. முடியாவிட்டால் பாட்டிற்கு உயிரில்லை என்றாகிவிடும். பாடிய புலவனுமே சர்வ சாதாரண— யாப்பிலக்கணக் கொத்தன் ஆகிவிடுவான். அதற்குப் பண்டிதமணி இடங்கொடுக்க மாட்டார். அப்படியானால் புலவனையும் பாட்டையும் கொலைசெய்த குற்றத்துக்கு அவரும் அவருடைய மாணவர்களும் பாத்திரராய் விடுவார்களே. ஆனால் அவரோ பிராணவாயு.

இனிச் சைவசித்தாந்தச் சிக்கல்களை விடுவிக்க இராமானுஜர் முதலாகத் திருவிளங்கம் ஈறாகப் பலர் பாடுபட்டிருக்கின்றனர். இன்னும் சிலர் சிறிது சிறிதாக ஒரு நூற்பந்தைப் பூனைக்குட்டி முன்பு காலால் தட்டித் தட்டிக் குலைத்தாற் போலக் குலைக்கின்றனர். அது மேலும் சிக்கலைத் தந்துகொண்டே இருக்கின்றது.

என்போன்றவர்களுக்குப் பண்டிதமணியின் கடுகுப் பிரமாணச் சமயக் கட்டுரைகள் அர்த்தமுள்ள இந்துமதம் போல சித்தாந்தம் என்ன பேசுகின்றது என்று துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஒரு நூலுக்கு மட்டுமே பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னமே பண்டிதமணிக்குப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் தமிழ்ச் சமூகம் தன் நன்றிக் கடனைச் சூட்டோடு சூடாக ஆற்றியது என்று சொல்லியிருக்கலாம்.

இந்த நூலினுள்ளே பண்டிதமணி மறுபிறவி எடுத்துப் பிறிதுமொரு உடம்பு பெற்று நம் மத்தியில் உயிருடன் நன்றாக வாழ்கின்றார் திருமூலர் போலே.

இதனை இப்போதாயினும் நல்ல அறிவு வாய்ந்த ஒரு குழுவினர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் அந்தத் தொண்டு நமது சமயம் இன்னது, அதன் விருத்தி இன்னது; அடிப்படை இன்னது என்று பல உலகப் புகழ் பெற்ற அறிவுடையோர் அறிந்துகொள்ள முடியும். பல நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பட்டம் வழங்கித் தம்மையே கௌரவிக்க வரிசைகட்டி முன் வரும். வேறு உலக மொழிகளிலும் பெயர்த்து இதனூடாகத் தம்முடைய சமய தத்துவங்களைத் தம்முடைய கண்கொண்டு தம்முடைய கோணங்களிலிருந்து ஆராய முன்வரும். அப்பொழுது சைவம் சிறக்கும்.

நிற்க நம்முடைய பல்கலைக் கழகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் இப்பட்டமளிப்பில் எடுத்த முயற்சியைத் தமிழ்ச் சமூகம் நன்கறியும். எனினும் இவ்வைபவம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டியதென்பது சிறியேன் கருத்து. ஆதலாற்றான் நமது பல்கலைக்கழகம் பதினைந்து ஆண்டுகள் கழிந்ததும் பண்டிதமணியின் அறிவாழத்தையும் கூரிய புத்தியையும் விளக்கும் ஆற்றலையும் அறிந்துகொள்ளும் பக்குவம் பெற்றுவிட்டது என்கின்றேன்.

இதனால் பல்கலைக் கழகமே முதற்கண் பெருமையைத் தனக்கு ஈட்டிக் கொண்டுள்ளது.

கலாநிதி பண்டிதமணியும், அவர் உழைப்பும் வாழ்க.

# LEAVIS OF TAMIL LITERATURE

N. SABARATNAM
Retired Principal, Jaffna Hindu College.

For more than fifty years Panditha-mani S. Kanapathippillai bestrode the wide realms of Tamil Literature like a Colossus and has produced a generation of scholars who pride themselves in belonging to the Navalar Tradition.

It is difficult to assess the nature of Pandithamani's achievements without at the same time discussing Srila Sri Arumuga Navalar's contribution to Tamil. Navalar was indeed the Father of Tamil Prose and as critic and commentator he restored to Tamil Literature several standard works that were languishing as moth eaten Ola Manuscripts.

Very early in life even as student Pandithamani seemed to have made the decision to dedicate his entire life to the cause of Tamil Literature. His success at the Pandit examination of the ancient Tamil Sangam of Madurai at the early age of 26 is an indication of this decision. For the last fifty years he has been in the forefront among Tamil poets and scholars and has earned the esteem of the Tamil Literary world that conferred on him the title of 'Pandithamani' — a gem among scholars. It is therefore in the fitness of things that the University of Sri Lanka has honoured the savant with the degree of Doctor of Letters. In honouring Pandithamani Kanapathippillai the University of Sri Lanka honours the Great Tradition of Tamil Learning, Literary criticism and Saiva Siddanta set up by the Champion Reformer of the Hindus who ushered in the Tamil Renaissance-the Great Navalar.

Pandithamani has made a profound and lasting impression on all those who are seriously interested in Tamil literature and criticism. Some of the analyses contained in many of his works like 'Illakiya Vazhi', 'Bharatha Navamanikal', 'Kandapurana Pothanai', 'Kamba Ramayana Kaadchi' are models of practical criticism. He is unique among Tamil critics in that he regards this form of close and attentive reading as central to his critical practice.

It would not appear incongruous if one were reminded of the late Dr. F. R. Leavis of Cambridge whose canons of criticism seem to have unwittingly inspired this self made scholar; for it was Pandithamani's insistent creed that in dealing with poetry and poets the rule of the critic should be to work as much as possible in terms of particular analysis of poems or passages and to say nothing that cannot be related to judgments about producible texts.

Like Leavis, Pandithamani **swore by the creed that the moral sensibility of a writer as perhaps the most important component of his artistic personality.** He became a controversial figure when he over-emphasized this creed; and his excessive religious outlook seems to have courted adverse criticism when he denied the merit of literary excellence to standard works that deviated from the traditional norm of Divinity in the hero.

By his attack on Silapadikaram the [redacted] heroine goddess Kannaki enjoyed for long the incarnation myth was successfully swept off her pedestal by the rapier thrust of his critical insight.

The same could be said of his bold stand that genuine poetry of the four Saiva Saints who sang the Thevarams and Thiruvasagam was different from the mellifluous poems of Ramalinga Adigal. This outlook is basic to his abnormal attachment to Kandapuranam. Indeed his 'Magnum Opus' is his epoch making commentary on "Daksha Kandam" —an achievement that introduced him to the Halls of Learning at Peradeniya and earned for him a place among the foremost scholars of all time.

A highly respected teacher, an inspired speaker whose subtle blend of idealism and sarcasm kept huge audiences spell-bound for hours, he **had** an infinite capacity to infuse his students and readers **with a new critical consciousness** and inspire them to pursue the study of Tamil Poetry **as a serious discipline**.

A confirmed celibate, that his name implies, he is a great generator of Wisdom like Lord Ganapathi; but in his 80th year a full blown bearded sage that he is, his twin Loves-Tamil Literature and Saiva Siddhanta like Valli and Deivayanai of Lord Subramania make him the most popular 'deity' at almost every function which is incomplete without his blessings.

---

# எங்கள் பண்டிதமணி

# தமிழைக் கையாளுவதில் தனிநடை கைவரப்பெற்றவர்

*(கி. லக்ஷ்மணன், வித்தியாதிபதி கல்வி அமைச்சு)*

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்குக் கௌரவ கலாநிதிப் (டொக்டர்) பட்டம் வழங்கப்படுவது தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கின்றது. குறிப்பாக அவருடைய ஆற்றலையும் அவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளையும் நன்கு அறிந்தவர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

1938 ஆம் ஆண்டளவில் நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவனாயிருந்த காலத்திலேயே அவருடைய இலக்கியப் பேச்சுக்களைக் கேட்பதிலே ஆர்வமுடையவனாயிருந்தேன். மாணவனாயிருந்த நான் அவரை எங்கள் கல்லூரிக்கு அழைத்துச் சென்றதும் அவர் பேசுவதைக் கேட்கும் பொருட்டு 'ஒற்லி' மண்டபத்தில் மக்கள் நிறைந்திருந்ததும் அவருடைய பேச்சின் சுவையும் இன்றும் என் மனதிலே பசுமையான நினைவுகளாக உள்ளன.

அக்காலத்தில் பண்டிதமணி இலக்கியத்தில் மட்டுமன்றி அரசியலிலும் ஓரளவு ஈடுபட்டிருந்தார். காந்திய இயக்கத்திலேயே அவர் ஈடுபட்டிருந்தார். கலாசார சமய விருத்திக்குச் சமஸ்கிருதமும், தேசிய ஒற்றுமைக்குச் சிங்களமும் பயன்படுமெனப் பண்டிதமணி அக்காலத்திலேயே கருதினார்.

நாற்பது ஆண்டுகள் கழித்து எத்தனையோ இன்னல்களுக்கும் வேதனைகளுக்கும் பின் இன்றைய அரசாங்கம் இணைப்பு மொழி மூலம் ஏற்படுத்த விழையும் தேசிய ஒற்றுமையைப் பற்றி [Nationl Intergration through link languages] அன்றே தமது தீர்க்கதரிசனத்தால் சிந்தித்த பெருமை பண்டிதமணிக்கு உரியது.

அவர்கள் அதனைச் சிந்தித்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை; செயற்படுத்தவும் தொடங்கினார்கள். தாம் கடமையாற்

றிய திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் சம்ஸ்கிருதத்துக்கும், சிங்களத்துக்கும் ஒவ்வொரு வார இறுதியிலும் வகுப்புகள் நடத்த ஒழுங்குகள் செய்தார். அந்த வகுப்புகளுக்கு வட்டுக்கோட்டையிலிருந்து நானும் என் நண்பர் சிலரும் போய் வந்தமை இன்றும் என் நினைவிலிருக்கின்றது.

காலப்போக்கிலே பண்டிதமணி அவர்கள் தமது இலக்கிய ஈடுபாட்டைக் குறைத்து முழுக்கவனத்தையும் படிப்படியாகச் சமயத் துறைக்கும், தத்துவஞானத் துறைக்கும் திருப்பத் தொடங்கினர்கள்.

1951 ஆம் ஆண்டு காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் தத்துவ ஞானத்திலே நான் எம். ஏ. பட்டம் பெற்றுக்கொண்டு இலங்கை திரும்பினேன். திரும்பியதும் இலங்கை வானொலி அதிகாரிகளின் வேண்டுகோளின்படி இரு வாரத்துக்கு ஒருமுறை இந்திய தத்துவஞானம் பற்றி வானொலியிலே பேச்சுக்களை நிகழ்த்தி வந்தேன். அப்பேச்சுக்களைப் பற்றிப் பண்டிதமணிக்கும் அறிவித்தேன். அவர்கள் ஒவ்வொரு பேச்சையும் மிக்க கவனமாகக் கேட்டுத் தன் அபிப்பிராயங்களை எழுதி அறிவிப்பார். அவருடைய அபிப்பிராயங்கள் அனைத்தும் மிகவும் பொருத்தமானவையாயும் கருத்தாழம் மிக்கனவாயுமிருக்கும். அவை என் சிந்தனையைத் தூண்டின. என் பேச்சுக்களை மேலும் தொடர்ந்து திறம்பட அமைப்பதற்கு அவை பல வகையிலும் துணையாயிருந்தன. மாதமிருமுறை பண்டிதமணி எழுதிய கடிதங்களிலே இடம்பெற்ற கருத்துக்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து வரிசைப்படுத்தினலே இந்திய தத்துவ ஞானம் பற்றி அவர் கொண்டுள்ள முக்கியமான கருத்துக்களை வெளியிட்டு விடலாமென இன்று என் மனதிலே தோன்றுகின்றது.

பண்டிதமணி அவர்களின் மனத்தில் நீண்ட காலமாக இடம் பிடித்திருப்பனவற்றுள் மூன்று விஷயங்கள் இங்கு குறிப்பிடுவோம்.

முதலாவது:- அவரோடு விரிவுரையாளராகக் கடமையாற்றிய கைலாசபதி அவர்கள் எழுதிவைத்துச் சென்ற சைவ சித்தாந்த நுட்பங்களுக்கு விளக்கங் கொடுப்பது. கைலாசபதி அவர்கள் அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு மகாஞானி என்பதும், அவர் எழுதி வைத்திருப்பனவற்றுள் சாதாரணமானவர்களுக்கு எட்டாத பெரும் உண்மைகள் பொதிந்திருக்கின்றன என்பதும், பண்டிதமணி அவர்களுடைய திடமான நம்பிக்கை. கைலாசபதி அவர்கள் எழுதி வைத்தவை எவருக்கும் விளங்காத புதிராகவேயுள்ளன. அவற்றை எப்படியாவது விளங்கி மற்றவர்களுக்கும் விளக்குவதில் பண்டிதமணி அவர்கள் பல காலமாக ஈடுபட்டு வருகின்றுர்.

இரண்டாவது:- ஆறுமுகநாவலரைப் பற்றி, முக்கியமாக அவருடைய இந்திய சம்பவங்கள் பற்றி, இன்னும் கிடையாத விபரங்களைச் சேகரிப்பது. அண்மையிலே காலஞ்சென்ற கலாநிதி தனஞ்சயராசசிங்கம் அவர்கள் ஆறுமுகநாவலரைப் பற்றி இதுவரைகிடையாத விபரங்களைச் சேகரிக்கத் தொடங்கிய போது பண்டிதமணி மிகவும் உற்சாகமடைந்தவராகக் காணப்பட்டனர்.

மூன்றுவது:- பிரம்ம சூத்திரம் உபநிஷதம் ஆகியவற்றின் உட்கிடை என்ன என்பதை உரைகாரர்களின் துணையை நாடாமலே அறிந்து கொள்வது. பிரம்ம சூத்திரம் உபநிஷதம் ஆகியவற்றுக்குச் சங்கரர் ராமானுஜர் ஆகிய பாஷ்யகாரர் (உரைகாரர்) தங்களுடைய கருத்துகளையே மிகுதியும் ஏற்றி விளக்கம் கொடுத்திருக்கின்றனர் என்பதே பண்டிதமணி அவர்களின் உறுதியானகருத்தெனத் தோன்றுகின்றது. இவர்களுடைய பாஷ்யங்களிலிருந்து (விரிவுரை) விலகிநின்று இந்த மூலதத்துவ நூல்களை ஆராய்ந்து உண்மையில் அவை கூறுவது வேதாந்தமா, சித்தாந்தமா என்பதைக் கண்டுபிடிக்கவே பண்டிதமணி அவர்கள் நீண்டகாலமாக முயன்றுகொண்டிருக்கின்றுர்.

என் கடமை காரணமாக அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது பண்டிதமணியிடமும் போயிருந்தேன். அச்சமயம் அவர் என்னைக் கேட்டுக்கொண்ட விஷயம் ஒன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர் என்னைக் கேட்டுக் கொண்ட விஷயம் மேலே நான் குறிப்பிட்ட அவருடைய அக்கறையைப் புலப்படுத்துவதாகும். மகா வாக்கியங்களைப் பற்றி வானொலியிலே இரண்டு பேச்சுக்கள் அல்லது ஒரு பேச்சாவது நிகழ்த்துமாறு அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். மகாவாக்கியங்களைப் பற்றிப் பேசுவதாயின் பிரம்ம சூத்திரம் உபநிஷதம் ஆகியன குறிப்பது வேதாந்தமா சித்தாந்தமா என்பதை ஆராய்வது தவிர்க்க முடியாததாகும்.

பண்டிதமணி அவர்கள் ஈடிணையற்ற மதிநுட்பம் பெற்றவர். தமிழைக்கையாளுவதிலே தமக்கென ஒரு தனி நடை கைவரப் பெற்றவர். அவர் எந்தச் சொற்களைக் கையாள எடுத்தாலும் அவர் கையிலே அந்தச் சொற்களுக்கு எங்கிருந்தோ எவ்வாறோ ஓர் அசாதாரண ஆற்றல் வந்து சேர்ந்துவிடுகின்றது. அவர் எழுதும் ஒவ்வொரு விஷயத்திலும் விஷயத்தைக் கையாளும் முறையிலே ஒரு புதுமை இருக்கும். நடையிலே வேகமும் தாக்கமும் இருக்கும். கருத்திலே ஆழம் இருக்கும். அவர் வழங்கிய முன்னுரை, ஆசியுரை ஆகியவற்றிலுள்ள கருத்துக்கள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து அச்சிட்டாலே அரிய பொக்ஷம் ஒன்று கிடைத்துவிடும். பண்டிதமணி அவர்களின் அறிவையும் ஆற்றலையும் தமிழுலகம் இன்னும் போதிய அளவு பயன்படுத்தவில்லையென்றே தோன்றுகின்றது.

பண்டிதமணி அவர்களின் காலத்திலே வாழவும், அவரோடு பழகவும், அவருடைய உயர்ந்த இலட்சியங்களை அறிந்து பாராட்டவும் வாய்ப்புப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் என்ற எண்ணமே அவர்கள் கௌரவிக்கப்படும் இந்த நன்னாளிலே மேலோங்குகின்றது.

---

# நான் கண்ட பண்டிதமணி

(மருத்துவப் பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள்)

## முதற் சந்திப்பு:

பண்டிதமணி கணபதிப்பிள்ளையைப் பற்றிக் கேள்விப்பட்டேன். 1957 ஆம் ஆண்டுவரை நான் அவரைக் கண்டதில்லை. 1957ஆம் ஆண்டு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினர் பங்கு பற்றிய ஒரு பிரசாரக் கூட்டத்தில் அவரைக் காணும் வாய்ப்பும் அவரின் ஆழ்ந்து சிந்தித்த கருத்துக்களை அறியும் சந்தர்ப்பமும் கிடைத்தது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆழ்ந்த யோசனையின் பின் உறுப்புக் கல்லூரிகள் கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவத் திட்டமிடப்பட்டது. கலை, பொதுவிஞ்ஞானக் கல்லூரிகள் மட்டக்களப்பிலும் வைத்தியம் சட்டம் போதிக்கும் கல்லூரிகள் யாழ்ப்பாணத்திலும் விவசாயம் வவுனியாவிலும், பொறியியல் திருக்கோணமலையிலும் எனத்தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சமயச் சார்புள்ள கல்லூரிகளை பொதுவிஞ்ஞானம் சமயக் கல்வி ஆகியவற்றைப் புகட்டுவதில் மிகத் தரமுடையனவாக்கி இக்கல்லூரிகளை பல்கலைக் கழகத்துடன் இணைப்புக் கல்லூரிகளாக அமையவும் வாய்ப்பளித்தது.

பண்டிதமணி அவர்கள் இக்கட்டத்தில் தனது முழு ஆதரவையும், எங்கள்

இயக்கத்துக்கு நல்கினுர்: தகுந்த காரணங்களையும் ஆழ்ந்த கருத்துக்களையும் எடுத்துக் கூறினுர்.

## இரண்டாம் சந்திப்பு:

1966ஆம் ஆண்டு நான் எனது வீட்டு விருந்தையில் இருக்கும்போது நாலு பண்டிதர்கள் வந்தார்கள். பண்டிதமணி எனக்கு அழைப்பு விடுத்துள்ளதாகச் சொன்னுர்கள். நான் அவரின் அன்புக் கட்டளைக்கு அடங்கி அவர் இல்லம் சென்றேன். அமரச்சொன்னுர். கோப்பி நீர் குடிக்கத் தந்தார். அழைத்த காரணம் பற்றி விசாரித்தேன். இரண்டு மூன்றடி உயரமுள்ள அப்பியாசக் குறிப்புப் புத்தகங்கள் அடங்கிய கட்டைக் காட்டினுர். தனக்குற்ற நோய் காரணமாகக் கடவுளுடன் தக்ஷகாண்டத்துக்கு உரை எழுதுவதாக ஓர் ஒப்பந்தம் (நேர்த்திக்கடன்) செய்துகொண்டார் என்பது தெரியவந்தது. தக்ஷகாண்டத்துக்கு உரையும் எழுதி முடிந்தது; நோயும் மாறியது. இதை ஒரு தெய்வப் பணியாகத் தான் ஆற்றிய செயல் எனக் கூறினுர். தான் ஒரு பெரிய உரையாசிரியர் என்பதை உலகிற்குக் காட்டுவதற்காக அவர் எழுதவில்லை.

அச்சமயம் என் மனதில் ஓர் எண்ணம் தெய்வாதீனமாகத் தோன்றியது. 'இது ஒரு நல்ல வாய்ப்பு. இதைப்பற்றி நாங்கள் நன்கு யோசிக்கத்தான் வேண்டும்' என்று எண்ணினேன்.

இந்நிலையில் ரூபா 25 முற்பணத்துடன் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் கடும் உழைப்பினுல் குன்றின் நுனி மட்டமாக்கப்பட்டு அத்திவாரம் வெட்டப்பட்டு பொருள் குறைவால் தொடர்ந்து திருப்பணி நடைபெறுமல் இருக்கும் குறிஞ்சிக் குமரன் ஆலயமும் நினைவுக்கு வந்தது. பண்டிதமணி உரையை அச்சேற்றி இலங்கைப் பல்கலைக்கழகத்தில் என்றும் நிகழாத பெருவிழா எடுத்து நூலை அரங்கேற்றி அவரின் சைவசமய அறிவிற்கும் கல்வியறிவிற்கும் ஒரு மதிப்பைக் கொடுக்க வேண்டும் என்று யோசித்தேன்.

''மூன்று மாத காலத்துள் தக்ஷகாண்ட உரையை அழகாய் அச்சேற்றித் தருவீர்களா'' எனக் கேட்டேன். அவர்கள் செய்வோமென உடன்பட்டனர். பின்னர் பேராசிரியர் செல்வநாயகத்தையும், பேராசிரியர் கனகசபாபதியவர்களையும் பல்கலைக்கழக இந்து மன்றத்தையும் மூன்று மாத காலத்தில் ஓர் பல்கலைக் கழகப் பெருவிழாவை ஒழுங்குபடுத்தி இவ்வுரையை அரங்கேற்றிப் பண்டிதமணியை கௌரவிக்க முடியுமா எனக் கேட்டேன். அவர்கள் மகிழ்ச்சியுடன் செய்து தருவோமென உடன்பட்டனர். 'அஞ்சற்க' என்றனர்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் செல்வநாயகத்தின் தலைமையில் பேராசிரியர் மயில்வாகனம், பேராசிரியர் சிவப்பிரகாசபிள்ளை, பேராசிரியர் கனகசபாபதி மற்றும் உதவி விரிவுரையாளர்களின் பெருமுயற்சியாலும் இக்குறுகியகால எல்லைக்குள் நூலை அச்சேற்றி கிருஷ்ணனந்த சிவத்தின் தலைமையில் இயங்கும் இந்து மன்றத்தினரின் கடும் உழைப்பினுலும் குறுகிய கால எல்லையுள் ஒரு வகையிலும் குறைவிலாத ஒரு பெருவிழாவை எடுத்து உரை நூலை ஆனையின்மேல் சிறுப்பர் திரு. கனகராசா அவர்கள் இருகைகளிலும் ஏந்திவரத் தேவார, வேத பாராயணத்துடன மங்கள வாத்தியங்கள் முழங்க, கல்விமான்கள் சூழ, தமிழ்நடை நடந்து பண்டிதமணி அவர்கள் அரங்கை அடைந்து வீற்றிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தப் பெருவிழாவினை ஈழத்தின் மூலை முடுக்கில் வாழும் தமிழ்மக்கள் ஒருவர் தவருது வானெலி மூலம் நிமிடத்திற்கு நிமிடம் நிகழ்ச்சிகளையும் பேச்சுக்களையும் கேட்டனர்; மகிழ்ந்தனர். நாட்டில் வாழும் மக்கள் எல்லோரும் பண்டிதமணியைப்பற்றி அன்போடு பேசுவர். தெய்வமகன் எனக் கருதினர். பொருளாதார நிலையில் கூடினவரும் குறைந்தவரும் உற்சாகமுற்றனர்.

பேராதனைக் குன்றத்தில் ஒரு முருகன் கோயில் ஈழத்தவர்களதும், மலைநாட்டுத் தமிழர்களினதும், பேராதனையில் கற்கும்

மாணவர்களினதும் வாழ்வைச் சீர்படுத் தவும் அவசியம் என நன்கு உணர்ந்தனர். தமிழ்ப் பெருமகனுகிய பண்டிதமணி அவர் கள் கந்தபுராண தக்ஷகாண்ட - உரையை இதற்கு எழுதி உதவியதை எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தனர். வாழ்க்கையோடு பின்னியிருக்கும் கந்தபுராணத்தின் சார மாகிய தக்ஷகாண்ட உரைக்கு எடுத்த பெருவிழாவைத் தமிழ்த் தெய்வமாகிய முருகனுச்கு எடுத்த விழாவாக எண்ணி உற்சாகம் உற்றனர். இதனுல் ஆதரவா ளர்கள் மிகுந்தனர். பணமும் குவிந்தது. ஒரு வருட கால எல்லேயில் ஓர் அழகான குறிஞ்சிச்குமரன் கோயில் கம்பீரமாகக் காட்சியளித்தது. இந்த நல் விளேவுக்குக் காரணமாயிருந்தது பண்டிதமணியின் தக்ஷ காண்ட உரையாகும்.

இதனேத் தொடர்ந்து 4-11-68 இல் இலங்கை அரசின் சாகித்திய மண்டலம் அவரின் கல்வி அறிவை மதித்து அவரைக் கௌரவித்துப் பரிசில் வழங்கும்பொழுது தோற்றிய காட்சி எவரையும் ஈர்த்த தொன்றுகும்.

**பண்டிதமணிக்கு**

**முருகன் அருளினவை:**

தமிழுக்கும் சைவத்துக்கும் தொண் டாற்றுவதில் உற்சாகத்தைக் கொடுத் தார். அவரது பணிகளில் கந்தபுராணத் திற்கு உரை எழுதியதே அவரது வாழ்க் கையில் உன்னத பணியாகும். தமிழ் பேசும் உலகில் அவர் அன்பு மிக்க ஒருவர் என்று கற்றோரும் கல்லாதோரும் மதித்து வருகின்றனர். அவரின் மேன்மையும் தொண்டும் ஓங்கி வளர குறிஞ்சிக்குமரன் அவருக்கு மிக நீண்ட வாழ்வை அருளி அவரின் சுகத்தையும் மனப்பலத்தையும் பேணி அவர் தன் சைவத்தமிழ்த் தொண்டை மேலும் மேலும் வளர்ப்ப தற்கு அருள் புரிவாராக.

---

# லக்ஷ்ய கலாநிதி

(பண்டிதை த. வேதநாயகி அவர்கள்)

'லக்ஷ்யம்' என்னும் பதம் தமிழில் இலக்கியம் என்று சொல்லப்படும். நாம் அடைய வேண்டிய பொருள் எதுவோ அது நம் லக்ஷ்யம் ஆகும்.

எங்கள் கலாசாரம் காட்டும் லக்ஷ்யம் பிரமம் எனப்படும் முக்கண் முதல்வரே. 'பிரமம் ஒரு திருமேனி கொண்டு முருகன் என்று வந்தது' எனக் கந்தபுராணங் கூறு கின்றது. பிரமம் தனது தொல்லேத் திரு முகம் ஆறும் கொண்டு நின்று முருகனேத் தோற்றியது என்றும் அது கூறுகின்றது. பிரமத்தினின்றும் முருகன் தோன்றினுன் என்பது பொருள். பிரமம் முக்கட் செல் வரே என்று வேதம் தெளிவாகக் கூறுகின் றது.

லக்ஷ்யம் ஆவது பிரமமே என்று முண் டகம் கூறுகின்றது.

தனுர் - க்ருஹீத் - வௌபநிஷதம் மகாஸ் ரம்

சரம் - ஹ்யுபாஸா - நிசிதம் ஸந்தயீத / தத்பாவ

- கதேன சேதஸா லக்ஷ்யம் ததேவா க்ஷரம் ஸோம்ய வித்தி

சித்தம் அழகியோனே ! உபநிஷத்தி லுள்ள மகா அஸ்திரமாகிய (ஓங்கார) வில்லே எடுத்து உபாசனேயால் கூர்மை பெற்ற (உன் ஜீவனுகிய) அம்பைத் தொடுத்து பிரம்ம பாவனே நிறைந்த சித் தத்தால் அதை இழுத்து அந்த அக்ஷரப் பிரம்மமாகிய லக்ஷியத்தில் லயமடையச் செலுத்துவாய்.

புறநானூறு 'முக்கட் செல்வர்' என்று எவரைக் கூறுமோ அவரே வட மொழியில்

விரூபாக்ஷர், த்ரியம்பகர் எனப்படுவார். அவரே பரமேசுரர். அவரே சிவபெருமான்.

நம் செயலெல்லாம் 'பரமேசுவரப் பிரீதியர்த்த' மாயிருக்க வேண்டும் என்பது விதி.

'அரன் றன் பாதம் மறந்து செய் யறங்களெல்லாம் வீண் செயல்' என்று சிவஞானசித்தியார் கூறும்.

அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாராதலைச் சாதிக்கும் பொழுது, "நம் செயலற்றிந்த நாம் அற்றபின் நாதன் தன் செயல் தானேயென்றுந் தீபற" என்பது சித்திக்கும்.

"பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே நீயொன்றும் செய்யாமல் நில்" என்று திருவருட் பயன் கூறுவது சாதிக்கும் முறையாகும்.

'நாம் சிற்றறிவு சிறு தொழில் உடையேம் ஆதலால், முற்றறிவு முற்றுத் தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி பாவ புண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்'.

—நாவலர் நீதிவாக்கியம்.

நம் சிவபுண்ணியப்பயனாக உதித்து வாழ்ந்து வரும் லக்ஷ்ய கலாநிதி - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்-பண்டிதர் ஐயர் - மிகவுயர்ந்த பிறப்பினரென்பது மேன்மேலும் ஒளிசிறந்து வருகின்ற அவருடைய 'ஒளிநெறி' யொழுக்கத்தினாலே அறியப்படும்

'பணியுமாம் என்றும் பெருமை'
'சிறுமை அணியுமாம் தன்னை வியந்து'

'பெருமை' யின் பெருமையைத் தெளிவாகத் தரிசித்தற்கு, 'சிறுமை' தன்னை வியந்து அணிவதைக் கூர்ந்து நோக்கவேண்டும்.

நம் லக்ஷ்ய கலாநிதியைத் தந்த தந்தையார் பரமான்மாவாகிய முக்கட் செல்வர் என்னும் லக்ஷியத்தைப் பற்றி யாதும் பேசாத பாஷை யாதாயினும் அது மிலேச்ச பாஷையே என்ற அறிவு நிரம்பிய பெருந்தகையார். அதனாலன்றோ இவர் இவ்வாறு லக்ஷ்ய கலாநிதியாகி ஒளி விரிக்கின்றார். நம் லக்ஷ்ய கலாநிதியார்,

'உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'

என்னும் இரகசியத்தையறிந்த 'மேதை' ஆகிய மதுகையுள்ள தம் தந்தையாருடன் வசித்தவர். 'உலகறிசுட்டு' உடையராகிய உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையும் அவர் புதல்வர்களுங் கூடிய உத்தமமான சூழலைச் சரீரச் சுற்றமும் அன்புச் சுற்றமும் அறிவுச் சுற்றமுமாகப் பெற்று வளர்ந்தவர். அந்தச் சுற்றமோ ஞானம், கல்வி, நேயம், சரீர இயல்பு என்பவற்றால் நாவலரோடு சம்பந்தம் மிக்கது. அச் சுற்றத்தைப் பிரியாமலே நாவலர் வித்தியாசாலையிலே நாவலருடைய தமையனார் புத்திரராகிய 'மனேஜர்' எனப்படும் கைலாசபிள்ளையும் நாவலருடைய மாணாக்கர் குமாரசாமிப் புலவருமாகிய 'இரண்டு மனுஷர்கள்' தரும் ஒளியிலே குடிகொண்டு அந்த உத்தமோத்தமமான 'லக்ஷ்ய' ச் சூழலிலே அநந்நியமாகி முனிபுத்திரராகி ஆசாரம் நிரம்பி வாழ்ந்து வளர்கின்றார்.

'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று'

உணரும் உணர்வாகிய லக்ஷ்யத்தின் இயல்பு அங்கே அவருக்குப் புலனாகின்றது. இனி, அவருக்கு என்ன குறை! முக்கட் செல்வர் என்னும் லக்ஷ்யம் இந்த ஒருவாசகத்திலே பிரகாசிக்கின்றதே.

திருவள்ளுவநாயனார் அருளிய திருக்குறளை யாரும் மறுக்கமாட்டாமல் இடர்ப்படுகின்றார்கள். நாயனார் 'மறை' பொருளாக எத்துணையோ கருத்துக்களைத் தமிழிலே தம் வாய்ச் சொல்லிலே 'குறித்தது கூறுமைக் கொள்ள' வல்லவர்களுக்கு மாத்

திரம் புலனாகும்படி சேமஞ்செய்திருக்கிறார். அவர் வெளிப்படை குறிப்பு இரண்டினாலும் அருளிய கருத்துக்கள் இப்பொழுது கிடைக்கக் கூடிய வேதப் பகுதிகளை ஆராய்ந்தாலும் அங்கே காணக்கூடியதாயிருக்கும்.

'திருநான்மறை முடிவு' வேதம் உபநிடதம் ஆகமம் சித்தாந்தம் ஆகியவற்றை உணர்த்துகின்றது. திருநான்மறை முடிவும் முனி மொழியும் வட மொழியில் உள்ளவாக உள்ளன. மற்றையன தமிழில் உள்ளன. தமிழிலுள்ளவற்றை நன்கறிந்ததனோடு, தமிழிலுள்ள சித்தாந்தத்தையும் அறிந்தவர்கள் வட மொழியிலுள்ள வேத முதலியவற்றை உணர்ந்தவரேயாவர். 'தேவர் குறளும்' என்னும் பாட்டும் திருக்கோவையார் குறிக்கும் லக்ஷ்யம் ஆகிய பரமான்மாவையே காட்டி நிற்பது.

நம் லக்ஷ்ய கலாநிதியின் உத்தமோத்தமமான பிறப்புயர்வு, அவருடைய பிள்ளைப் பருவத்துச் சூழலின் உயர்வு, 'கற்க கசடற் கற்பவை' என்றபடி கிடைத்த கல்விச் சூழலின் உயர்வு, இடையீடில்லாமல் நற்சார்பு பெற்ற புண்ணியத்தின் உயர்வு என்பவைகளை இயன்றவாறு உணர்த்தப் புகுந்தனவே இத்துணையுங் கூறியவை.

இப்பொழுது அவர் ஆசாரிய லக்ஷணம் நிரம்பி நிற்கிறார். லக்ஷ்யத்துடன் அநந்நியமாய் நிற்கிறார். அவர் கல்வியினாலே, சிந்தனையினாலே, சரீர இயற்கைத் தூண்டுதலினாலே, நல்லொழுக்கத்தின் பழக்கம் ஆகிய ஆசாரத்தினாலே லக்ஷ்யத்தையன்றி வேறெதனையுந் தீண்டவேண்டாத உயர்ந்த நிலையிலே நிற்கிறார். வருந்தித் தவஞ் செய்யாமலே லக்ஷ்யம் அவருக்கு ரஸமாகிவிட்டது. லக்ஷ்யத்தைப் பிரியாமலிருத்தற்கு உபகாரமான பிரமசரியம் என்னும் உயர்ந்த ஒழுக்கமும் அவருக்குத் தித்தித்தது - சித்தித்தது.

லக்ஷ்ய சம்பந்தமான சிவசம்பந்தம் அவரிடம் பிரகாசிக்கிறது. 'லக்ஷ்ய' மே அவருக்கு ரசம் - சுவை. சுவைப்பித்தலே இலக்கியங் கற்பித்தல் என்றும், ஆசிரியன் சுவைத்தலே இலக்கியம் கற்பித்தலிலுள்ள இரகசியமான முறை என்றுங் கூறுவர். உயர்ந்த இலக்கியங்களிலே கனிந்த அனுபவம் நிரம்பியவர் இவர்.

முண்டகத்திலே நாம் கண்ட லக்ஷ்யமே எல்லாருங் காணும் 'இலக்கிய கலாநிதி' களிலே தலைசிறந்தவராக இவரை விளங்கச் செய்கின்றது.

ஆன்மாக்களின் நிலை வேறுபாட்டிற்கேற்ப அவற்றின் லக்ஷ்யங்களும் வேறு வேறாயிருக்கும். அவையெல்லாம் சோபானமாய் - ஒரு தொடரில் ஒன்றினொன்றுயர்ந்தனவாய் - அமைந்து 'விருபாக்ஷர்' ஆகிய லக்ஷ்யத்திலே உய்ப்பனவாய் அமைவது - நீதி - வைதிகம். சூரிய பூசை சூரியனைப் பிரீதி செய்தலின் வழியே 'பரமேசுரப் பிரீதியர்த்த' மாயிருக்கும். 'கணவற்றொழுதெழுதல்' வழியே ஒருத்தி 'பரமேசுரப் பிரீதி' செய்து - 'லக்ஷ்யஸ்யலக்ஷ்யம்' என்று சொல்ல நிற்கும் விரூபக்ஷருடைய பிரீதியைப் பெறுவாள்.

நம் லக்ஷ்யகலாநிதி, முடிவான லக்ஷ்யம் - 'ஸத்யஸ்ய ஸத்யம்' - பரமாத்மா - பிரமம் - விரூபாக்ஷர் - 'முத்திமுதல்' என்று விரித்து விளக்கப்படுவதாகிய 'ஒருவன் என்னும் ஒருவ'னை - 'ஒன்றென்றதன்'னைத் தழுவி அதனாற் றழுவப்பட்டு நிற்கிறார். அவர் நமக்கு லக்ஷ்ய புருஷர் - 'ஆதர்ச புருஷர்' ஆகிறார். நாம் அவரைப்போல ஆகவேண்டும். அவருடைய வழியே சென்று விரூபாக்ஷருடைய திருவடித் தாமரையை அடைவோமாக.

இவர் நமக்குக் குருவாய் இருக்கிறார்.

'அதிகமாகவேனும் அற்பமாகவேனும் ஆன்மா உய்யும் வழிக்கு உரியதை அறிவித்தவனையும் குரு என்றே நினைத்தல் வேண்டும்'. —நாவலர் வசனம்.

நம் லக்ஷ்ய கலாநிதி வாழ்க. நாம் அவரைத் தரிசித்து, சிந்தித்து, பார்த்துப் பார்த்து வாழ்வோமாக.

விருபாக்ஷர், பரமேசுவரர், மகா தேவர், சிவபெருமான் நமக்கு அதி சீக்கி ரத்திலே முத்தி நெறி அறிவித்து, தம்மி டம் 'ஈர்த்தீர்த்து' அன்புதந்து ஆண்டரு ளுக.

* * *

'ஓங்குணர்வின் உள்ளடங்கி உள்ளத்தில் இன்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல்'' - திரு வருட்பயன்.

'துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி மறந் தார் கொல்
மற்றை யவர்க டவம்' - திருக்குறள்.

ஞானிகளைப் பேணுதற்காகத் தாம் 'ஞான பாதத்தை' மறந்தாரோ! ஞான பாதத்திலே நிற்க முடியாதவர்கள் ஞானி களுக்கு வேண்டுவன செய்து அவர்கள் வழிப்படுவார்களாக.

* * *

'கடவுளும், புண்ணியபாவமும், சுவர்க்க நரகமும், மறுபிறப்பும், முத்தி யும் உண்டென்னும் உண்மையை ஒரு போதும் மறக்கலாகாது.' -

–நாவலர் நீதி வாக்கியம்.

---

# பாடஞ்சொல்லி ஆட்கொண்ட பெருமை பண்டிதமணிக்குரியது

(சி. தில்லைநாதன் பெருந்தலைவர் இந்து மாணவர் சங்கம் பேராதனை)

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைக் கௌரவிப்பது ஈழத்துத் தமிழ் மரபினைக் கௌரவிப்பதாகும். நாவலர் மரபு என்றும் கந்தபுராண மரபு என்றும் இன்று பேசப்படுவனவற்றைப் புரிந்து தரி சிக்க விரும்புவோர் நாடவேண்டியது பண் டிதமணியினையே யாகும். வரன்முறையா கத் தமிழ் பயின்ற அக் கல்விமான் பழை மையிற் காலூன்றி நிற்பதோடமையாது புதுமைக்குத் திசைகாட்டித் திகழ்கிறார்.

நாவலரிடமும் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையிடமும் பாடம் கேட்ட ம. க. வேற்பிள்ளைஅவர்கள் பண் டிதமணியின் அயல்வீட்டு உறவினராக வாய்த்தார். அவர் மகன் மகாலிங்கசிவம் பண்டிதமணியின் பால்ய நண்பர். சுன்னு கம் அ. குமாரசுவாமிப் புலவரிடமும், நாவலர் வேற்பிள்ளை ஆகியோரின் மாண வரான கைலாசபிள்ளையிடமும் புதுச் சேரியில் வாழ்ந்த காலத்தில் 'வித்தகம்' என்ற பத்திரிகையினை நடாத்திய கோப் பாய்ப் பண்டிதர் ச. கந்தையாபிள்ளையிட மும் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை யிடமும் பண்டிதமணி பாடம் கேட்டார்.

மேலே குறிப்பிட்டவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும், சைவசித் தாந்தத்திலும் துறை மூழ்கியவர்கள். அவர்கள் அத்தனை பேருடைய அறிவாற் றலும் பண்டிதமணியிடம் சங்கமித்தன. பண்டிதமணி என்ற ஓர் ஆளுமை அவர்க ளது அறிவாற்றலை யெல்லாம் செம்மை யாய்க் கிரகித்துக் கொண்டது.

பண்டிதமணியின் கட்டுரைகளைப் படிக் கும் போது பல வேளைகளில் எமக்கோர் ஆசங்கை தோன்றும். எம்மை வசீகரிப் பது அவர் கூறும் கருத்துக்களா அல்லது அவற்றை அவர் கூறும் முறையா என் பதுவே அதுவாகும். அது பண்டிதமணி யின் உள்ளத்தில் உண்மை ஒளி உண்டான சிறப்பு. அவ்வொளி அவரது வசன நடை யிலும் தவழ்கிறது. சிறு சிறு வசனங்களிற் காத்திரமான கருத்துக்களைப் பவனிவிடும் பண்டிதமணியின் ஆற்றல் இலேசிற் கைவ ரத் தக்கதன்று.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் பண்டிதர்களை மதிப்பதில்லை என்றதொரு குறை பல விடத்தும் வெளியிடப்படுவதாகும். ஆனால் பல்கலைக் கழகத்தில் என் தமிழ் ஆசிரியர்களாய் வாய்த்த பேராசிரியர்கள் காலஞ்சென்ற க. கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், அ. சதாசிவம் ஆகிய அனைவருமே பல சந்தர்ப்பங்களிற் பண்டிதமணியினைப் புகழ்ந்து பாராட்டிப் பேசியமையினை யான் அறிவேன். இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிற் பண்டிதமணிக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டதை யொட்டி உரை நிகழ்த்திய பேராசிரியர் சு. வித்தியானந்தன் பண்டிதமணி கௌரவிக்கப்பட வேண்டியவரென்பதை நீண்டகாலமாகவே வற்புறுத்தி வந்தவராவார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு வைபவம் நிகழவில்லையென்பதும் மனம் கொளத்தக்கது.

பண்டிதமணியின் தலைசிறந்த நூலான கந்தபுராணம் — தக்ஷகாண்ட உரையினை வெளியிடும் பேறு பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்துக்கு வாய்த்தது. அதனைச் சாத்தியமாக்கியவர் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றுவதிலே தாகமிக்கப் பேராசிரியர் வைத்தியக் கலாநிதி அ. சின்னத்தம்பி ஆவார். அப் பெருஞ்செயலைப் பற்றிப் பண்டிதமணி 'இப்பதிப்பின் உயிர்நாடியாய் அமைந்தவர்கள் பேராசிரியரும் வைத்தியகலாநிதியுமாகிய திரு. அ. சின்னத்தம்பி அவர்கள்; அவர்களின் வள்ளன்மை வான் சிறப்பைச் சேர்த்தது.' என்று தனக்கே உரித்தான பாணியிற் குறிப்பிட்டுள்ளார்.

தக்ஷகாண்ட உரைப் பிரதிகளை யானை மேலேற்றி மங்கள வாத்தியங்கள் முழங்க, வளாக வீதிகளில் உலாவெடுத்துப் பல்கலைக்கழக மண்டபத்தில் 1967ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்த சிறப்பு நூல் வெளியீட்டுத் துறையில் ஒப்பற்றதாகும். அதனைக் கண்டு வியந்த சிங்களப் பேராசிரியர் டீ. ஹெட்டியாராச்சி 'பதின்மூன்றும் நூற்றாண்டில் பராக்கிரமபாகு மன்னன் 'பூஜாவளி' என்ற நூலை யானைமேலேற்றித் தம்பதெனியா வீதிகளிற் கொண்டுசென்று விழா வெடுத்தபின் அத்தகைய தொரு நிகழ்ச்சி இன்றே நடைபெறுகிறது!' என்று பாராட்டினார்.

திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையிலே முப்பது ஆண்டுகளாகத் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தவர் பண்டிதமணி. அவரது சீடர்களென ஆயிரக்கணக்கான கல்விமான்கள் பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். பல நூல்களையும் பல நூறு கட்டுரைகளையும் அவர் வெளியிட்டிருக்கிறார். இன்று யாம் ஈழத்துத் தமிழ்மரபு ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்றெல்லாம் பெருமையோடு பேச முடிகிறதென்றால் அதற்கு அத்திபாரமிட்ட பெருமையிற் பண்டிதமணிக்கு கணிசமான பங்குண்டு.

ஐந்தாம் வகுப்போடு கல்வியை நிறுத்திவிட்டு ஓட முனைந்தவர் பண்டிதமணி. ஆனால் கல்வி அவரை விடவில்லை. வீட்டில் வைத்தே மடக்கிக் கொண்டது. அதன்பின் ஆராக்காதலொடு அவர் கல்விக்குப்பின் சுற்றினார். இன்று அறிவு அவரைச் சுற்றி விளங்க அவர் பிரகாசிக்கிறார்.

பண்டிதமணி என்ற சுனையில் அள்ளிப் பருக வாய்த்தவர்கள் அதன் இனிய நீரினைத் தமிழ் உலகுக்குப் பொதுவுடைமையாக்க முன்வரவேண்டும். அவருடைய கட்டுரைகள் யாவும் தொகுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பண்டிதமணிமீது ஒரு குற்றம் சுமத்தாமல் விடுதலும் சாலாது. அவரது புலமைக்கு அவர் இன்னும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழையும் சைவத்தையும் எம் நாட்டிலே துலங்கிடச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

தக்ஷகாண்ட உரையினைப் பார்த்தவர்களிடம் பண்டிதமணி தன் ஆற்றலைக் கரத்தல் இயலாது. தமிழுக்கும் சைவத்துக்கும் இன்னும் பல்லாற்றானும் தொண்டாற்ற அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அருளவேண்டிக் குறிஞ்சிக் குமரனைப் பிரார்த்திக்கின்றோம்.

# தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் கிடைத்த கௌரவம்!

திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள்

பண்டிதமணி அவர்களுக்கு இலங்கைச் சர்வகலாசாலை கௌரவப்பட்டமளிப்பது, பண்டிதமணியைக் கௌரவிப்பது மாத்திர மல்லாமல் தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் கௌரவிப்பதாகும். இதற்கு முன் இலங்கைச் சர்வகலாசாலை சிலருக்கு, சிறப்பாகச் சிங்கள மொழியில் பாண்டித் தியம் படைத்தவர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் வழங்கியுள்ளது. ஆனால் தமிழ் படித்துத் தமிழ்மூலம் தொண்டு புரிந்த ஓர் அறிஞருக்குக் கௌரவப் பட்டம் வழங் குவது இதுவே முதன்முறையாகும்.

பண்டிதமணி இளைப்பாறிய பொழுது வெளியிடப்பட்ட மணிவிழா மலரில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் அச்சந்தர்ப்பத்தில் 'பண்டித மணிக்குக் கௌரவப்பட்டம் வழங்குவதற்கு ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் இல்லையே' என் னும் குறையை வருத்தத்துடன் தெரிவித் திருந்தார். பண்டிதர் அப்பொழுது எடுத் துக் காட்டிய குறையை இப்பொழுது இலங்கைப் பல்கலைக் கழகம் நிவர்த்தி செய்து விட்டது.

## தவமுடையோர்:-

பண்டிதமணி அவர்களின், வாழ்க் கையை நோக்குமிடத்து அவர்கள் தவ முடையார்களென்பது புலப்படுகின்றது. அவர்கள் கல்வி பயின்ற சூழல், ஆசிரிய ராகப் பணிபுரிய வாய்த்த இடம், அவருக் குக் கிடைத்த சகாக்கள், நண்பர்கள் முதலியனவெல்லாம் தவமுடையார்க்கே கிடைக்கக் கூடியவையாம்.

பண்டிதமணி நாவலர் காவிய பாட சாலையில், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவ ரிடத்தும், நாவலரின் தமையனாரின் மகன் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையிடத்தும் கல்வி கற்கக் கிடைத்த பேறு பெரும் பேறாகும். குமாரசுவாமிப்புலவர், அக்காலத்தில் தமிழ் நாட்டிலும், ஈழநாட்டிலும் தலைசிறந்த புலவராக மதிக்கப்பட்டவர். வடமொழி தென்மொழிகளில் வல்லுனராய், சொல் லாராய்ச்சியில் தமக்கு ஒப்பாரும் மிக்காரு மில்லாதவராய் விளங்கியவர். திரு. கைலாசபிள்ளை மூலம் நாவலரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்ததோடு, நாவலரின் இலட்சியங்களையும் நன்கறிந்து கொண்டார்.

பண்டிதமணி திருநெல்வேலி சைவா சிரிய கலாசாலையில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டது இன்னுமொரு சிறந்த பேறாகும். அங்கிருந்து பல நூற்றுக்கணக் கான ஆசிரியர்களுக்குத் தமிழறிவையும், இலக்கிய ரசனையையும் ஊட்டக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இப்பணியைப் பண்டிதமணி எவ்வாறு சிறந்த முறையில் செய்தார் என்பதை நான் முன்குறிப்பிட்ட மலரில் அருணந்தி அவர்கள் கூறியிருப்ப திலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒரு மாணவனின் குரல் பண்டிதமணியின் குரல் போல மாறிவிட்டதைக் கண்ட திரு. அருணந்தி, தன் வியப்பைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளார். 'ஆண்டுகள் இரண்டி னுள் ஒரு மாணவனுடைய குரலும் பேச் சுக்கோலமும் அவ்வாறு மாறுவதற்கு ஏது வாயிருந்த எங்கள் பண்டிதமணி அவர் களின் ஆற்றல், அறிவு, அன்பு, ஆதரவு ஆகிய நற்பண்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்

ததான செவ்விய தன்மையை, குண சீலத்தை, நன்குணர்ந்து பேருவகை கொண்டேன்'.

சகாக்கள் :-

பண்டிதமணிக்குக் கிடைத்த சகாக்களும் நண்பர்களுமான மயிலிட்டி திரு. சுவாமிநாதன், ஸ்ரீ பொ. கைலாசபதி, டாக்டர் சிவப்பிரகாசம், திரு. வே. நடராசா, திரு. த. இராமநாதபிள்ளை சாதாரண மனிதரல்லர். சிறந்த அறிவாளிகள். இவர்களுள் ஸ்ரீ. பொ. கைலாசபதி அவர்களை உலகச் சிந்தனையாளர்களுள் ஒருவராகப் பண்டிதமணி மதித்தனர். இவர்கள் சேர்க்கையினுல், மேல்நாட்டு இலக்கியங்களைப் பற்றியும் தத்துவ சாத்திரம் பற்றியும் நன்கறிந்து கொண்டார்.

சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இருந்த காலத்தில் ஒரு காவிய பாடசாலையையும் நடத்தி வந்தார். இக்காவிய பாடசாலையில், உயர்தர இலக்கியம், இலக்கணங்களும் சம்ஸ்கிருதமும் கற்பிக்கப்பட்டன, இங்கு சம்ஸ்கிருதம் கற்பித்தவர் பிற்காலத்தில் மிகவும் புகழ் பெற்ற சீதாராம சாஸ்திரியார் ஆவர். இக்காவிய பாடசாலையில் படித்தவர்களிற் சிலர் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்திய பண்டித பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியெய்திப் பண்டிதராயினர். இதுபோன்ற ஒரு பணியைப் பண்டிதமணியின் மாணவருள் ஒருவரான பண்டிதர் செ. துரைசிங்கம் நெடுங்காலம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடாத்தி வந்தார்.

ஆசிரியகலாசாலைக்கு வெளியிலும், தமது சொற்பொழிவுகள் மூலம் தமிழுணர்ச்சியையும், தமிழறிவையும் வளர்த்து வந்தார். ஆரம்பத்தில் இச்சொற்பொழிவுகள், கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் முயற்சியால் தாபிக்கப்பட்ட கலாநிலையத்தில் நடைபெற்றன. முதலில் கம்பராமாயணம் பற்றியும் பின்னர் ஈழத்துப் புலவர்களான சின்னத்தம்பிப் புலவர், முத்துக்குமார கவிராயர், சோமசுந்தரப் புலவர் பற்றியும் சொற்பொழிவாற்றினுர். யாழ்ப்பாணப் புலவர்களைப்பற்றிப் பண்டிதமணி பேசியவற்றைக் கேட்டோர், அவற்றை ஒரு பொழுதும் மறக்க மாட்டார்கள். கலாநிலையத்தில் சின்னத்தம்பிப் புலவர் பற்றிய சொற்பொழிவைக் கேட்ட ஹண்டி பேரின்பநாயகம் வேறொரு சந்தர்ப்பத்தில், வாலிபர் மகாநாட்டில் முற்றவெளியில் விசேடமாகப் போட்ட பந்தரில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அதே பொருள் பற்றிப் பேசச் செய்தார். மூன்று மணி நேரத்திற்கு மேல் பண்டிதமணி பேசியதை மக்கள் ஆடாமல் அசையாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் பண்டிதமணி பேசியவற்றை ஒலிப்பதிவு செய்திருந்தால், என்றென்றும் பிரயோசனப் பட்டிருக்கும், ஆனுல் நாம் ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டோம்.

பண்டிதமணி, வாழ்க்கையின் பிற்பகுதியில், சமயத்துறையில் அதிகம் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினுர். கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் வாழ்க்கையில் ஏற்பட்டதுபோல், பண்டிதமணியின் வாழ்க்கையிலும் ரசானுபவம் பிரமானுபவத்தை நாடச் செய்தது. முன்னர் கம்பரசனையில் ஈடுபட்டிருந்தது போல், பின்னர் கந்தபுராணத்தைத் துருவித்துருவி ஆராய்ந்தனர். இதன் பயனுக கந்தபுராண தக்ஷகாண்டத்துக்கு ஒரு பேருரை கண்டுள்ளார்கள்.

இப்பொழுது பண்டைய ரிஷிகளைப் போல் ஒரு பர்ணசாலையிலிருந்து கொண்டு, மெய்ப்பொருளைச் சிந்தித்த வண்ணமிருக்கிறுர்கள். மக்களுக்கு வழி காட்ட வேண்டியிருப்பதால், உலக விவகாரங்களையும் கவனித்து வருகிறுர்கள். இவற்றுக்கு மேலாக எம் போன்றவர் எழுதுவனவற்றையும் படித்துத் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகிறுர்கள். இவர்கள் போன்ற ஒருவர் நம் மத்தியில் வாழக் கிடைத்தது நாம் செய்த புண்ணியமாகும்.

பண்டிதமணி இலக்கியத் துறையிலும் சமயத்துறையிலும் ஆற்றிய பணிகளைக் கௌரவிப்பது பொருத்தமானதே. ஆனால் அவர்கள் இப்பொழுது பட்டம் பதவிகளுக்கப்பாற்பட்ட நிலையிலிருக்கிறார்கள். அப்படியிருந்தும் தமக்குக் கிடைத்த கௌரவம் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் புலவர் பரம்பரைக்கும் கிடைத்த கௌரவம் என எண்ணிப் போலும் அதனை ஏற்க இசைந்துள்ளார்கள். இதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமது கடமையை இப்பொழுது செய்ய முன்வந்த இலங்கைச் சர்வகலாசாலையைப் பாராட்டுகிறோம்.

---

# HONOUR TO A TAMIL SCHOLAR

**— S. Ambikaipakan**

The confirment of an honarary degree on Pandithamani Kanapathipillai is a unique occasion in the history of the University of Sri Lanka, for this is the first time that such a degree is being conferred on a Tamil scholar educated purely on traditional lines. This is not only an honour conferred on the great scholar but also an honour conferred on the Tamil Language and the Tamil people of Sri Lanka. Pandithamani represents all that is best in Tamil and Hindu Culture.

Pandithamani had the singular privilege of being educated in the classical school founded by the Champion Reformer of the Hindus, Srila Sri Arumuga Navalar. The Head-master of the school at the time Pandithamani studied there, was the great Tamil scholar, Chunnakam Kumaraswamy Pulavar and the manager was Mr. T. Kailasapillai, a nephew of the great Navalar. Both the Head-master and the Manager had come under personal influence of Navalar and were able to transmit his ideals to their students. Kumaraswami Pulavar was a great scholar in Tamil and Sanskrit and was considered then the greatest living authority on Tamil Etymology. He helped in the preparation of the Tamil Dictionary by Wyman Cathiravetpillai, father of the Tamil leader Mr. C. Balasingham and himself published a dictionary of words found in Tamil Literature.

After completing his studies at the classical school, he sat for the Pandit examination of the Madurai Tamil Sangam and was successful in it. He was one of the first three to pass this examination from Sri Lanka, at that time, the other two being Pandit Mylvaganam, who later became Swami Vipulanandar and Pandit Rasaiyanar.

With all his Tamil learning he had to undergo a period of training in order to become a teacher. While at the Training College he taught classical Tamil Literature and Grammar to his fellow students.

As soon as he completed his training he was appointed Lecturer in Tamil at Saiva Training College, a college founded by the Hindu Board of Education for training Hindu Teachers.

With this appointment began his long career of service for the cause of Tamil Language and Literature and Hindu Religion. As a lecturer at the Training College he developed a distinct style of approach to Tamil Literature which endeared him to his students. At the end of the course, his students acquired a command of the Tamil Language and a lasting taste for good literature.

He also conducted a classical school in the premises of the Training College on the lines of the school where he had studied. Here classes were held in classical Tamil Literature and Grammar and Sanskrit. Some of the students who studied here became Tamil Pandits by passing the Pandit examination held by the Jaffna Oriental Studies Society.

Outside the college he gave popular lectures on Tamil Literature to an ever widening audience. He lectured on the Kamba Ramayana and on the Jaffna poets like Sinnathamby Pulavar. He had a sweet voice and introduced an element of drama into whatever he spoke and these helped to keep the audience spellbound. Once at one of the sessions of the Jaffna Youth Congress he spoke on Sinnathamby Pulavar for long three hours, and the audience which ran into thousands, heard him in pin-drop silence, captivated by his skilful delivery.

Later in life he became deeply interested in religion and spent his time in the study of Saiva Sastras, Puranas and devotional Literature. During this time he made a deep study of Kanthapuranam which deals with the exploits of Lord Muruga in his campaign against the Asuras. As a result of this study he wrote a commentary on one of the sections of the Purana called Dakshna Kandam and it is interesting to note that this book was released under the auspices of the Hindu Students Society of the then Peradeniya University.

Like the Rishis of old he now lives in a cottage thatched with cadjan – a Parna Salai – contemplating on the eternal verities of life.

---

தர்மம் திருவருளின் குறிப்பு. கர்மங்களுக் கெல்லாம் அடித்தளம் தர்மம். காமியங்கள் பலன் கருதியவைகள். அவற்றைச் செய்யும்போது பல துன்பங்கள் நேரிடும். துன்பங்களைப் பொருள் செய்யாது அடித்தளமான தருமத்திற் கண்ணுயிருத்தல் வேண்டும். பலன் தானே வரும். நிஷ்காமியஞ் செய்யாமலிருக்கமாட்டாமையாற் செய்வது; பலன் கருதாதது.

# மட்டுவில்தனில் ஒரு முகில் எழுந்தது

**'சொக்கன்'**

(கலி விருத்தம்)

1. மட்டுவில் தனிலொரு முகிலெ ழுந்தது
தொட்டிட வாழியிற் றேயு முன்னது
கட்டிய சிறுதுணி யோடு மெங்கணும்
பட்டியைப் போல்விளை யாட லார்ந்ததே.

2. வித்தகக் கல்வியில் விழைவ தற்கிலை
அத்தனை அறிந்திட வார்வ மொன்றிலை
எத்தனை குறும்புக ளெண்ண லாகுமோ?
அத்தனை புரிந்தத னகவை சென்றதே.

3. எட்டொடு பத்தெனு மாண்டு மெய்திடக்
கட்டிய வாசைகள் கரைந்து கல்வியி
லிட்டமு முற்றந்த இளைய மாமுகி
லெட்டியே யறிவினை யெய்தவெண் ணிற்றே.

4. நாவலர் கோனன்று நாட்டும் பள்ளியிற்
காவல ராய்த்தமிழ் கற்ற மேதையர்
ஏவரும் போற்றிட விருந்த பேரினை
மேவியே விருந்தெனத் தமிழை மாந்திற்றே.

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

5. நாவலரின் தமையனுக்கு மகனாய்த் தோன்றி
நற்பள்ளி முகாமையராய்த் திகழ்ந்த செம்மல்
ஓவியம்போ லழகர்சிவப் பழமே யான
உயர்ந்ததிருக் கைலாய பிள்ளை யோடு
தாவருநற் றமிழ்தெய்வச் சங்க தத்திற்
றலைமைபெறு சுன்னைக் குமார சாமிப்
பாவலருங் கடலாகக் கல்வி யூட்டப்
பண்டிதரா யோங்கிற்றப் பால மேகம்.

(கலி விருத்தம்)

6. கோவை யாசிரி யர்கலா சாலையிற்
பாவை யள்ளிப் பருகவைத் தக்கவி
மேவு நன்மகா லிங்க சிவமெனுந்
தாவு நீள்கடல் தங்கித் தரித்ததே.

(எ. சீ. க. நெ. ஆசிரிய விருத்தம்)

7. வாதமொடு கண்டனமா மிடிமு ழக்கி
வளர்சுவையா மிலக்கியத்து மின்னல் மின்னிக்
காதலொடு சைவமெனு மிரவி முன்னர்க்
கவிந்துநீ ராவியாய் மாறிப் பின்னர்ப்
போதமுற் ருசிரியர் கலாசா லைக்குப்
புகழ்சேர்க்கத் திருநெல்வே லிக்கு மேலாய்ச்
சீதமுறப் பொழிந்துதமி ழாசா ரென்னுஞ்
செந்நெல்லை விளைவித்துச் சிறந்த தன்றே.

(கலி விருத்தம்)

8. ஆழி யுண்டநீர் செந்தமி ழந்தநீர்
வீழ வீழ விழைந்தவிம் மேகமும்
ஆழி யிற்பெரி தானச முத்திரம்
ஆழ வேதவ மாற்றி யிருந்ததே.

(நேரிசை வெண்பா)

9. பேராழி ஞானம் பிறங்காழி 'வைஸ்' ஐயா
சீராழி தன்னைச் சிறப்புடனே — காராழி
யாகும் வினையொழிக்க அன்போ டிணைந்தின்ப
மேகமா யிற்றே விரைந்து.

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

10. நாவல ராகிய வாதவன் மேலெழு
நாகக் கொடியோரைத்
தாவியே வீழ்த்திநற் சைவசித் தாந்தத்தைத்
தாங்கிடு நன்மேகம்
ஆவியை அப்பெரு மானிடை வைத்திடு
மழகிய தமிழ்மேகம்
காவிய நாயக ராகிய பண்டித
கணபதிப் பிள்ளையதே.

(கலி விருத்தம்)

11. தனக்கென வோர்நடை தக்க வந்நடை
மனக்கொள மதிநல மாட்சி யுற்றவர்க்
கினிப்புற வமுதென விசைந்த நன்னடை
வனப்புற வமைத்ததிவ் வள்ளன் மேகமே.

(எ. சீ. க. நெ. ஆசிரிய விருத்தம்)

12. அந்நடையி லணிபெறவே யமைத்த நூல்கள்
அருந்தமிழ்க்கு விருந்தாக வமைந்த தம்மா!
பன்னரிய இலக்கியத்தின் திறத்தை யெல்லாம்
பகர்கின்ற கட்டுரைகள் பலவே யம்மா!
மன்னுபுகழ்த் தட்சகாண் டத்திற் கென்று
வகுத்தவுரை நூன்மாட்சிக் கிணையே தம்மா!
இன்னுமுள கருவூல மினைத்தென் றெம்மா
லியம்புவதற் கெளிதோவன் றரிதே யம்மா!

(கலி விருத்தம்)

13. பேச்செ னுங்கலை பெற்றவிம் மேகத்தின்
வீச்சி னிற்றமிழ் விந்தையு ருப்பெறும்
பாய்ச்சுஞ் சொற்கணை பாய்ந்திடப் பெற்றவர்
காய்ச்சி ரும்பின் கதியினைக் காண்பரே.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

14. மெல்லெனச் சொற்கள் பிறந்திடும் பின்னர்
விரைந்துமே யாற்றொழுக் காகிக்
கல்லையுங் கனிவித் துயர்ந்திடு மேனி
களிநடங் கொண்டிடுங் கருத்தைச்
சொல்லிடும் போதில் நகைச்சுவை தோன்றுங்
கேட்பவர் வயிறுபுண் ணுவர்
அல்லிடை யொளியா யறிவினைப் பொழியும்
அஃதொரு புட்கலா வர்த்தம்.

(கலி விருத்தம்)

15. மணியென விம்முகில் மன்னு செந்தமிழ்க்
கணியென அளித்துள அரிய சிந்தனைப்
பணியினைப் போற்றிய பலரும் பண்டித
மணியென உரைத்ததால் மாண்பை யுற்றனர்.

16. பணிவு நேர்மை பரிவுசெந் தண்மையும்
அணிக ளாக வமைந்தவிம் மாமுகில்
இணையி லாப்பணி யாற்றிக் கலாநிதி
யணையப் பெற்றமை யார்க்குமா னந்தமே.

(எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

17. ஈழத்துத் தமிழ ரியற்றிய தவத்தா
லிங்குவந் துதித்தவிம் மேகம்
ஈழத்தி லமைந்த பல்கலைக் கழகம்
இன்புட னளித்தபட் டத்தால்
ஆழத்தான் நோக்கி லிதற்குமே பெருமை
அதற்கிலை யிதனைநா முணர்ந்து
வாழத்தான் நாங்கள் வாழ்த்துவோ முகிலே!
வாழிநீ வாழிபல் லாண்டே.

---

## கலாநிதியே!
## பல்லாண் டின்புடன் வாழுகவே!

### ஆசிரிய விருத்தம்.

தண்டமிழ்க் கடலி னமுதுண்டு
சகல கலாவல்லி தாம் களிக்கத்
தரணியில் வாழும் பலபுலவோர்
சந்தம் போற்றும் முதுபுலவோய்!

கண்டெனப் பாகெனக் கனியுமின்சொல்
கருத்தி லுதிக்க அருத்தியுடன்
கற்றோர் பலரும் மெச்சநனி
கழறுஞ் செஞ்சொற் பெரும்புலவோய்!

கொண்டல்போ லின்பம் பொழியுமின்சொல்
குவலயத் துள்ளோர் நனி சுவைக்கக்
கொழுந்தமி ழின்ப மூற்றெடுக்கக்
கொள்ளும் பலகட் டுரைப்புலவோய்!

பண்டித மணியே! பாமணியே!
பலகலை மணியே! நாவலர் தம்
பண்பார் மணியே! கலாநிதியே!
பல்லாண் டின்புடன் வாழுகவே!

**சுபமங்களம்!**

பண்டிதர் செ. சிவப்பிரகாசம்

# பண்டிதமணி அவர்கள்

‘ சம்பந்தன் ’

‘நல்லை நகர் ஆறுமுக நாவல’ ரவர்களையே ‘நாவலர்’ என உலகு கொண்டு போற்றியது. அங்ஙனமே இலக்கிய கலாநிதி, பண்டிதமணி அவர்களை, ‘பண்டிதர்’ என்று அது கொண்டு போற்றியது; போற்றுகிறது.

பண்டிதர் — மெய்யுணர்வுடையவர். மெய் – என்றும் பொய்யாதது; இறை. ‘உபாதிகளில் இலங்கும் சமசீரான நித்தியமான உண்மையைப் பார்ப்பதால், இருக்கிறவர்களைப்பற்றியோ இறந்தவர்களைப் பற்றியோ கலங்காதவர் பண்டிதர்.

‘தவிர்க்க முடியாத தேககர்மத்தை, ஆன்மாவாகிய எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லையென அகர்மமாக நிகழ விடுகிறவர், தேககர்மத்தைச் செய்யாதிருத்தலும் கர்மமே என்பதை அறிந்து சகல கர்மங்களையும் செய்தும் செய்யாதவராக அமைந்தவர் பண்டிதர்’.

‘கடைசிச் சாதனமாகிய கர்மயோகமும் அதன் விளைவாகிய சாங்கியமும் வேறல்ல என்ற தெளிவுள்ளவர் பண்டிதர்’.

‘நாயினிடத்திலும், நாயை உண்பவனிடத்திலும் யானையினிடத்திலும் பசுவினிடத்திலும், வித்யா வினய சம்பன்னனான பிராமணனிடத்திலும் சமதிருஷ்டி உள்ளவர் பண்டிதர்’.

இங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, ‘உபாதியைப் பொருள் செய்யாது உபாதியில் இலங்குவது போல இலங்கும் ஆன்மத்துவத்தைச் சமசீராக நோக்கும் இயல்பினர்’ ‘பண்டிதர்’ எனப் பேசுகிறார்.

ஈஸ்வர நியதியாக அமைந்த கொடிய ‘தொய்வு’ நோய் கணந்தோறும் வதை செய்துகொண்டிருக்க, ‘இது என் பாக்கியமே’ என்பவர் பண்டிதமணி அவர்கள்.

அன்று, கற்க வேண்டியவற்றைக் கற்றவராகவும், சாதுரியவர்ணனைகளைச் செய்யும் கவிஞராயும் சொற்களைப் பிளந்துணரும் வன்மையுடையவராயும், யாவரையும் நற்செயலிற் செலுத்துபவராயும் அறிவுடையவராகிய புலவராயும் விளங்கினார்.

பொய்யை வெறுத்தார், பொய்யரைச் சாடினார், அப்போதெல்லாம் கொடி போன்ற இனிய ஒளிவிடும் அவரது தோற்றம் மலைபோன்றதாய் கடத்தற்கரியது போன்ற பண்பைப் பெற்று ஒளிரும்.

கற்பவை கற்ற அவர் அதன்வழி நிற்குங் காலம் தொடர்ந்தது. அர்ஜுனனுடைய பக்குவம், எங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ணனைப் பரியச் செய்ய உபதேசம் நிகழ்ந்ததோ அங்ஙனமே இவர் பக்குவமும் ஜநகாதி முனிவர் வழி தவமாகி வந்த மகான் கைலாசபதி அவர்களைப் பரியச் செய்து உபதேசத்தை நிகழச் செய்தது,

மகான் கைலாசபதி அவர்களது உபதேசமும் வாழ்ந்து காட்டிய சாதுசங்க அநுபவமும், புலன் விடயங்களை ஆராய்ந்து தெளிந்து, காணப்பட்ட கானற்சலம் நீரன்று எனக் கண்டவன் மீண்டும் அது புலனாகவும் உதாசீனமாக இருப்பதுபோல, காணப்படுகிற நாம ரூபப் பிரபஞ்சத்தில் சமசீராக ஒளிரும் இறையின் வியாபகத்தை எல்லா நேரமும் ஆளுகிற பண்டிதராக அவர் அமைந்தார்.

புலன்விடயங்களின் உதாசீனம் ஏற்பட்டதன் விளைவாக மனமானது அசுத்தத்தினின்றும் மீண்டு தன் சொந்த இயல்பாக அமைய முடிந்தது, இந்த நிலை கைவல்யமானதன் பலனாக எஞ்சிய பிராரத்தத்தை அனுபவிக்கும் எல்லா நேரங்களிலும் அவரால் ஆன்மாவாக அமைய முடிந்தது.

அவர் ‘பண்டிதர்’

மாயையின் வசப்பட்டு மாயையைக் கடந்த பண்டிதன் அர்ஜுனன், மாயையை வசப்படுத்தி அவதரித்தவன் ஸ்ரீ கிருஷ்ணன். அவன் பண்டிதமணி. மாயையைக் கடந்த நிலையில் இருவரும் வேறல்லர். எனவே பண்டிதரும் பண்டிதமணியும் சொல் வேறுபாடே.

இலக்கிய கலாநிதி என்ற விருது, பண்டிதமணி அவர்களுக்கு, வைதேகியை அழகு செய்ய ஒரு மலரைச் சூட்டியது போன்றதே.

---

# தமிழ் தந்த பண்டிதமணி

ச. பரநிருபசிங்கம் ஆசிரியர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி

தமிழ் தந்த தாமோதரனார் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், 'செல்லரித்ததுளையன்றி மெய்ப் புள்ளி விரவாத' பழைய ஏடுகளில், அழிந்து கொண்டிருந்த தமிழை அச்சு வாகனமேற்றிப் புத்துயிர் கொடுத்த பெருமை, மேற்குறிப்பிட்டவர்களையே சாரும். அவர்கள் பணி அரும்பணி. செயற்கரிய செய்தவர்கள் அவர்கள். டாக்டர் உ. வே. சா. இல்லாவிட்டால் சங்க இலக்கியங்களை நாம் காணவும் முடியாமற் போயிருக்கலாம். தாமோதரனார் வாழ்ந்திலரேல் 'களவியல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று' என்ற மகா வாக்கியம் பொதிந்துள்ள இறையனார் களவியலுரை எம்மனோர்க்குக் கிட்டாமற் போயிருக்கலாம். அந்த அளவில் அவர்கள் பெரியவர்கள்.

ஆனால் அந்நூல்கள் கிடைத்தும் என்! அந்நூல்களிற் பேசப்படும் உண்மைப் பொருளை—அவற்றிற் கூறப்படும் அகத்தமிழ், புறத்தமிழ் களவு, கற்பு என்ற பதங்களின் சரியான பொருளை உணர்த்தினவர் யாருமுண்டா? 'களவியல்......... தமிழ் நுதலிற்று' என்ற தொடருக்கு நக்கீரதேவரிடம் தான் விளக்கம் கேட்க வேண்டியிருந்தது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எந்த உரையாசிரியராவது அந்த முடிச்சை அவிழ்த்தாரில்லை. ''அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே.' என்ற சூத்திரத்துக்கும், உண்மைப்பொருள் விரித்தாரில்லை. 'உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி' என்று புலவர்களாற் போற்றப் பட்ட பரிமேலழகர் என்ன சொன்னார், 'ஏனைப்பொருளுமின்பமும் போலாது அறன் இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான் அவற்றின் வலியுடைத்து' என்றும் ''இல்லறத்தின் வழிப் படுவனவாய பொருளின்பங்களுள், இருமையும் பயப்பதாகிய பொருள்' என்றும் 'இம்மையே பயப்பதாகிய இன்பம்' என்றும் ஒன்றிலொன்றைத் தாழ்த்தி மிகச் சாதாரண பொருள் செய்து போயினார்: 'முப்பாலில் நாற்பால் மொழிந்த புலவன்' என்றும் 'அறனறிந்தேம், ஆன்ற பொருளறிந்தேம். இன்பின் திறனறிந்தேம், வீடு தெளிந்தேம்' என்றும் சங்கச் சான்றோர் போற்றினரே! இந்த வரிசையிலுள்ள இன்பம் என்பது இம்மையே பயக்கும் சிற்றின்பம் தானோ? தமிழின்பம் என்பது வெறும் சொல்லழகும் அணியழகும் கவியழகும் தானோ? ஆழ்ந்து சிந்திப்போர்க்குக் கைகொடுப்பார் யாருமில்லை.

1950 ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 'தமிழ்' பற்றிப் பின்வருமாறு பேசினார்.

''அன்றொரு நாள் யுத்த முனையில் அர்ச்சுனனுடைய களவு வெளித்தது.

கிருஷ்ண பரமாத்மா காட்டிய உண்மையைத் தொடரவும் அவனால் முடியவில்லை. தொடராமலிருக்கவும் முடியவில்லை. ஒரு புறம் தெய்வமென்பதோர் சித்தம் — கிருஷ்ண பரமாத்மா. மறுபுறம் சுற்றமென்னும் தொல்பசுக் குழாங்கள். பதி ஒரு புறம்; பாசம் ஒரு புறம். அன்பு பிரிநிலைப் பட்டுக் கிடக்கின்றது. இரு பக்கத்தையும் பிரிய முடியவில்லை.

வள்ளிநாயகிக்கு முருகனைத் தொடராமலிருக்கவும் முடியவில்லை; பழகிய தினைப்புனத்தை — வளர்த்த வேடரை மறக்கவும் முடியவில்லை. அன்புக் கயிற்றில் ஊசலாடினாள்.

இந்த வள்ளிநிலைக்கு — இந்த அர்ச்சுன நிலைக்கு, களவுநிலை என்று பெயர். முன்னும் பின்னும் நோக்கும் நிலை.

பிறப்புக்கள் தோறும் செய்துவைத்த தவவிசேடத்தினாலே, அறிவு விசாரங்களினாலே, ஒருவனுக்கு அந்தக்கரணங்கள் தூய்மைப் பட்டு அறம் கைவரலாம், 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'. அறம் கைவந்தவன் மனித வாழ்க்கையில் — ஆத்மீக வாழ்க்கையில் 25 கல் தூரம் நடந்தவன் ஆகிறான். அவன் மேலும் நடக்க நடக்க 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்.'' அவனை விட்டு நீங்குகின்றது, வாழ்க்கையில் 50வது கல்லை அணுகுகின்றான். இந்த நிலையில் தொடர வேண்டிய பொருள் எது? விடவேண்டிய பொருள் எது? என்பது அவனுக்குத் தெரிகின்றது: அறம் பொருள் கைவந்தவனாகின்றான். அவனுக்குப் பொய் மெய் தெரிகின்றது. ஆனால் மெய்யென்றறிந்ததைத் தொடரவும், பொய்யென்றறிந்ததை விடவும் முடிகிறதில்லை. 'பொய்கெட்டு மெய்யாதல்' எளிதன்று.

வாழ்க்கை வழியிலே அறம் பொருள் கைவந்து ஐம்பதாவது கல் முடிவிலே அப்பாலும் நடக்க முயலுபவனுக்கு, மேலும் ஒரு காலைத்தூக்கி வைக்கிற தருணத்திலே — இந்தக் களவு நிலை— அன்புக் களவு முளை — அவன் வாழ்க்கையில் முளைத்து விடுகிறது. இந்த முளையை நல்ல நிழல் செய்து, பாலை தாக்காமல் —வெஞ்சுரந்தாக்காமல், கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாக்க வேண்டும். முளை சற்றே நிமிர்ந்து ஒரு தளிர் விடலாம். அத்தளிருக்கு உடன் போக்கு நிலை என்று பெயர். பிரிநிலைப் பட்டுக் கிடந்த அன்பிலே பெரும்பாகம் ஒரு முகப்பட்டு பொய்யுலகை உவர்த்து, மெய்யுலகை முகஞ்செய்கிற நிலை. உடன் போக்கு நிலையின் முதிர்ச்சிக்குக் கற்பு நிலை என்று பெயர்.

அர்ச்சுனன் ஒரு நாள் கண்ணப்பர் ஆனான். கண்ணப்பர் பொய் உலகை உதறி மெய்யுலகத்தைத் தொடர்ந்தார். பொய்கெட்டு மெய்யானார். அர்ச்சுனன் நிலையாகிய களவு நிலை, அடுத்த பிறப்பில் கற்பு நிலையாயிற்று. காய் கனியாவது போலக் களவு நிலை ஒருநாளைக்குக் கற்பு நிலையாகும்.

'கற்பெனப்படுவது களவின் வழித்தே'. இக்கற்பு நிலைக்கு மற்றொரு பெயர் இன்ப நிலை. இது வாழ்க்கை வழியில் எழுபத்தைந்தாவது கல். நூறாவது கல் வீடு— பந்தங்களை விடுதல், வாழ்க்கை வழி வீடு சேர்வதாயிருத்தல் வேண்டும். அதாவது அறியாமைகளைச் சுடுகிற— நீறு செய்கின்ற இடமாயிருத்தல் வேண்டும்.

கற்றதனாலாய பயன்— வாழ்க்கைவழி —அறம் பொருள் இன்பம், வீடு, இவை அரும்பு மலர் காய் கனிகள். ஒன்றிலிருந்து ஒன்று முதிர்ந்து நடப்பவைகள், மனிதன் அடைய வேண்டியவைகள். அறம் பொருளுக்கும், இன்ப வீடுகளுக்குமிடையிலே தான் ஒரு உயர்ந்த மனிதனுக்கு — வாழ்க்கை வழியில் நடப்பவனுக்கு, களவு நிலை முளை கொள்ளுகின்றது, களவு நிலை தான் மனிதன் அடையற்பாலது. அதை அடைதல் என்றால், அறமும் பொருளும் கைவருதல்; அவை கைவந்துவிட்டால் இன்பத்தை அடைவதில் — வீடு சேர்வதில் சந்தேகமேயில்லை.

மனிதன் களவை அடையக் கடவன். களவென்றால் அறம் பொருள் இன்பம்

நான்கின் மத்தி—நான்கின் சுருக்கம் களவு. ஒருவனுடைய வாழ்க்கை களவை நோக்கிச் செல்லல் வேண்டும். பொய்யை விடவும் மெய்யைத் தொடரவும் ஆயத்தமாதல் வேண்டும், அப்பால் அவன் களவிலிருந்து வீடு நோக்கிச் செல்லுவான்.

வையத்து வாழ்வாங்கு வாழும் மனித னின் வாழ்க்கை வழியின் மத்திய புள்ளி—புருடார்த்த குருத்துவ மையம்—களவு,

இந்தக் களவிலேதான் பரிசுத்தமான தமிழ் — அகத்தமிழ் ஆரம்பிக்கின்றது, களவு புள்ளியிலிருந்து இன்பமாய் வீடாய் நடக்குந் தமிழ் அகத்தமிழ்; களவை நோக்கி அறமாய்ப் பொருளாய் வருந் தமிழ் புறத்தமிழ். இரண்டன் சுருக்கம் களவு தமிழ். களவு தமிழ் என்றால் களவை நோக்குந் தமிழுமாம், களவிலிருந்து அப் பால் நோக்குந் தமிழுமாம்.

ஆகவே தமிழ் என்னுதலிற்றோ வெனின் களவு நுதலிற்று—முன்னும் பின்னும் நோக்குகிற அன்புக்களவு. தமிழர் என்று சொல்லிக் கொண்டிருப்போரெல் லோருந் தமிழரல்லர். மனிதன் தமிழனு தல் வேண்டும். எவனுடைய நடை களவை நோக்கி நடக்கின்றதோ மேலும் நடக் குமோ அதாவது எவனுடைய வாழ்க்கை மெய்ப்பொருளையும் பொய்ப்பொருளையும் பிரித்தறிந்து மெய்ப்பொருளை நாடுகின் றதோ அவன் தமிழன்.

இவை பண்டிதமணியின் ஆய்வுரையின் சாரம். பேச்சின் பொருளை உற்று நோக் கிய வண்ணமிருந்தவர்கள் 'கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்' என்று தமிழ் போற்றப்பட்டதன் இரகசியத்தை அறியக் கூடியதாக இருந்தது. இப்படியொரு வியாக்கியானம் எந்த நூலிலும் கண்டறி யாதது. சங்கச்சான்றோரன்றி வேறெவ ரும் நினைக்க முடியாதது. உமிக்குத்திக் கைவருந்தல் போல் சொல்லாராய்ச்சி களும், பொருளாராய்ச்சி தவிர்ந்த பிற ஆராய்ச்சிகளுந்தான் இப்பொழுது நடப் பவை. கலாநிதிப் பட்டம் பண்டித மணிக்கு எம்மாத்திரம்! 'சங்கச் சான் றோன்' என்றாலே தகும்.

பண்டிதமணி தமிழை மாத்திரமா உலகுக்குத் தந்தார்? தமக்கு அந்தத் தமிழை அறியத்தந்தவர் யார் என்பதை யும் உலகு அறியத் தந்த பெருமை அவ ருக்கே யுரியது. தருமம் என்றொரு பொரு ளுளது, 'இந்தப் பூமி சிவனுய்யக்கொள் கின்ற ஆறு'!! 'பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளை!' 'உண்டிருந்து வாழ்வ தற்கே யுரைக்கின்றீர் உரையீரே!' 'நிறுத்துவதோர் குணமிலான்.' 'ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவன்.' 'நூற்புணர்ப்பு' என்றின்னோரன்ன அரு மந்த தொடர்களைத் தமக்குத் தொட்டுக் காட்டியவர் உப அதிபர் திரு. பொ. கைலாசபதி என்பார்.

'மோனமென்பது ஞானவரம்பு' என்ப தற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் திரு. பொ. கை. அவர்கள். அவரிடம் தான் முகந்தவற்றைத் தனக்கேயுரிய தனிநடையில் பேசியும் எழுதியும் விளக்கியவர் பண்டிதமணி அவர்கள். அவ ரிடம் பெற்ற வைர மணிகளுக்குப் பட்டந் தீட்டி மெருகு கொடுத்து மிளிரச் செய் தார். பண்டிதமணி அவர்கள் நோயால் உடல் நலிந்து நடைகெட்ட இந்த நிலையி லும், அத்துவிதம் பற்றி ஆராய்ந்து கொண்டேயிருக்கிறார். சுவாசிக்கக் கஷ்டப் பட்டுக்கொண்டிருப்பார். கண்டவுடன் தமக்கு வந்த புதிய கருத்துக்களைச் சொல் லத் தொடங்குவார். நோய் எப்படியோ ஒதுங்கிவிடும். அறிவாராய்ச்சியில் அவருக் குள்ள ஆராமையும் ஈடுபாடும் இருந்த வாறு! அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயன்பட எல்லாம் வல்ல எம்பிரானை வேண்டுவோ மாக.

# நேர் முகப் பரீட்சை நடக்கிறது

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்

கலாநிதி பண்டிதமணி அவர்களைப் பற்றி பத்திரிகைகளிலோ, சஞ்சிகைக ளிலோ எழுத எனக்குப் பயம். அவரைப் பற்றி எழுத என்ன அறிவுத் தகமையுண்டு. இதனுல் இற்றைவரை நான் அவரைப் பற்றி எழுதவில்லை. இன்று நான் என்னைப் பற்றி எழுதலாம் என்று துணிந்துவிட் டேன்.

நான் சங்கத்தானை சைவப்பாடசாலை யில் மூன்ரும் வகுப்புவரை படித்துவிட்டுச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். தமிழில் பேசி ஞல் அக்காலத்தில் குற்றப்பணம் கட்ட வேண்டும். இதனுல் நான் என் தந்தையும் தாயும் பேசிக்குலாவிய தமிழ் மொழியைப் பாடசாலையில் மறந்தேன். கல்லூரிப் படிப்பும் முடிந்தது. காற்சட்டை உத்தி யோகமும் கிடைக்கவில்லை. ஆகவே என் னிடமுள்ள ஆங்கில அறிவை நம்பி 1938ல் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைக்கு விண் ணப்பித்தேன். எழுத்துப் பரீட்சையில் 10வது ஆள். சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் நேர்முகப் பரீட்சை நடக்கிறது. (கந்தபுராணம் பற்றியும் கேட்பார்கள் என்று சிலர் கூறியபடியால் 'வேதக்காட் சிக்கு...என்ற பாட்டைப் படித்து உரையை யும் தெரிந்துகொண்டு போயிருந்தேன்')

'புராணம் ஏதாவது படித்திருக்கி றீரா? 'உபஅதிபர் கேட்டார், 'ஆமாம்; கந்தபுராணம் திருவிளையாடற் புராணம்'' என்று சுத்தப் பொய் கூறினேன். 'வேதக் காட்சி'யை நினைத்துக் கொண்டேன் பாடவும் நான் தயார். ஆனுல் ''கந்தபுரா ணம் பாடியது யார்'' என்று அந்த மனிதர் கேட்டார். 'வில்லிபுத்தூர் ஆழ் வார் அவர்கள்'' என்று விடையிறுத்தேன். ஏனோ தெரியாது எல்லாரும் உரக்கச் சிரித்தார்கள். நான் சிரிக்கவில்லை. சிரிப்பு வரவுமில்லை.

அப்போது ஆபத்துக்கு உதவும் நோக் குடன் பண்டிதமணி ஐயா கேட்டார் (என்னைத் திருத்தட்டும் என்ற நோக்கு டன்) ''உமக்கு வில்லிபுத்தூர் ஆழ்வார் இயற்றிய நூல்கள் வேறு ஏதாவது தெரி யுமா?'' என்று,

எனக்கு கச்சியப்பர் என்ற பெயரே தெரியாதபடியால், ''எனக்கு வில்லிபுத் தூர் ஆழ்வார் பாடிய நூல் ஒன்றுதான் தெரியும், அது அந்தக் கந்தபுராணம்'' என்றேன். மீண்டும் பலத்த சிரிப்பு. இப் படி இன்னும் பல. விரைவில் அந்த நேர் முகப் பரீட்சை எனக்கு முடிந்தது.

ஆனுல் நான் கலாசாலைக்குச் சேரும் பேற்றை — இல்லை — இரண்டு வருட காலம் பண்டிதமணி என்ற தமிழ் மேகம் பொழிந்த மாரியில் நனையும் பேற்றைப் பெற்றேன்.

மாதிரிப்பாடம் என்ற கண்டன பாடம் ஒன்றில் ஒரு மாணவ ஆசிரியன் 'மணங் கமழ் குழலாய்! நின் மைந்தனை அரவு தீண்டி' என்ற பாடலை அழகாகப் படித்து இதமாகப் பாடத்தை நடத்தினுன். பாடம் முடிந்தது. எல்லாச் சகமாணவர் களும் 'நயப்புரை' கூறிப் பாடத்தைப் பாராட்டினர்.

கனம் பண்டிதமணி அவர்கள் என்னை அழைத்தார். 'பாட்டு ஒரேசீராக — (Monotonous) தொணதொணப்பாக அமைந்திருந்தது' என்று தொடங்கி அக்கு வேறு ஆணி வேருகக் கண்டித்த யான், ஈற்றில் 'பாடத்தெரிவு படுபிழை' என்று சாடினேன்;

'' வாசனையுடைய கூந்தலையுடைய பெண்ணே'' என்று விளித்து ''உன் மக னைப் பாம்பு தீண்டிற்று'' என்று எந்த மூடன் பாடுவான். அப்போது அந்த

மாணவன் குறுக்கிட்டுப் புலவரின் பெய ரைக் குறிப்பிட்டான்.

''புலவர் பிழையாகப் பாடினால், நாளைக்கு உலகைத் திருத்தும், ஆசிரிய ராகிய நாமுமா அப்பாட்டைத் தெரிந்து இளம் பிள்ளைகளை மண்ணுக்க வேண்டும். குற்றம் குற்றமே'' என்றேன் நான்.

மறுநாள் பண்டிதமணியிடம் புலோலி திரு. க. இராமநாதபிள்ளை B. A, (Lond) திரு. க. இராமுப்பிள்ளை வந்து ஏதோ உரையாடிக் கொண்டிருந்தனர். தற் செயலாக அவ்விடம் நான் போக நேர்ந்து விட்டது.

அப்போது திரு. இராமநாதபிள்ளை 'சுப்பிரமணியம் எனது மாணவன் – எப்ப டித் திறமை காட்டுகின்றான்?'' என்று பண்டிதமணியைக் கேட்டார். திரு. இரா முப்பிள்ளையும் என்னை 3ம் வகுபபில் படிப் பித்ததாக நினைவூட்டினார்.

''திறமை காட்டுவதாவது பழைய புலவர்களைக் கூட உங்கள் மாணவன் விட்டு வைக்கவில்லை. அரிச்சந்திர புராணத்தைக் கிழிக்க நின்றான் உங்கள் நவீன நக்கீரன்'' என்று கூறி டிை சம்பவத்தையும் சொன் னார்.

'எனக்கும் கொஞ்சம் '' திமிர் '' வந்தது. என்னைப் போன்ற 'கசாமூலங் களை' உத்தம ஆசிரியர்களாக்கிப் பல்லாயி ரக் கணக்கான இலக்கிய மேதைகளையும், சமயிகளையும், சைவ உலகையும், நிறுவிய குருமூர்த்தியின் பொன்னடிகளை வணங்கித் தலை சாய்க்கின்றேன்.

வணக்கம்.

---

# தமிழ் வளர்க்கும் பண்பாளர்

ஒழுக்கமெனும் விழுப்பமதால் உயர்ந்தனை நீ
எனச்சிலரும் உளத்தே தோன்றும்
அழுக்ககற்றிக் கொண்டமையால் உயர்ந்தனை நீ
எனச்சிலரும் அறிவென் கின்ற
முழுப்பொருளைப் பெற்றமையால் உயர்ந்தனை நீ
எனச்சிலரும் மொழிவா ரேனும்
பழுத்ததமிழ்ப் புலமையினாய் நின்சிறப்பை
அளந்தறிந்து பகர்ந்தார் இல்லை.

சமயமெனும் பெருங்கடலுள் மூழ்கிஉளம்
அமைதிகொளும் சால்பின் மிக்காய்
அமையுமுயர் இலக்கியமாம் அமுதுதனை
உண்கின்ற அறிவுத் தேவ,
நமதினிய நாட்டினுக்கும் மொழியினுக்கும்
நலன்விளைக்கும் நலன்கள் வாய்ந்தாய்
இமயமதாய் சாகரமாய் இரும்புலவர்
தொழவிளங்கும் இயல்பின் மிக்காய்

அக்கால இலக்கியங்கள் அனைத்தையுமே
ஆய்ந்தாய்ந்து கற்ற தோடே
இக்கால இலக்கியத்தும் இனியவற்றை
வரவேற்றே ரசிக்கும் பண்பா
எக்கால வல்லுநரும் ஏற்றிடவே
உண்மைஒளி இனிதாய் ஈவாய்
தக்கோர்கள் தொழும்மணியாம் மன்னுகண
பதிப்பிள்ளை என்னும் நல்லாய்

ஈழத்தின் தவப்பயனே தமிழாம் மாதின்
எழில்காண விழிக்குதவும் எழிலி போல்வாய்
ஏழிசையாய் விளங்குகின்ற இறைவன் பாதம்
எப்போதும் தியானிக்கும் பேறு பெற்றாய்
நாளெல்லாம் ஆண்டவனின் நோக்கம் தன்னை
நாடிவரும் அன்பருக்கே விளக்கும் நல்லாய்
வாழியநீ அவனருளால் தமிழ்,சை வத்தை
வளர்க்கவெனப் புவித்தலத்தே வந்த பண்பா

சங்கநூற் பரவைதனிற் கபிலன் பாட்டாம்
தனிமுத்தின் ஒளிச்சிறப்பை நின்றன் நாவால்
இங்குநாம் கேட்டிடத்தான் செவிபெற் றோமா
இல்லையெனிற் கம்பனெனும் கவிவல் லோனின்
தங்கநிகர் காப்பியத்தின் கருத்தும் தேனும்
கற்பனையும் கலந்ததனி அமுதப் பேச்சை
இங்குன்பாற் கேட்டிடத்தான் செவிபெற் றோமா
இன்னுமே நாம்அதனை அறிந்தோம் இல்லை

கந்தவேள் புராணத்தின் கலாசா ரத்தைக்
கனியாக நாமெல்லாம் உய்யத் தந்தாய்
பந்தமே அகற்றிஇறை பாதம் சேர்க்கும்
பயனுகச் சமயக்கட் டுரைகள் தந்தாய்
சிந்தனைக்குப் பெருவிருந்தாய்க் கற்றோர் போற்றும்
சிறப்புறுசை வத்தின்சிந் தனைநூல் தந்தாய்
இந்தவுல குள்ளவரை நின்னுக் கங்கள்
இருக்குமென நாம்அறிந்தோம் மணியே வாழி!

புலவர் ம. பார்வதிநாதசிவம்

# ஈழத்துத் தமிழ் இயக்கவாதி

## கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

— கலாநிதி பொ. பூலோகசிங்கம் —

சிரேட்ட தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ரௌத்திரி வருடம் ஐப்பசி மாதம் (1860) சென்னை முத்தமிழ் விளக்கம் அச்சுக்கூடத்தில் அச்சிடுவித்த திருக்கோவையாருரைப் பதிப்பிலே 'தமிழ்ப்புலமை' பற்றிக் கூறியிருக்கிறார்கள். அக்கட்டுரை ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டிலும் மறுபிரசுரங் கண்டது. அக்கட்டுரையிலே,

> "தமிழ் கற்றவர்களை நடுவுநிலைமையின் வழுவாது பரீக்ஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க் கல்வியில் வல்லவர்களும், வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப்படுகிறார்கள். அதனால், நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினும் இலவாயின"

என 'எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி' வளர்ச்சி குன்றி நிற்பதைக் கண்டு நாவலரவர்கள் வருந்தினார்கள்.

1877 ஆம் ஆண்டு திருக்கோணமலை குமாரநாயகர் அலங்காரம் என்ற செய்யுணூல் யாழ்ப்பாணம் இலங்கைநேச முத்திராக்ஷரசாலையில் அச்சிடப் பெற்று வெளிப்போந்தது. அந்நூலாசிரியர் திரிகோணமலையைச் சேர்ந்தவரும் சுப்பிரமணியபிள்ளையின் புதல்வருமாகிய தம்பையாபிள்ளை என்பவராவர். அவர் பின்பு குமாரநாயகர் தோத்திரமாலை (1886), சித்திரவெண்பா (1894) என்பவற்றை இயற்றியதோடு, சுன்னாகம் வரதபண்டிதரின் அமுதாகரத்தை 1892 இலே சென்னை விக்டோரியா ஜுபிலி அச்சுக்கூடத்திற் பதிப்பித்தும் உதவியவராவர்.

குமாரநாயகர் அலங்காரத்திலே ஆசிரியர் பெயர் 'வித்துவான் தம்பையாப்பிள்ளை' என்று இடப்பெற்றிருந்தது. 'கல்வி விருப்பினன்' என்ற பெயரிலே நாவலரவர்கள் இலங்கைநேசன் பத்திரிகையிலே,

> "வித்துவானென்னும் பட்டமேற்றற்கு யோக்கியராகும் வண்ணங் கற்றற்பாலனவாகிய நூல்கள் எவை? அந்நூல்கள் நீர் கற்றிருக்கின்றீரா? அவைகளிலே நீர் பரீக்ஷிக்கப்பட்டீரா? பரீக்ஷித்தவர் யாவர்? பரீக்ஷையிலே சித்திபெற்றீரா? பட்டந் தந்தவர் யாவர்? பட்டப்பத்திரம் எங்கே? உமக்குப் பட்டம் நீரே படைத்திட்டுக் கொண்டீரா? அப்படியாயின், இங்கிலிசுப் புத்தகங்கள் சிலநாட் கைக்கொண்டு திரிந்தோரெல்லாம், பீ. ஏ., பீ. எல்., எம். ஏ. முதலிய பட்டங்கள் தமக்குத் தாமே படைத்திட்டுக் கொண்டு, இறுமாந்து திரியலாமே; பயன் என்னையோ! சிறுவரும் இகழ்தற்கிடனாமே! இங்கிலிசில் இப்படிச் செய்யத் துணிபவர் யாருமில்லையே! தமிழ்க் கல்வியொன்றே பகிடிக்கிடனாயிற்று! ! "

என்று கேட்டார்,

ஈழத்திலே சைவத்தையும் தமிழையும் பாதுகாத்துத் தந்த நாவலர் பெருமான் வழியிலே சிந்தித்துச் செயலாற்றி உயர்ந்து நிற்கும் பண்டிதமணியவர்களுக்குப் பாராட்டு விழா எடுக்கப்பெறும் இம் மகோன்னதமான வேளையிலே நாவலரவர்

களின் முன்னேய கூற்றுக்கள் முந்திக் கொண்டு வந்துநிற்கின்றன.

நாவலரவர்கள் இல்லை: அதனல் இன்று கணக்கற்ற வித்துவான்களும் பண்டிதர்களும் அறிஞர்களும் தமக்குத் தாமே பட்டமிட்டுக் கொள்ள முடிந்தது. உண்மையான தமிழ் வித்துவாமிசர் ஆங்காங்கே குடத்துள் விளக்காகத் தாம் பெற்ற பட்டத்தையும் மறந்து, மறைந்து வருகின்றுர்கள். ஈழத்திலே தொல்காப்பியத்தையும் நன்னூலையும் கரைத்துக் குடித்தவர் இல்லையா? சித்தாந்த விற்பன்னர் இல்லையா? கந்தபுராணம் கசடறக் கற்றவர்கள் இல்லையா? இருக்கிறுர்கள். ஆனல் அவர்கள் சமூகத்திலே சாதித்தது என்ன? உண்மையான மரபுவழி வந்த தமிழ்க் கல்வி ஈழத்தில் மறைந்து விட்டதோ என்று நினைக்க வேண்டிய சூழல் உருவாகத் தொடங்கிற்று. போதாததற்கு அரைவேக் காடுகளின் அட்டகாசம் வேறு! இந்நிலையில் மரபுவழித் தமிழ்க் கல்வியின் உயிரைப் பிடித்துக்கொண்டு நின்றவர் பண்டிதமணியவர்கள்தாம்.

கலாநிதிப் பட்டம் பெறும் அளவிற்குப் பண்டிதமணியவர்கள் என்ன சாதித்து விட்டார்? இக்கேள்வியை மரபுவழி வந்த தமிழ் அறிஞர் தம்மைத் தாமே கேட்டு விடை காண வேண்டும். இல்லாவிடில் தமிழ்க் கல்வி பற்றி நாவலரவர்கள் 1860 இலே கூறிய நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டே வரவேண்டியிருக்கும்.

பதினேழு வயதிற்குப் பின்பு முறையாகத் தமிழ் படிக்கத் தொடங்கிய மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை, ஈழத்தின் ஐந்தாம் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராகி ஆசிரியர் பயிற்சியும் பெற்று 1929 இலே இருந்து முப்பது வருடங்களாக இருநூற்றெழுபத்தைந்திற்கு மேற்பட்ட பாலபண்டிதர், பண்டிதர்களுக்குப் பண்டிதமணியாக விளங்கினர். தபோவனத்தின் குடிலிலே வேலையொழிய ஒடுங்கிவிடாது தான் எடுத்த பிறவிக்கு வேண்டிய பயனைச் சிந்தித்துச் செயலாற்றியமையால் பண்டிதமணியவர்கள் குடத்துள் விளக்காக அமைந்து விடவில்லை; பேச்சாலும் எழுத்தாலும் நாவலரவர்களை உயிர்ப்பித்தார்; குமாரசுவாமிப் புலவரும் கைலாசபிள்ளையும் விட்டுச் சென்ற இடத்தை நிரப்பினர்.

ஈழத்துத் தமிழர் பாரம்பரியம் எத்தகையது என்று பெருமை கொள்ள வைத்தவர் பண்டிதமணியவர்கள். அவர் பேச்சாலும், எழுத்தாலும் தூண்டப்பெற்ற பாரம்பரிய உணர்வு, ஈழத்துத் தனித்துவத்தையும், சிறப்பையும் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்குக் காலாயிற்று. அவர் தோற்றிய இயக்கத்தால் இன்று ஈழத்துத் தமிழ்மகன் பெருமைகொள்ளக் கூடியதாய் இருக்கின்றது.

மூன்ருவது கண் நீடுவாழியவே!
தமிழ் நீடுவாழியவே!
சைவம் நீடுவாழியவே!

---

ஒன்று நம்மை நடத்துகின்றது. இரங்காமலிருக்கமாட்டாமை அதனியற்கை. சரீராதிகள் நம்மை நன்மைப்படுத்த அது உபகரித்தவை. அதன் கருத்தறிந்து அவற்றை உபயோகித்தல் வேண்டும். கருத்தறிய வழியுண்டு. அதன் கருத்தறியாத செயல் வீண்செயல்.

# என்ன மாதவம் செய்தனம்!

(பண்டிதை பொன். பாக்கியம், சுழிபுரம்.)

இலக்கிய கலாநிதி, சித்தாந்த சாகரம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைப் பற்றித் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் புகழ்ந்து கூறுகின்றது; பாராட்டுகின்றது. அவர்களிடம் கல்வி கற்ற நாமோவெனில், ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் ... ...? எண்ணும் நிலைக்கு உள்ளாகி விட்டோம்.

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் ஈழவழநாடு முழுவதும் சைவத்தமிழ் ஒளியைப் பரப்பிவந்தது சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை. இந்தப் பயிற்சிக் கலாசாலையிலே சைவத்தமிழ் ஆசானுக விளங்கியவர்தான் இன்று பாராட்டு நாயகனுக விளங்கும் பண்டிதமணியவர்கள். அன்னுரை மாணவராகிய நாம் பண்டிதரையாவென்றே அருமையாக அழைப்போம். எங்கள் ஞானகுரு அங்கு வாழ்ந்த மௌனதவ முனிவராம் உப அதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்களை நாம் அறிந்து வாழ உபகாரியாக இருந்து வந்ததோடு தாமும் அவர்களைக் கௌரவித்து அவர் கருத்துக்களைப் பேணி வாழ்ந்தவர். எங்களுக்குக் கிடைத்த ஞானத் தெய்வங்கள் இந்த இருவருமாவர்.

ஆறுமுக நாவலர் அவர்களது ஞான பரம்பரையிலே உதயமானவர் நமது பண்டிதரையா அவர்கள். ஆதலால் நாவலர் ஐயா அவர்கள்பால் விளங்கிய விலை மதிக்க முடியாத பண்பாட்டு அம்சங்கள் பல பண்டிதரையா அவர்களிடமும் விளங்குகின்றன. நாவலர் பெருமான் தமது விஞ்ஞாபனம் ஒன்றிலே, 'கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டேனும் வாங்காது விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமே யுடையது என் ஜென்ம தேசமாகவும், நான் தமிழ் மொழியினதும், சைவசமயத்தினதும் வளர்ச்சி குறித்து என் இம்மைப் பயன்களைத் துறந்து வாழ்கிறேன்' எனக் கூறியுள்ளார். இந்த அருமருந்தன்ன வாசகங்கள் சைவத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும், தமது வாழ்வின் போக்கை, நோக்கத்தை நிலைபேறுடையதாக வகுத்து வாழ வழிகோலுவ தொன்றுகும்.

அந்த வகையிலே நாவலர் ஐயா அவர்களைப் பல வழிகளிலும் தழுவிப், பிரமசரிய நெறியை மேற்கொண்டொழுகி வாழ்பவர்தான் நமது ஞானத் தந்தையார் அவர்கள்.

பண்டிதரையா தமிழ்மொழியை மாத்திரம் கற்றவர் என்று பலரும் மேலெழுந்தவாரியாக நினைக்கின்றனர். ஆனுல் அவருக்கு ஆங்கில இலக்கியங்களில் இருக்கும் ஆர்வம், அவற்றுக்கு அவர் கூறும் விமர்சனச் சிறப்பு, அவற்றைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்புநோக்கும் ஆற்றல் இவற்றை அவரோடு நன்கு பழகியவரே உணருவர்.

பண்டிதரையா அவர்களது பேச்சு, எழுத்து நூலுரை என்பவை பலரும் கேட்டு, படித்து இன்புறுபவை. அவை தனியழகுடையவை, தனித்துவம் வாய்ந்தவை. அவற்றைப் பின்பற்றப் பலர் முயல்வதைக் கண்டு நாம் இன்புறுகிறோம்.

எங்கள் குருநாதருக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் இலக்கிய கலாநிதி என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது. ஏன் இலக்கிய வாரிதி என்றுகூடப் பட்டம் வழங்கலாமே என நாம் எண்ணுகின்றோம். பண்டிதரையா இலக்கியத்தைச் சுவைக்கும் பாங்கை நமக்குக் காட்டித்தந்தவர்கள். தாம் பெற்ற இன்பத்தை நாமும் பெற வழிகாட்டியவர் அவர். கலாசாலையிற் கல்வி கற்கின்ற காலத்திலே தமிழ் விரிவுரை மண்டபம் இன்ப வெள்ளத்தில் மிதக்கும், நமது மனமோ இந்திரன் பதத்தைக் கூட அவ்வேளையில் வெறுத்து ஒதுக்கும்.

'உனக்கு நன்மை செய்யத் தெரியுமா?'

'அறன்றன்பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம் வீண் செயல்'

'மேன்மைகொள் சைவநீதி'

'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளே'

'அறத்தான் வருவதே இன்பம்'

'புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே'

இத்தகைய அநேக ஆணித்தரமான வாசகங்களைப் பண்டிதரையா நமது மனசில் விதைத்திருக்கின்ருர். இவை நம் வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. உலகாயதமெனும் சண்டமாருதம் நம்மை நிலைகுலைய வைக்கும் வேளைகளில் நமக்கொரு கலங்கரை விளக்கமாகத் திகழ்பவர் நமது ஐயா அவர்கள்.

மனிதனுடைய வாழ்வு சமய வாழ்வாக மலர வேண்டும். பிறவியின் நோக்கம் முத்தியின்பம் அடைவதுதான் என்பதைப் போதனையிலும், சாதனையிலும் நிலைநாட்டியவர் நமது ஐயா அவர்கள்.

பலராலும் பாராட்டப் படுபவரும், நாவலர் பெருமானின் ஞான பரம்பரையில் உதித்தவரும், சைவத் தமிழ்க் காவலருமாகிய பண்டிதரையா அவர்களிடம் கல்வி கற்க, அவரோடு சேர்ந்து பழக, அவர்களை அடிக்கடி தரிசிக்க, அவர்களது ஆசியைப் பெற, அவர் மாணவர் நாம் என இறுமாப்புடன் கூற மாணவர்களாகிய நாம் என்ன மாதவம் செய்தனம்!

இன்று எண்பதாவது வயதை அடைந்திருக்கும் நமது ஐயா அவர்கள், இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, சைவ சமயத்துக்கும், தமிழ் மொழிக்கும் தொண்டாற்ற வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

---

## கற்ருேர்க் கணி

(உரும்பிராய் மு. வைத்தியலிங்கம் அவர்கள்)

1. மட்டுவில் சைவம் வளர்த்த மரபுதித்தோன்
சிட்டனுய் மன்னுசின்னத் தம்பியவர் — இட்டமாய்
கற்ருேர்க் கணியாங் கணபதிப் பிள்ளைமகப்
பெற்ருர் தமிழ்சைவம் பேண.

2. சைவந் தழைக்கத் தமிழ்த்தாய் உளங்குளிர
வைவேற் குமரன் வளர்காதை — கைவந்த
தொல்தக்ஷ காண்டவுரை கண்டாய் கலாநிதியே
பல்லாண்டு பாரினில்நீர் வாழ்க.

# பண்டிதமணி ஓர் இலக்கியமேதை

— திரு. சோ. சிவபாதசுந்தரம் —

இருபது வருட இடைவேளைக்குப் பிறகு யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் வழியாகப் பிரயாணஞ் செய்யும்போது ஒரு புதிய அனுபவமாயிருந்தது.

அதிகாலையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் மோட்டாரில் போய்க்கொண்டிருக்கும்போது அருமையான இலுப்பைப்பூ வாசனை வந்துகொண்டிருந்தது. இளமைப் பருவத்தில் எங்கள் வீட்டு முற்றத்து இலுப்பை சொரிந்த பூவின் ஞாபகம் வந்தது. அத்துடன் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நண்பர் 'கல்கி' யுடன் யாழ்ப்பாணத்தில் பயணஞ் செய்தபோது இதே இலிப்பைப்பூ வாசனையைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டதும் ஞாபகம் வந்தது. 'கள்வனின் காதலி' நாவலைப் பற்றிச் சொல்லி இந்த இலுப்பைப்பூ வாசனை எனது தொடர் கதையிலும் வருகிறது. நான் பிறந்த கிராமத்தில் அனுபவித்த இந்தச் சுவை எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று அன்று அவர்கள் சொன்னதாக ஞாபகப் படுத்திக் கொண்டேன். திருநெல்வேலியில் நான் காணச் சென்ற ஒரு பெரியவர் எனது இளமைக் காலத்திலிருந்து (சரியாக ஐம்பது ஆண்டுகள்) பழகிய ஒருவர். காஷாயம் தரிக்காத நைஷ்டிகப் பிரமசாரி. சைவத்தையும் தமிழையுங் காத்த ஆறுமுக நாவலரின் மாணுக்கரின் மாணுக்கர். அதே வழியில் ஒழுகி வருபவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பழைய பரம்பரைப் பண்டிதர். ஆங்கிலம் கற்காதவர். ஆனுல், நவீன இலக்கியத்தையும், விஞ்ஞானத்தையும் வேதத்தோடும், உபநிஷத்தோடும் சங்க இலக்கியங்களோடும் இணைத்துப் பேசும் ஆற்றல் படைத்தவர். இலங்கைவாழ் தமிழ் மக்கள் யாவரும் பண்டிதமணி என்று அன்போடும் அபிமானத்தோடும் அழைத்துவரும் பெரியார் பண்டிதமணி கணபதிப்பிள்ளை.

பண்டிதமணி ஒரு இலக்கிய மேதை. 'ஆனந்தவிகட'னில் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சேர்ந்து அதில் தலையங்கம் எழுதிய புதிதில் அந்த உரைநடையை வைத்து, திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு இலக்கிய விமரிசனச் சொற்பொழிவுகளைச் செய்த தமிழ்ப் பண்டிதர் இவர் என்ருல், தமிழ்நாட்டுப் பண்டிதர்கள் ஆச்சரியப்படுவார்கள். தற்காலத் தமிழ் இலக்கியத்தைப் பற்றி இன்றுதான் நமது பல்கலைக் கழகங்கள் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றன. 1930, 1931-லேயே இதைப்பற்றி ஆராய்ச்சி விமரிசனஞ் செய்து யாழ்ப்பாணத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழிகாட்டியபெருமை பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களைச் சாரும்.

திருநெல்வேலியில் அமைதியாக ஒரு வீட்டின் வாசலையடுத்து, கீற்றிஞல் வேய்ந்த கொட்டகையில் சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்த பண்டிதமணியை இப்போது ஒரு யாக்ஞவால்கியராகக் கண்டேன். மகரிஷியாக உருவிலும், உபநிஷத்திலே திளைத்து நிற்கும் உள்ளத்திலும், பேச்சிலும் அவர்களைக் கண்டபோது யாழ்ப்பாணம் தவஞ் செய்திருக்கிறது என்ற எண்ணந்தான் தோன்றியது. இலக்கண இலக்கியங்களில் பொழுதெல்லாம் கல்லூரி மாணவர்களுக்கு உபநியாசம் செய்த பண்டிதமணி இப்போது உபநிஷத்துக்களைப் பற்றியே ஆராய்ந்து கொண்டிருக்கிருர். இருந்த போதிலும் இந்தக் கல்விக் கடல் இன்றைய கல்விப் போக்கையும் அவதானிக்கத் தவறுவதில்லை. சென்னையிலிருந்து இன்று புதிதாகத் தோன்றி வெளிவரும் பத்திரிகைகளைப் பற்றியும் விசாரிக்கிருர். பழைய நண்பர் 'கல்கி' யை மறக்காமல், அவர்கள் உருவாக்கிய பத்திரிகை நின்றுவிட்டதே என்று கவலை தெரிவித்தார். மீண்டும் வெளிவரப் போகிறதாகத் தெரிகிறது என்று நான்

சொன்னதும் மகிழ்ச்சியோடு வாழ்த்தினர். பொழுது போவதே உணராமல் பண்டித மணி அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது ஆறுமுக நாவலரின் வாரிசு ஒருவர் யாழ்ப்பாண பாரம்பரியத்தின் சின்னமாக விளங்குவதை எண்ணிப் பெருமையடைந்தேன். இந்தப் பெரியாரை இலங்கைப் பல்கலைக் கழகம் சமீபத்தில் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிப்பது இதுதான் முதற் தடவை. இதனல் இலங்கைப் பல்கலைக் கழகம், டாக்டர் உ. வே. சாமிநாதையருக்குப் பட்டம் வழங்கிப் பெருமை தேடிக்கொண்ட சென்னைப் பல்கலைக்கழகம் போல, புதியதோர் பெருமையைத் தேடிக் கொண்டது,

25-6-78 கல்கியிலிருந்து.

---

# தேசிகர் நாயகர் வாழ்க

பண்டிதை த. வேதநாயகி, வேலணை

வெண்பா

1. ஓமென்னு மந்திரத்தே ஓங்குங் கணபதியே
நாமிரப்போம் ஓர்வரம் நீ நல்கியருள் – பூமேல்
கணபதிப் பிள்ளை கலாநிதியார் வாழ்க
உணர்வினியார் ஊழி உயர்ந்து.

ஆசிரிய விருத்தம்

2. நன்னெறி ஞானம் அன்பெனுங் காட்சி நண்ணினுர் பண்டித மணியார்
சொன்னலம் சடையான் புகழ்க்கென அமைந்தார் சூழ்வதும் வைதிக சைவம்
மன்னுயிர் வாழ மாணவர்க் குய்தி வழங்குவார் சிவதன்மங் காட்டி
முன்னுவார் அத்து விதமெனு நிலைமை முதல்வனுர் கருணையே நுகர்வார்.

3. முக்குறித் தொகுதி சந்தனத் திலகம் முறுவல்பொற் ருமரை முகத்தார்
அக்குமா லையினர் 'அட்சி'வித் தையினுல் அளியொளிர் அம்புய நயனர்
பக்குவ ரருந்தும் பரனுரை பகரும் பண்பினர் பங்கய வாயர்
மிக்கது மெய்யே யெனநிமிர் தம்ப மேனியர் பண்டித மணியார்.

4. அவரவர்க் கொத்த இலக்கியங் காட்டி அதுவது நுகர்சுவை யளிப்பார்
அவரவ ராற்றல் கண்டுப தேசம் அளிப்பவர் ஆயிர முகத்தால்
இவர்தவம் பிரம சரியமென் பதனை ஏத்துவார் பெரியரெல் லாரும்
இவர்சிவ னடியார் எம்பெருந் தலைவர் இலக்கிய கலாநிதி வாழ்க.

5- ஈசன்பா லன்பே சுவையென வுணர்த்தும் இலக்கிய கலாநிதி வாழ்க
பூசுவெண் ணீற்றூர் புனிதர்ஒண் கலையார் பொன்னெனுந் தன்மையார்
வாழ்க
தேசினுற் சூழல் சிறந்தினி தமையும் தேசிகர் நாயகர் வாழ்க
காசினிக் கினியர் பண்டிதர் ஐயர் கணபதிப் பிள்ளையார் வாழ்க.

6. காண்பதற் கினியர் கருதுதற் கினியர் கலந்தவர் பிரியலா காதார்
சேண்விளங் கவிரொளி தொடர்ந்தெழுந் தொளிர்வார் திணியிருட்
பொய்துரப் பார்தாம்
வீண்செயல் நீக்கி வினைப்பயன் தலைவன் விதித்தது மருந்தினி
தென்பார்
மாண்பயன் வழங்கும் பண்டிதமணியார் வாழியர் நிலந்தொழ மகிழ்ந்தே.

ஆசிரியப்பா

அலர்கொண் டரனடி அருச்சனை புரிபவர்
பலர்தொழும் மேன்மையர் பண்டிதர் ஐயர்
எண்சுவை சொரியும் இலக்கிய கலாநிதி
பண்ணிசை ஓசையார் பண்டித மணியார்
கண்ணொளி யருளுங் கணபதிப் பிள்ளையார்
தண்ணிழல் வழங்குந் தருநிகர் குருமணி
செந்தமிழ் அன்பியல் தெளிந்த அந்தணர்
மந்திர நான்மறை வடமொழி நோக்கினர்
ஆடுந் தலைவன் அம்மையோ டருள
நீடு வாழ்க நீணிலத் தினிதே.

---

## வாழி இனிது

பண்டிதருள் மாமணியே! பல்கலையும் ஆய்கழகம்
கண்டுணர்ந்து தேர்ந்தே கலாநிதியாம் - எண்டிசையும்
போற்றுபெரும் பட்டத்தைப் போற்றி நினக்களித்தார்
ஏற்றுவந்து வாழி இனிது.

எண்டிசை ஏத்தக் கல்வி
ஏற்றத்தால் உயர்ந்தே நிற்கும்
பண்டித மணியே, போற்றி!
பல்கலைக் கழகம் உன்றன்
திண்டிறல் கண்டே தந்த
சீர்மிகும் 'அறிஞர்'ப் பட்டம்
பண்டுசெய் தவந்தான் என்னே!
பட்டங்கள் வாழ வந்தோய்!

வித்துவான் சி. ஆறுமுகம்

இலங்கைப் பல்கலைக்கழக வேந்தரும்
ஸ்ரீ லங்கா குடியரசின் ஜனாதிபதியுமான

# கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள் தலைமையில்

31-5-78 புதன்கிழமை மாலை
பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற
இலங்கைப் பல்கலைக்கழக விசேட பட்டமளிப்பு விழாவின்

# அறிமுகப் பேச்சு

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

*அறிமுகப்படுத்துபவர்:* **பேராசிரியர் சு. வித்தியானந்தன்**
*யாழ்ப்பாண வளாகத் தலைவர்*

பல்கலைக்கழக வேந்தர் அவர்களே,

இவ் விசேட பட்டமளிப்பு விழாவிலே, இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் மரபு வழித் தமிழ்க் கல்வி அறிஞருள் மிகவும் பிரபல்லியம் வாய்ந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு, அவர் சமுகமளிக்காத நிலையில், கௌரவ இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்கும்படி தங்களைக் கேட்டுக்கொள்ளும் அரிய வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலே மட்டுவில் என்னும் கிராமத்தில் 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் நாள் பிறந்த பண்டிதமணி அவர்கள், உரையாசிரியர் ம. ம. வேற்பிள்ளையாலே தொடக்கி வைக்கப்பட்ட சந்திர மௌலீஸ்வரர் வித்தியா சாலையிலே தன் ஆரம்பக் கல்வியினைப் பயின்று, பின்னர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் ஆறுமுகநாவலர் தொடக்கிய சைவப் பிரகாச வித்தியாசாலையிலே தொடர்ந்து கல்வி பயின்றார். அக்காலத்தில் மிகவும் புகழ் வாய்ந்த தமிழ் அறிஞர்களான கைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆகியோரிடம் கல்வி பயின்றார்.

1925 இல் திரு. பண்டிதமணி கணபதிப்பிள்ளை மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதப் பரீட்சையிலே சித்தியடைந்தார். இப் பரீட்சையிலே சித்தியடைந்த முதல் ஐந்து இலங்கையருள் இவரும் ஒருவராவர். பின்னர், கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலே பயிலுங் காலத்தில், அங்கு விரிவுரையாளராயிருந்த பண்டிதர் மகாலிங்கசிவத்தினுடைய தொடர்பு ஏற்பட்டது. அதன் பின்னர் திருநெல்வேலிச் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1929 இற் சேர்ந்து முப்பது வருடங்களாக அங்கு தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றினார்.

தமிழ்க் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதே அவருடைய வாழ்வாக அமைந்தது. தன்னுடைய கருத்துக்களைப் பரப்பும் நோக்க மாக அவர் பிரமச்சாரியாகவே இருந்து தமிழ் ஆய்வு செய்வதிலும், மாணவர்க்கும்

ஆசிரிய மாணவர்க்கும் கற்பிப்பதிலும் தன் பெரும்பாலான காலத்தைக் கழித்தார். சைவம், இந்து தர்மம், பண்டைய தமிழ் இலக்கியம் ஆகியன பற்றி நூற்றுக் கதிகமான கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். சைவ நற்சிந்தனை, இலக்கிய வழி, கதிர்காம வேலன் பவனி வருகிறான், பாரத நவமணிகள், சமயக் கட்டுரைகள், நாவலர் ஆகியன அவர் வெளியீடுகளிற் சிலவாகும்.

கந்தபுராண போதனை, கந்தபுராண கலாசாரம், கம்பராமாயணக் காட்சி ஆகியன அவருடைய மிகச் சிறந்த பிற நூல்களாகும். கந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய தக்க காண்டத்துக்கு அவர் எழுதிய பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வெளியீடாக வெளியிடப்பட்டது. அது அவருடைய ஆக்கங்களிலே தலை சிறந்ததாகும். இதன் மூலமாக எக்காலத்தையுஞ் சார்ந்த சிறந்த அறிஞர் வரிசையிலே ஓர் இடத்தைப் பெறும் உரிமையுடையவரானார். இன்று இலங்கையிலே எம்முடன் வாழும் அறிஞர்களுள் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விரித்துரைப்பதிலே தலைசிறந்த வல்லுநராக இவருள்ளார். இத்துறை சேர்ந்த பல உரைகளும் கட்டு ரைகளும் இன்றும் வெளியிடப் படாமலுள்ளன.

சிறந்த எழுத்தாளராகவும், ஊக்கமுள்ள ஆசிரியராகவும், பேச்சாளராகவும், இலக்கிய விமரிசகராகவும், கவிஞராகவும், உரையாசிரியராகவும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை இலங்கையிலும் பிற நாடுகளிலும் புகழ் பெற்றார். அவருடைய திறமை கண்ட இந் நாட்டு அறிஞர்கள் அவருக்குச் சித்தாந்த சாகரம் என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தனர். எனினும், அவருக்கு அளிக்கப்பட்ட பண்டிதமணி என்னும் பட்டமே பெருவழக்காயுள்ளது. அவருடைய ஆராய்ச்சித் திறனை யும் தமிழ்த் தொண்டினையும் பாராட்டு முகமாகவே இப் பட்டம் வழங்கப்பட்டது. பெருந் தொகையான பண்டிதர்கள், தமிழறிஞர்கள் ஆகியோர் தங்கள் திறமைக்குப் பண்டிதமணியின் நெறிப்படுத்தும் திறமையே காரணமெனக் கொள்வார்கள். கோயில்களிலே புராண படனம் செய்வதிலே அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். பல இலக்கிய மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் பல விரிவுரைகள் ஆற்றியுள்ளார். இளமைக் காலத்திலே எவ்வளவு துடிப்புடன் இலக்கிய, கல்வி ஆய்வுகளிலே ஈடு பட்டாரோ, அதே தன்மையில் ஓய்வு பெற்ற பின்னரும் அவர் உழைத்தார்.

இந்த நாட்டிலே தமிழர் சமயத்தினையும் பண்பாட்டினையும் பாதுகாக்க அரும் பாடுபட்ட ஆறுமுகநாவலர் தனக்கென ஒரு மரபினையும், அம் மரபினைப் பேணும் நல்லறிஞர் வரிசையினையும் உருவாக்கிவிட்டார். அந்த வரிசையில் வந்தவர் அறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆவர். யாழ்ப்பாணக் கலாசாரத்தூதராகவும், கல்வி யின் தூதராகவும் விளங்கும் பண்டிதமணி அவர்கள், ஆறுமுக நாவலர் எவ்வாறு தனக்கென ஒரு அறிஞர் குழாம் வரிசையினை உண்டாக்கினாரோ, அதே போல, இன்று இந் நாட்டில் பண்டிதமணி, அறிஞர் குழாம் ஒன்றினை உருவாக்கியுள்ளார். ''பண்டிதமணியிடம் பயின்றோம்'' என்று கூறுவதிலே இவர்கள் பெரிதும் பெருமை யடைவர்.

மாண்பு மிகு வேந்தர் அவர்களே,

இவ்வாறு தனக்கென ஒரு பரம்பரையை உண்டாக்கியவரும், வாழ் நாள் முழுவதையும் சமயத்துக்கும் இலக்கியத்துக்கும் அர்ப்பணித்தவருமாகிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு, அவர் சமுகமளிக்காத நிலையில், கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

# UNIVERSITY OF SRI LANKA

This is to certify that

*Pandithamani S. Kanapathipillai*

was admitted to the degree of

*Doctor of Letters*

*(honoris causa)*

at the Special Convocation

holden in Colombo on 31st May 1978

Witness our hands this Thirty First Day of May

One Thousand Nine Hundred and Seventy Eight

P.P.G.L. Siriwardene

*Vice-Chancellor*

[illegible]

*Registrar*

உ

சிவமயம்

## இலக்கிய கலாநிதி, பண்டிதமணி

# உயர்திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

# 80வது வயசுப் பிறந்ததின வாழ்த்து.

வடகடலையுந் தென்கலையும் வாரி யுண்டு
வான்சுடரும் நல்லையிலே வந்து தோன்றி
குடமுனியும் கலைபயின்ற குமரன் பாதம்
கூடாது கூட்டமொடு கூடி நின்று
நடமாடுந் தமிழ்த்தெய்வம் நாவ லன்போல்
நானிலத்தில் நாமெய்யாக் கண்ட தில்லை
அடலேறு மவன்பாதம் அணிந்து வாழும்
அரியதமிழ்ப் பண்டிதநன் மணியே வாழ்க.

நாவலனே தன்மூச்சாய் நாளும் வாழ்ந்து
நல்லதமி ழமுதமழை நவமாய் நாட்டில்
தாவலர்செந் தமிழ்த்தாகந் தணியப் பெய்து
தண்டமிழே தானுகத் தான தானேன்
காவலருங் கொன்றையணி கண்டன் பாதங்
கருத்தன்றி மற்றென்றுங் கனவுங் காணன்
காவலர்முன் காத்ததமிழ்க் கன்னித் தாயைக்
கண்மணிபோல் வளர்க்கின்ற கலைஞ ரேறே.

நெறியாலும் அறிவாலும் நினைவி னாலும்
நிழல்போலத் தொடர்கின்ற நீர்மை யாலும்
குறியோடு வாழ்கின்ற சைவ வாழ்வு
கோடாது ஒளிவீசுங் குளிர்ந்த பானு
அறியாரும் பண்டிதநன் மணியென் றேத்தும்
அண்ணல்கண பதிப்பிள்ளை ஆசா னுகிச்
சிறியோர்க ளில்லாத திருநெல் வேலி
சீர்பரவு கல்லூரி சிறக்க வந்தோன்.

ஆரியமுஞ் செந்தமிழும் ஆழ்ந்து கற்று
அவைகூறும் பிரகாரம் அணைந்து வாழ்வோன்
வீரியரா யெவர்வரினும் விதண்டா வாத
வெற்றுரைகள் பகராமல் விடைய ளிப்போன்
நேரியதே யென்கின்ற நெறிகள் யாவும்
நிலைநாட்டித் தாம்வாழ்ந்து நிற்க வைப்போன்
பேரிதயந் தெய்வமுறப் பேணி வாழும்
பெருங்குருபண் டிதமணியே! பெரிதும் வாழ்க.

தண்டமிழுந் தனதன்புந் தமியேற் கீந்து
தாரணியிற் தவித்திட்ட தனிநா யேற்கு
எண்டிசையும் புகழ்மணக்க விளக்கந் தந்து
இலக்கணமும் இலக்கியமும் இனிக்க வைத்து
அண்டினவன் என்றென்னை அணைத்துக் கொண்டு
அகவாழ்வும் புறவாழ்வும் அளித்த ஐயன்
ஒண்டொடிபங் கினனருளால் உலக முய்ய
உயர்ஞான பீடமென ஊழி வாழி.

— இ. சிதம்பரப்பிள்ளை

---

## பண்டிதமணிக்கு வணங்கும் கரத்தோடு

# வாழ்த்து

1. மட்டுவில் என்றவூர் மன்னுசின்னத் தம்பியார்
மட்டுநேர் சொல்கதையில் மன்னனும் — கிட்டுதவப்
பேற்றால் கணபதிப் பிள்ளையைப் பிள்ளையெனுந்
தேறலாய்ப் பெற்றார் தமக்கு.

2. சுன்னைக் குமார சுவாமிப் புலவரிடம்
மன்னுதமிழ் கற்றலில் மன்னவனாய் — நின்ற
கணபதிப் பிள்ளை கலாநிதி யானார்
வணங்குங் கரத்தோடு வாழ்த்து.

— புலவர் நா. சிவபாதசுந்தரனார்

# கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

முத்தமிழிலும் துறைபோன உத்தமக் கவி, அறிவுத்தந்தை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கட்கு இலங்கையில் அதியுயர் கல்விப்பீடமாகிய இலங்கைப் பல்கலைக் கழகம் கடந்த மாதம் 31ந் திகதி புதன் கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்வித் துறையில் அதியுயர் பட்டமாகிய '' கலாநிதி '' என்கின்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. தள்ளாத வயதில் உடல்நலம் குன்றியிருக்கும் காரணத்தினால் இவரால் கொழும்புக்கு வந்து பட்டமளிப்பு விழாவில் பங்கு கொள்ள முடியவில்லை. உலக நூலாராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக் கருத்தின்படி உலகத்தில் உள்ள தொன்மை வாய்ந்த சில மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாக விளங்குகின்றது. இப்படியான சிறப்பு மிக்க தொன்மை வாய்ந்த தமிழ் மொழியில் ஒருவர் கலாநிதி பட்டம் பெறுகின்றார் என்றால் தமிழ் பேசும் நல்லுலகு அவரைப் பாராட்டாதிருக்க முடியாது. ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'' என்ற வள்ளுவன் கூற்றிற் கிணங்க தமிழன்னை தன் தவப்புதல்வன் ஒருவன் அறிவாளிகள் நிரம்பிய சபையில் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப் படுவதனையிட்டு தலைநிமிர்ந்து நிற்கின்றாள். எம்மவர்களை நாமே போற்றுவதில் எத்தகைய சிறப்பும் தோன்றாது. இதன் காரணத்தினாற்றான் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்கட்கும் பொதுவாக உள்ள பல்கலைக் கழகம் வழங்கும் கலாநிதிப் பட்டம் தனிச் சிறப்பினைப் பெறுகின்றது.

தமிழ் என்றால் தித்திப்பு என்பதனைப் போல தமிழ் என்றால் கலை என்ற பொருள் படும் என்பது சிலப்பதிகாரச் சொற்றொடரினால் வலியுறும். தமிழ் ஆகிய தெய்வமாக்கலை ஓதும் விற்பன்னர்கட்கு கலைஞர் என்னும் பட்டம் சாலப்பொருத்தமானது. இயல், இசை, நாடகம், ஆகிய முக்கலைகளிலும் கரைகண்ட உத்தம கலைஞர்களைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர், ''முத்தமிழ் துறையின் துறைபோகிய உத்தமக் கவிகட்கொன்று செப்புவேன்.'' என்ற அடிகளில் 'உத்தமக் கவிகள்' என்று விளிக்கின்றார். முத்தமிழிலும் துறைபோய, அதாவது முக்கலைகளிலும் கரைகண்ட உத்தமக் கவிகட்கு கலாநிதிப் பட்டம் வழங்கப் பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழத் தமிழகத்தின் அறிவொளியாகத் திகழ்கின்றார்.

இன்றைய யாழ் வளாகத் தலைவராக இருக்கின்ற பேராசிரியர் வித்தியானந்தன் முன்பு பேராதனை வளாகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்தில் ஒரு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து பேசும்போது தனதுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'ஆறுமுக நாவலருக்குப் பின் பிறந்த தமிழ் அறிஞர்களை இந்த நாடு கௌரவிக்கத் தவறிவிட்டது. குறிப்பாக எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களை இலங்கைப் பல்கலைக் கழகம் கௌரவிக்கத் தவறி விட்டது' என்று குற்றஞ் சாட்டிப் பேசினார். இதனையே தான் ஏனைய தமிழ் அறிஞர்களும் கூறத்தொடங்கினார்கள். தகுதியிருந்தும் இதுவரை ஒரு தமிழ் அறிஞர்கட்கும் கலாநிதிப் பட்டம் அளித்து கௌரவிக்கப் படவில்லை என்று சான்று காட்டிக் குறைகூறத் தொடங்கினர். தார்மீக ஆட்சியில் இத்தகைய பாரபட்சம் நிலவக் கூடாது என்பதனை உணர்ந்த இன்றைய அரசு நாவலருக்குப் பின் முதன்முதலாகத் தமிழ் அறிஞர்கட்கு கலாநிதிப் பட்டமளித்து அதன் மூலம் வரும் பெருமையினை தட்டிக்கொண்டு சென்று விட்டது.

ஆறுமுகநாவலருக்குப் பின் முதன்முதலாக ஈழத்தில் கலாநிதிப் பட்டம் பெறுபவர் என்கின்ற வகையில் நாவலருடன் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களை ஒப்பிட்டு நோக்குவது சாலச் சிறந்ததே. ஆறுமுகநாவலருக்கு ''நாவலர்'' என்கின்ற பட்டத்தினை திருவாவடுதுறை ஆதீனம்

வழங்கியது. பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு "கலாநிதி" என்கின்ற பட்டத்தினை இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது. ஆதீனத்தினால் முதன்முதல் வழங்கப்பட்ட "நாவலர்" என்கின்ற சிறப்பு வாய்ந்த பட்டத்தினை ஆறுமுக நாவலர் எங்ஙனம் பெற்றாரோ, அதுபோல இலங்கைப் பல்கலைக் கழகத்தினால் தமிழறிஞர் என்கின்ற வகையில் வழங்கப்பெறும் "கலாநிதி" என்னும் அதி உயர் சிறப்புப் பட்டத்தினை முதன் முதலில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பெறுகின்றார். நாவலர் எண்ணிலடங்கா அறிஞர்களைத் தனது சீடர்களாகக் கொண்டிருந்தார். இதுபோலவே கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் இன்று சிறப்புற்று விளங்கும் பல வித்துவான்களையும், பண்டிதர்களையும் தனது சீடர்களாகக் கொண்டிருந்தார். ஆறுமுக நாவலர் பிரசங்கம் செய்து சைவத்தையும், தமிழையும் வளர்த்தார். அதுபோன்றே பண்டிதமணியும் பல மேடைகளை அலங்கரித்து ஆற்றிய சொற்பொழிவுகளை நாம் மறக்க முடியாது. இவரது பேச்சில் கருத்துத் தெளிவு, தருக்க அமைதி, சொற்சித்திரம், உணர்ச்சி வேகம் என்பன மிளிரும். தவறான கருத்துக்களை எப்படி நாவலர் பெருமான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளாமல் எதிர்த்து வந்தாரோ அதுபோல பண்டிதமணியும் நெற்றிக் கண்ணைத் திறக்கினும் குற்றம் குற்றமே என்கின்ற நக்கீரன் பாணியில் மிகத் துணிச்சலுடன் தவறுகளைச் சுட்டிக்காட்டி எவருக்கும் பயப்படாது திருத்தி வந்தார். இவருடைய சிலேடைச் சொல்லம்புக் கண்டனம் மிகக் கூர்மையாகவே இருக்கும். தவறான கருத்துக்களைக் கூறும் இவரது சொல்லம்பிலிருந்து தப்பமுடியாது. ஈழத் திருநாட்டில் மாணவப் பரம்பரையொன்றினைச் சென்ற நூற்றாண்டில் ஆக்கிய பெருமை நாவலருக்கே யுரியது. அதே வரிசையில் நாவலரின் அடிச்சுவட்டில் இம்மியும் வழுவாது வாழ்ந்து வருபவர் எமது மதிப்பிற்குரிய பண்டிதமணி சி கணபதிப்பிள்ளையாவார்.

கலாநிதி பண்டிதமணி ஐயா அவர்கள் தருமம் என்ற பொருள் வடிவாகத் திகழும் சற்குருநாதர். தள்ளாத வயதில், உடல் நலம் குன்றியிருக்கும் வேளையில் இவரால் கொழும்புக்கு வந்து பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற முடியவில்லை என்பது பேரறிஞர்கள் பலருக்கு ஏமாற்றத்தினைக் கொடுத்த போதிலும் எப்போதோ கிடைக்க வேண்டிய பட்டம் இப்போதாவது கிடைத்ததே என்கின்ற விடயத்தில் பொறுத்தவரையில் திருப்திப் படுகின்றார்கள். ஆனால் ஆத்ம வாழ்வில் கண்ணுக் கெட்டாத தூரம் சென்றுவிட்ட கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கட்கு இந்தக் கௌரவப் பட்டம் எல்லாம் எம்மாத்திரம்! கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் புகழ் விரும்பியோ, பட்டம் விரும்பியோ எதனையும் செய்யவில்லை. சைவம் வளர வேண்டும், தமிழ் வளர வேண்டும், தமிழ் மக்கள் வளம் பெற வேண்டும் அதற்கு என்னால் இயன்ற உதவியினைச் செய்ய வேண்டும் என்றுதான் தமிழுலகிற்கு சேவை புரிந்தாரேயொழிய நான் இவற்றைச் செய்தால் பணம் கிடைக்கும், பட்டம் கிடைக்கும், பதவி கிடைக்கும் என்று எச்சந்தர்ப்பத்திலும் எப்போதும் கருதியவரல்லர். இவர் கல்லூரியில் விரிவுரை நடத்துகின்ற நாட்களிலும் தனது கடமையினை மட்டும் செய்தால் போதும் என்கின்ற நோக்கத்துடன் விரிவுரை நிகழ்த்தாது தன்னிடம் கல்வி கற்கும் மாணாக்கர் அத்தனை பேரும் சிறந்தவர்களாக வரவேண்டும். அவர்கள் வருங்காலத்தில் சைவத்தையும், தமிழையும் மேலும் பேணிவளர்க்க வேண்டும் என்கின்ற நல்நோக்குடனேயே விரிவுரை நிகழ்த்தினார். ஈழத்தின் சைவ வரலாற்றில் நாவலருக்குப் பின் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் அழியா இடத்தினைப் பெற்றுவிட்டார்.

கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அறிவுத் துறையில் அடைந்த பக்குவம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பேராசிரியராக இருந்த காலத்திலேயே இவர் ஒரு முதிர்ந்த அறிவுக் களஞ்சியமாக விளங்கினார். இவர் ஆரம்ப காலத்தில் எழுதிய

சைவநற்சிந்தனைகள், கதிர்காம வேலவன் பவனி வருகிறுன், பாரத நவமணிகள் போன்ற நூல்களே இவரின் ஆரம்பகால அறிவு வளர்ச்சிக்கு சான்று பகர்கின்றது. 1959ம் ஆண்டு கலாநிதி, பண்டிதமணி கண பதிப்பிள்ளையவர்கள் பதவியிலிருந்து ஒய்வு பெற்ற காலத்திலேயே பண்டிதமணி ஐயா அவர்கட்கு கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட வேண்டும் என்று கூக்குரல் எழுந்தது. இதைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுப்பினுர். 1959ல் வெளியான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மணிவிழா மலரிலும் பண்டிதர் க. பொ. இரத்தினம், "தமிழாசிரியர்கட்கு ஆசிரியர், வித்துவான்கட்கும், பண்டிதர்கட்கும் ஆசான், எழுத்தாளர் மதிக்கும் எழுத்தாளர், பேச்சாளர் வியக்கும் பேச்சாளர், பொதுமக்கள் போற்றும் பண்பாளர் என்று அடக்கி உரைப்பினும் அடங்காது விரிந்து செல்லும் புகழுக்கு உரித்தானவர் பண்டிதமணி ஐயா அவர்கள். இத்தகைய பெரியாருக்கு ஈழத் தமிழ் மக்கள் மனமுவந்தளித்த பட்டம் பண்டிதமணி என்பது, அவருக்கு 'கலாநிதி' பட்டம் கொடுத்துப் போற்றுதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இங்கில்லை' என்று தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார். ஆனுல் இன்று இலங்கைப் பல்கலைக் கழகம் தமிழறிஞர்களைக் கௌரவிக்க தமிழ்ப் பல்கலைக் கழகம் தேவையில்லை. இன்றைய பல்கலைக்கழகத்தினுலேயே முடியும் என்பதனை அவருக்கு " கலாநிதி " பட்டம் அளித்த தன் மூலம் நிரூபித்துள்ளது.

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் கந்தபுராணம் தக்ஷ காண்டத்திற்கு எழுதிய உரை அவர் எழுதிய நூல்கள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போன்று அமைந்துள்ளது. கந்தபுராணம் யாழ்ப்பாணத்தில் பெருஞ் செல்வாக்குடையது. படித்தவர்கள், படியாதவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் யாபேருக்கும் கந்தபுராணத்தில் பெரு மதிப்பு. அக்கிரமங்களை அழித்தொழித்து நீதி, நியாயம் தருமத்தினை நிலைநாட்டிய முருகக் கடவுளின் வரலாறு கூறும் புராணமல்லவா? இதனுல்தான் கந்தபுராணத்திற்கு தமிழ் மக்களிடையே பெரு மதிப்பு இருந்தது. இம்மதிப்பினை உணர்ந்தே கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் அதன் தக்ஷ காண்டத்திற்கு சகல மக்களும் மிகச் சுலபமாக விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் உரையொன்றினை எழுதினுர். இதன் சிறப்பினை உணர்ந்த இந்து மாணவர் மன்றம் எல்லா மக்களும் பயன் பெறும் பொருட்டு தமது செலவிலேயே அச்சிட்டு1967ம்ஆண்டு தைத் திங்கள் 25ம் நாள் புதன் கிழமை சிறந்த முறையில் அப்போதைய பேராதனை வளாகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு.வி.செல்வநாயகம் தலைமையில் வெளியீடு செய்தது. இப்பெருவிழாவில் பேராசிரியர் மயில்வாகனம் அவர்கள் பண்டிதமணி ஐயா அவர்கட்கு பொன்னுடை போர்த்திக் கௌரவிக்க பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் பொற்கிளி வழங்கினுர்.

இப்படியான எண்ணிலடங்காப் பெருமைகள் வாய்ந்த கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களது சமயம் இலக்கியம் சம்பந்தப்பட்ட ஏராளமான கட்டுரைகள் விரைவில் நூல்வடிவு பெறவுள்ளன. இவற்றைத் தமிழ் பேசும் உலகு பெற்றுப் பயனடைதலே தமிழ் மக்கள் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கட்கு காட்டும் நன்றியறிதலாகும். கலாநிதியவர்கள் இன்னும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி சைவத்திற்கும் தமிழிற்கும் சேவை புரிய இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுப்பாராக.

எஸ். செல்வமுருகானந்தன்.

[8-6-78 வியாழன் இரவு 9.30 க்கு ஒலிபரப்பாகிய கலைக்கோலம் நிகழ்ச்சியில் இடம் பெற்ற உரை]

# ஞானக் கலாநிதி

நம்பண் டிதமணியே ஞானக் கலாநிதியே
நம்பன் அடிவருடும் நன்மணியே - கொம்பன்
கணபதியின் தொண்டுக் கணபதிப் பிள்ளைக்
குணமணியே வாழ்கசுகம் கொண்டு.

கொண்டல் எனக்கலைகள் கூடுசிவ வாரியிடைக்
கண்டு பழமெடுத்துக் கற்பகமாய்ப் - பண்டைத்
தமிழ்வரம்பு மெய்வயலில் தர்மவிதை யிட்ட
தமிழ்மகனே வாழியநின் சால்பு.

சால்பெனும் நெறியைக் காணச்
சகமெலாம் தேடி னேன்நின்
பால்வரக் கிடைத்த ஞான்று
பண்டித மணியே நின்றன்
நூல்வழி வாக்கில் நோக்கில்
நுழைபுலப் போக்கிற் சைவப்
பால்பொழி மாரி கண்டுன்
பதமலர் சிந்தை வைத்தேன்.

ஐயனே தமிழர் சைவர்
ஆற்றிய தவப்பே றாய
மெய்யனே சிவம லர்த்தேன்
விருந்தினை விழுங்கு கின்ற
செய்யனே சுவைத்த பாகைச்
சிந்திப்பார்க் குவப்பொ டூட்டும்
கையனே இலக்கி யத்துங்காண்
கலாநிதி மணியே வாழி

அன்பெனும் மலையே வாழி
அறநெறித் தருவே வாழி
பொன்பயில் சாத்து வீகப்
புணரியே வாழி கோளர்
ஒன்பது பேரும் நல்ல
உடலு யிர்ச்சுகம் வழங்க
இன்பமா முருகன் போல
எழின்மிக வாழி வாழி

அருட்கவி சி. விநாசித்தம்பி

# பத்திரிகைகள் பாராட்டுகின்றன

## தமிழுக்குக் கௌரவம்

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராதனை வளாகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்திலே ஒரு தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றியபோது நாவலர் பெருமானுக்குப் பின் தோன்றிய எமது தமிழ்ப் பேரறிஞர்களை இந் நாடு கௌரவிக்கத் தவறிவிட்டதென்றும், குறிப்பாக எம் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கூட ஒரு பட்டமளித்தேனும் கௌரவிக்கவில்லை என்றும் கவலை தெரிவித்தார். பேராசிரியர் வித்தியானந்தன் அன்று தெரிவித்த இக் குறை நீங்கும் வகையில் இலங்கைப் பல்கலைக் கழகம் தமிழ் பெரியார்கள் இருவரைக் கௌரவித்துள்ளது. பேராசிரியர் வித்தியானந்தனே இவர்களை அறிமுகம் செய்யும் சந்தர்ப்பத்தையும் பெற்றார். இவர் மூலமாகவே நோய்வாய்ப்பட்டிருப்பதனால் விழாவுக்கு வர முடியாதிருந்த பண்டிதமணி அவர்களுக்குப் பட்டமும் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண வளாகத்தில் நடைபெற இருக்கும் பெருவிழாவிலே பேராசிரியர் வித்தியானந்தன் சான்றிதழைப் பண்டிதமணிக்கு வழங்குவார். திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம் தமிழ் மக்களை இச் செயலின்மூலம் கௌரவித்துள்ளது தமிழைக் கௌரவித்துள்ளது. கௌரவ பட்டமளிப்பு இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குப் புதிய தொன்றல்ல, முன்பும் சிலருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்களைப் பல்கலைக்கழகம் வழங்கி இருக்கின்றது. ஆனால் ஏதோ காரணங்களினால் தமிழ்த்துறை அறிஞர்கள் எமது பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை. சிறுபான்மையினத்தினர் இதனைப் பாரபட்சமான நடவடிக்கை என்றே கருதிவந்தார்கள். தமிழ் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றார்கள் என்பதற்கு இதனையும் ஒரு சான்றாக எடுத்துக் காட்டுவதுமுண்டு. இது அநீதியான நிலை. தார்மீக ஆட்சியிலே இத்தகைய முரண்பாட்டுக்கு இடமளிக்க முடியாது என்று கருதியதனாலேயே இன்றைய அரசாங்கம் தமிழ் அறிஞர்களையும் கௌரவிக்க ஏற்பாடு செய்தது. இதனால் தமிழ் பேசும் மக்களின் பாராட்டையும் அன்பையும் இவ்வரசாங்கம் பெறும் என்பது திண்ணம். அரசின் நீதியை நிலை நாட்டும் நடவடிக்கைகளுக்கு இது ஒரு முன்னோடி என்றே சிறுபான்மையினம் கொள்கிறது; திருப்திப்படுகிறது.

**4-6-78 தினகரன் வாரமஞ்சரி**

## பண்டிதமணிக்குக் கௌரவம்

ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு இன்று யாழ்ப்பாண வளாகத்தில் விழா எடுக்கப்படுகின்றது. கலாநிதிப் பட்டச் சான்றிதழ் இன்றே பண்டிதமணிக்கு வழங்கப்படும். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இச் சான்றிதழினை இன்று வழங்குவார். பண்டிதமணி எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாவலர் பரம்பரையைச் சேர்ந்த 'தமிழ்ப் பேரறிஞர்'. இவரைக் கௌரவிப்பது தமிழைக் கௌரவிப்பதற்கு ஒப்பாகும். எனவே, இன்று நடைபெறும் பெரு விழா வெற்றி காணத் தமிழ் மக்கள் சகல உதவியும் அளிக்க வேண்டும். பெரு விழாவெடுத்து இச் சான்றிதழை வழங்கும்

பேராசிரியருக்கு எமது நன்றி. பண்டிதமணியை எப்போதோ அரசாங்கம் கௌரவித்திருக்க வேண்டும். ஏதோ காரணங்களினால் இம் முயற்சியை முன்னாள் அரசுகள் மேற்கொள்ள முன்வரவில்லை. தமிழரை மதிக்கும் முறையில் இவ்வேற்பாட்டைச் செய்த ஜயவர்த்தன அரசைத் தமிழினம் மறக்கமாட்டாது.

**25-6-78 தினகரன் வாரமஞ்சரி**

# பண்டிதமணியின் பணி

முதுபெரும் தமிழறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் இன்றைய தினம் 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவிக்க இருக்கின்றது. இந் நிகழ்ச்சி தமிழ் கூறும் உலகிற்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக அமைகின்றது. தமிழுக்கும் சைவத்திற்கும் பண்டிதமணி ஆற்றியுள்ள அளப்பரிய தொண்டுக்கு உயரிய விருது கிடைப்பதனால் அவரது மாணவ பரம்பரையும் தமிழினமும் புளகாங்கிதமடைகின்றன.

சென்ற நூற்றாண்டில் நாவலர் பெருமான் தமிழுக்கும் சைவத்திற்கும் மிகப் பெரிய தொண்டாற்றியதுடன் தமது மாணவ பரம்பரையொன்றையும் தோற்றுவித்தார். அவருக்குப் பின் ஈழத்தில் வியாபிதமான மாணவ பரம்பரையை உருவாக்கியவர்களில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை குறிப்பிடத்தக்கவராவார். இவர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி வகித்த காலத்தில் தமிழிலும் சைவத்திலும் திளைத்த நல்லாசான்களை உருவாக்கினார். பண்டிதமணி இப் பதவியிலிருந்து இளைப்பாறிய பின்னரும் தமது தமிழ், சைவப் பணிகளைத் தொடர்ந்து ஆர்வத்தோடு மேற்கொண்டு வந்துள்ளார். அவரின் இலக்கிய சமய ஆக்கங்கள் அவரது தொண்டின் சிறந்த அணிகலங்களாகும். இலக்கியவழி, கந்தபுராண தக்ஷகாண்ட உரை முதலானவற்றை இவ்வகையில் இங்கு குறிப்பிடலாம்.

பண்டிதமணி தமிழ் இலக்கியத்திலும் சைவத்திலும் ஆய்வுகளை நடாத்தி ஆக்கங்களைப் படைத்தமை கவனிக்கத்தக்கது. எந்தவொரு மொழியின் வளர்ச்சிக்கும் தக்க ஆய்வுகள் அவசியமாகும். இந்த வகையில் பண்டிதமணி தமிழ் இலக்கண, இலக்கியத் துறையில் ஆற்றியுள்ள பணி மகத்தானதாகும்.

நம் மத்தியில் வாழும் தமிழ்ப்பேரறிஞர் ஒருவருக்குப் பல்கலைக்கழகம் 'இலக்கிய கலாநிதி' பட்டமளிப்பது குறித்து நாம் பெருமிதமடைகிறோம். இச்செயல், தமிழ் இலக்கியத் தொண்டில் தம்மை அர்ப்பணித்திருப்போருக்கு மிகுந்த உந்துதலும் உற்சாகமும் அளிப்பதாகும். இன்றைய தினத்தில் உயரிய விருது பெறும் பண்டிதமணியின் தமிழ், சைவத் தொண்டு மேலும் வியாபித்து மேலோங்க வேண்டுமென்று நாம் பிரார்த்திக்கிறோம். இந்த முன்மாதிரியைப் பல்கலைக்கழகம் தொடர்ந்து கடைப்பிடித்துத் தமிழ்ப் பகுதிகளிலுள்ள பேரறிஞர்களை அவ்வப்போது கௌரவிக்கத் தவறமாட்டாதென்றே கேசரி நம்புகிறான்.

**31-5-78 வீரகேசரி**

# பண்டிதமணிக்குப் பட்டம் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஒரு தனி ஸ்தாபனம். அவரே ஒரு பல்கலைக் கழகம். மற்றவர்களுக்கெல்லாம் பட்டம் அளிக்கும் வெற்றி வாய்ந்தவர் அவர். அப்படிப்பட்ட பெருந் தமிழறிஞருக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் இன்று கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அவரைப் பாராட்டுகின்றது. அதன் மூலம் பல்கலைக் கழகம் பெருமையைச் சம்பாதித்துக் கொள்கிறது.

யார் பட்டமளித்தாலும் அளிக்காவிட்டாலும் பண்டிதமணி தமிழ்ப் பண்டிதர்களுள் மணியானவர்தாம். அவரின் புலமை, அருமை பெருமை ஆகியன குறையப் போவதில்லை. அவரைக் கௌரவிப்பவர் தாமே கௌரவம் பெறுகிறார்கள்.

நாவலர் பரம்பரையிலே வந்தவர்களில் நம்மிடையே இன்றுள்ள கடைசி நன்மணி எங்கள் பண்டிதமணி. தமது எண்பதாவது வயதிலும் தமிழ்ப் பணியையும் சைவப் பணியையும் சளைக்காது செய்து வருகிறார்.

தமிழை நன்கு ஓதி உணர்ந்தவர்கள் தருக்குறுவதும் தலைக்கனம் கொள்வதும் கண்கூடு. வரலாற்றுக்கு முற்பட்ட புராண காலத்தில் கூட அந்த நிலை இருந்ததாக அறிகிறோம். இப்போதுள்ள கற்றறிந்த பண்டிதர்கள், வித்துவான்கள் ஆகியோரில் பலர் வித்துவக் காய்ச்சலால் முன்னவர்களை விட ஒருபடி முன்னே நின்று தம்மை இனம் காட்டிக்கொள்கிறார்கள்.

துறைபோகக் கற்றறிந்த நுண்ணறிவாளரான பண்டிதமணி புராண கால வித்தகர்களுக்கும் தற்கால வித்துவான்களுக்கும் மாறுபட்டவர். நிறைகுடமாகத் தளம்பாமல் இருக்கிறார். அடக்கத்தின் இலக்கணமாக விளங்குகிறார். அறிவுப் பசி உடையவர்களுக்கு எல்லாம் அமுத சுரபியாகத் திகழ்கிறார்.

அறிவோடு அடக்கமும் ஆசாரமும் உடைய சிலர்களைக் காண்பது அரிது. பண்டிதமணியை நாம் பார்ப்பது மட்டுமன்றி அவரோடு கூடிப்பழகவும் எமக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்றால், அது நாம் செய்த தவப் பயனே என்று சொல்ல வேண்டும். பண்டிதமணியிடம் பாடம் கற்பவர்கள் பாக்கியசாலிகள்.

சிவனைப்போலச் சிவனடியார்களும் வணக்கத்துக்கு உரியவர்களாகிறார்கள். பண்டிதமணியை மதிப்பவர்கள் தாமும் மதிப்புக்குரியவர்களாகிறார்கள். அவரைப் பாராட்டுகிறவர்கள் தாமும் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்.

இந்த வகையில் பண்டிதமணிக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அவரைப் பாராட்டும் இலங்கைப் பல்கலைக்கழகம் கௌரவத்துக்கும் பாராட்டுக்கும் உரியதாகிறது.

இதுவரை காலமும் இலங்கைப் பல்கலைக்கழகம் இந்தக் கௌரவத்தையும் பாராட்டையும் பெறத் தவறிவிட்டது. தமிழர் அல்லாதார் பலருக்கு அவ்வப்போது கௌரவ டாக்டர் பட்டம் அளித்து வந்த இலங்கைப் பல்கலைக் கழகம், தமிழ் முஸ்லிம் அறிஞர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அவர்களைப்

பாராட்ட முன்வரவில்லை. பல்கலைக்கழக அதிகார பீடத்தின் இந்தப் போக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் பல்கலைக்கழக வட்டாரங்களிலும் பெரும் மனத் தாக்கலை ஏற்படுத்தி இருந்தது.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் தினபதி சிந்தாமணிப் பத்திரிகைகள் இதைச் சுட்டிக் காட்டியதை நேயர் அறிவார்கள்.

துறைபோகக் கற்றறிந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, தேசிகமணி கா. அருணாசலம் ஆசிரியர், சிவஸ்ரீ. குமார சுவாமிக் குருக்கள், அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் ஆகிய தமிழ் அறிஞர்களுக்கும், சமயப் பெரியார்களுக்கும், கல்விமான்களுக்கும் இலங்கைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டமளித்து அவர்களைப் பாராட்ட வேண்டும். அதன் மூலம் இலங்கைப் பல்கலைக்கழகம் தனது பெருமையை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று சிந்தாமணி 1969 ஜனவரி 2ம் திகதி முன்பக்க முதல் செய்தி மூலம் குரல் எழுப்பிப் பல்கலைக் கழக அதிகார பீடத்துக்கு கோரிக்கை சமர்ப்பித்தது.

தினபதி சிந்தாமணிப் பத்திரிகைகளின் கோரிக்கை நியாயமானது என்பதை தமிழ்ப்பேசும் மக்களும் சிங்கள அறிஞரும் கூட ஒப்புக்கொண்டனர். அந்நாளில் தேசிய உயர் கல்விச் சபையின் தலைவராக இருந்த அமரர் டாக்டர் ஜி. பி. மல்ல சேகரா, தினபதி—சிந்தாமணி பத்திரிகைகளின் கோரிக்கை நியாயமானது என்று பகிரங்கமாக எடுத்துக் கூறினார். ஒரு வருடமாகியும் கோரிக்கை நிறைவேற்றப் படாதது குறித்து அவர் பல்கலைக் கழகத்தைக் கண்டித்தார். 1970 ஏப்ரல் 14 ஆம் திகதிச் சிந்தாமணியில் அது பற்றிய விபரம் வெளியிடப்பட்டதை வாசகர்கள் அறிவார்கள்.

கௌரவ டாக்டர் பட்டமளித்து தமிழ் அறிஞர்கள் பாராட்டப்பட வேண்டும் என்று தமிழ்ப் பொது மக்கள் சார்பில் தினபதி - சிந்தாமணிப் பத்திரிகைகள் விடுத்த கோரிக்கை ஒன்பது ஆண்டுகளின் பின்னர் இப்போது நிறைவேற்றப் படு கிறது.

இலங்கைப் பல்கலைக்கழகம் தனது வரலாற்றில் முதன் முறையாக இன்று இலங்கைத் தமிழ் அறிஞர் ஒருவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அவ ரைப் பாராட்டுகிறது. பல்கலைக் கழகத்தால் பட்டமளித்துப் பாராட்டப்படும் முதலாவது இலங்கைத் தமிழ் அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையே ஆவர். இது குறித்து தமிழ்ப் பேசும் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறார்கள்.

கௌரவ டாக்டர் பட்டமளித்துப் பாராட்டப்பட வேண்டியவர்களின் வரிசை யிலே பண்டிதமணியை முதலில் வைத்துக் கோரிக்கை விடுத்த நாம் இப்போது பண்டிதமணிக்கே முதலாவதாகப் பட்டமளிக்கப்படுகிறது என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடையவது நியாயமல்லவா?

31-5-78 தினபதி

## கலாநிதி பண்டிதமணி

பண்டிதமணிக்கு இன்று இலங்கைப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கிறது.

பண்டிதமணி என்றால் தமிழ் கூறும் நல்லுலகத்தில் திரு. சி. கணபதிப்பிள்ளை யைத்தான் குறிக்கும்.

'இலங்கைப் பல்கலைக்கழகம்' எப்போதோ பண்டிதமணிக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கி தன்னைக் கௌரவித்துக்கொண்டிருக்கவேண்டும்.

ஆனாலும் காலம் கடந்தாவது சைவத் தமிழ்ப் பெரியாருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்க முன்வந்துள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தைப் பாராட்ட வேண்டும்.

தமிழ் இலக்கியம் இலக்கணத்திலும் சைவ சிந்தாந்தத்திலும் பண்டிதமணிக்கு ஈடாக இன்று எவருமில்லை. யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்று நிறுவியவர் பண்டிதமணி.

நாவலர் பரம்பரையில் இன்று உயிர் வாழும் பெரியார் பண்டிதமணி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையின் அதிபராகவும், சைவாசிரிய கலாசாலை அதிபராகவும் பணியாற்றிக் கல்வித்துறையில் பண்டிதமணி ஆற்றிய சேவை அளப்பில.

பண்டிதமணி மேலும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் சிறந்த தொண்டாற்ற வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுவோம்.

31-5-78 ஈழநாடு

## எங்கள் தமிழ்மணி பண்டிதமணி ஐயா!

அடக்கம், அமைதி, அறிவு, தூய்மை, வாய்மை, சால்பு போன்ற உயர்ந்த பண்புகள் அனைத்தும் ஒரு சேர உருவெடுத்துள்ளதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?

நான் கண்டிருக்கிறேன்.

'ஆன்றவிந் தடங்கிய சான்றாண்மைக்கு' உதாரணமாக உங்களால் ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியுமா?

என்னால் முடியும்!

தமிழ், சைவம் இரண்டு துறையிலும் ஏதாவது சந்தேகங்கள் எழும்போது தெளிவான தீர்ப்பு வழங்கக் கூடிய மூதறிஞர் இவர்தான் என்று தமிழ் ஈழத்தில் உங்களால் யாரையாவது சுட்டிக் கூற முடியுமா?

என்னால் முடியும்!

'ஆம், அவர்தான் தமிழ் முனிவராக நம்மிடையே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள்!

அள்ள, அள்ளக் குறையாத அறிவுச் சுரங்கமாக—தெள்ளு தமிழ் நீரோடையாக—சிவானுபூதிச் செல்வராக வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர்!

'நிறைகுடம்' என்பதற்கு இலக்கியம் அவர்!

ஆலமரம் போல விழுது பரப்பிப் பல நூறு அறிஞர்களை உருவாக்கித் தந்த பேரறிஞர் அவர்.

தமிழ் மூலம் சைவத்தையும், சைவத்தின் மூலம் தமிழையும் கண்டு அவற்றிலேயே லயித்து, அவற்றுடன் இரண்டறக் கலந்து கொண்டு வாழ்பவர் அவர்!

'மங்கையொருத்தி தரும் சுகமும் எம்மான் தமிழுக்கு ஈடாகுமோ? என்றான் பாரதிதாசன்'

மங்கை சுகத்தை நீத்து, திருமணமே செய்யாமல், பிரமசரியத்தைக் கடைப் பிடித்து தமிழ்ப் பணியாற்றி வருபவர் அவர்!

அவர் எழுதிய நூல்கள் எதிர்காலத்தில் எழுதப்படக்கூடிய ஏராளமான நூல் களுக்கு அடிப்படையாக ஆதாரமாக (authority) விளங்கக் கூடியவை.

அவர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்; கை தேர்ந்த எழுத்தாளர்; தமிழை அவர் கையாளும் அழகே தனி அழகு!

அவர் ஒரு சிறந்த சொற்பொழிவாளர்; தமிழ் அவர் வாயில் நடமிடும் அழகு 'தனிச் சுவையானது.'

அவர் சைவசித்தாந்தத்தில் ஒரு சரபம்!

ஆம், பண்டிதமணி ஐயா அவர்கள் இன்றுள்ள பழைய தலைமுறையின் கடைசி அறிஞர்.

குருகுலக் கல்வியின் மேன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார் பண்டித மணி அவர்கள்.

அவரை நாடி அண்மையில் 'இலக்கிய கலாநிதி' பட்டம் வந்தது!

எத்தனை 'இலக்கிய கலாநிதிப்' பட்டங்களாலும் அவரது ஆற்றலை அளவிட்டு விட முடியாது!

பட்டங்கள் எல்லாம் அவரது தமிழ்ப் பணியின் முன் வெறும் தூசு!

அத்தகைய அறிஞர் தனது 80வது பிறந்த நாளை அண்மையில்தான் கொண் டாடினார்.

அவர் இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தாம் தேக்கி வைத்துள்ள ஞானத்தையெல்லாம் மக்களுக்கு வாரி வழங்க இறைவன் அருள்வானாக!

அவர் எழுதி அச்சிடப்படாது முடங்கிக் கிடக்கும் நூல்கள் யாவும் விரைந்து வெளிவரச் செய்யவேண்டும்!

இதுவே பண்டிதமணி ஐயாவுக்கு தமிழ்ச் சமுதாயம் செய்கின்ற கைமாறாகும்.

பல்லாண்டு வாழ்க எங்கள் தமிழ்மணி பண்டிதமணி ஐயா அவர்கள்!

23.7.78 சுதந்திரன்

# இன்று பண்டிதர் ஐயாவுக்கு விழா

— திரு. அ. பஞ்சாட்சரம் —

பண்டிதமணி ஐயா அவர்கள் ஜென்ம நக்ஷத்திரம் ஆனிச் சதயம் ஆகும். இன்று ( 25-6-78 ) ஆனிச் சதயமாகும். இன்று பண்டிதர் ஐயா அவர்களது எண்பதாவது பிறந்த தினம்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தினால் இலக்கியகலாநிதி என்ற கௌரவப் பட்டம் 31-5-78 ல் அளிக்கப்பட்டதினைப் பாராட்டி யாழ். வளாகம் இன்று விழா எடுக்கும் முக்கிய சந்தர்ப்பத்தில் பண்டிதர் ஐயா அவர்களுடன் தொடர்புபட்ட சில சம்பவங்களை நினைவு கூருவது பொருத்தமாகும்.

ஈழத்தின் மூலை முடுக்கிற்கூட சைவப் பிள்ளைகள் சைவக் கல்வியைப் பயில்வதற்கு வாய்ப்பாகச் சைவாசிரியர்களை உற்பத்தி செய்த திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையின் மும்மணிகளில் முதல்மணியாய் விளங்கியவரான பண்டிதர் ஐயா அவர்களுக்கு ஈழத்தில் அதி உயர்ந்த தமிழ் அறிஞர் என்ற வகையில் இலங்கை பல்கலை கழகம் கலாநிதி என்ற பட்டத்தினை தமிழர் வரலாற்றில் முதன்முதல் அளித்துக் கௌரவித்தமை கண்டு தமிழர் சமுதாயம் விசேடமாக மாணவர் கூட்டம் களி பேருவகை கொள்கின்றது.

## பண்டிதமணி என்றால்:

பரமேசுவரக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவை யடுத்து " தமிழ்ச்சாறு " என்ற ஆசிரியத் தலையங்கம் எழுதிய திரு வி. கே. பி. நாதன் அவர்கள் பண்டிதமணி என்று குறிப்பிட்டார். கல்கி இப்பட்டத்தை விமர்சனம் செய்தார். பண்டிதமணி என்ற பட்டம் முன்னர் பலருக்குச் சூட்டப் பட்டிருக்கலாம். பின்னரும் சிலருக்குச் சூட்டப் பட்டிருக்கலாம். ஆயினும் பண்டிதமணி என்றதும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணி புரிந்த பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களையே சிறப்பாகக் குறிக்கும் ஒரு பட்டமாயிற்று. சமயக் கட்டுரை நூல் வெளியீட்டு விழாவில் ''சித்தாந்த சாகரம்'' என்ற பட்டம் வழங்கப் பெற்றது. 29-4-70 ல் முதுப்பெரும் புலவர் என்றும், 7-1-71 ல் மகாவித்துவான் என்றும், காஞ்சி சிவஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் பட்டங்களை வழங்கினார்கள். ஏதோ இப் பட்டங்களெல்லாம் பண்டிதமணி என்ற பட்டத்துக்குள்ளே மறைந்து விட்டன என்றே சொல்ல வேண்டும்,

பண்டிதர் ஐயாவினால் எழுதப்பட்ட கட்டுரைகள். வாழ்த்துக்கள், ஆசியுரைகள் விமர்ச்சனங்கள், கடிதங்கள் என்பனவற்றை யான் ஆயிரக் கணக்கில் பிரதி செய்திருப்பேன். எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது தம்முடைய கையினால் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்று கையெழுத்து இட்டது கிடையாது. சி. கணபதிப்பிள்ளை என்று மட்டும் எழுதுவார்கள். தலை, வால் வைக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் நாங்கள் அத் திருப்பணியைச் செய்ததுண்டு. பண்டிதர் ஐயாவுடன் தொடர்புபட்ட முப்பது வருட அநுபவம் இது. என் ''சீடர் மிகக் கொடியர்'' என்று இராமலிங்கர் பாடியதைச் சிலசமயம் வேறு விதமாக எமக்குப் பண்டிதர் ஐயா குறிப்பாகக் கூறிய போதிலும் எம்மைக் கொள்ளை கொண்ட ஆசை விட்டபாடில்லையே! இப்பொழுது கலாநிதியும் இறுதிக் காலத்தில் வந்து சேர்ந்துள்ளது. அவர்களுக்கு இவற்றிலே இரசனை இல்லையென்பது உண்மையாயினும் அவருக்குப் பின்னாலே நின்றவர்களினாலே இரசிக்காமலிருக்க முடியவில்லையே! அவர்களுடைய எழுத்துக்களை அணு அணுவாக இரசித்தமையே காரணம். கவிஞர் பிரானை கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்கு ஒருமுறை பெரிய இரசனை பிறந்து விட்டது. கதை வருமாறு:-

### சுப்புவின் பாடலும் பண்டிதமணியும்

ஒருமுறை ஈழகேசரி அதிபர் திரு நா. பொன்னையா வீட்டுக்குக் ஹண்டி மாஸ்டரைத் (திரு. பேரின்பநாயகம்) தேடிப் பண்டிதர் ஐயா செல்ல நேர்ந்தது. அவ்வீட்டில் நினைவு தினக் கூட்டம். பண்டிதர் ஐயாவைக் கண்டதும் வர வேண்டும், வர வேண்டும், நான்கு வார்த்தை பேச வேண்டும். என்று தலைவராயிருந்த ஹண்டி மாஸ்டர் வேண்டுகோள் விடுத்தார். பிரபலஸ்தரான கொத்தமங்கலம் சுப்புவும் பிரசன்னமாயிருந்தார்.

' கடைாவில் தட்டிவரும் பிளேடு
கப்பல் வராவிட்டால் தம்பிமுகம் காடு'

என்ற செய்யுளைப் படித்து, பண்டிதர் ஐயா விமர்சனம் செய்யத் தொடங்கினர்கள். சபையினர் நன்கு சுவைத்தார்கள். கவிஞரான கொத்தமங்கலம் சுப்பு இரசித்ததோடு மட்டும் இராது, மெல்ல மெல்ல நகரத் தொடங்கினர். நகர்ந்தவர் ஆராமையினுல் திடீரென்று எழுந்து பண்டிதரையாவைக் கட்டியணைத்து முத்தமிட்டார். விஷயம் என்னவென்றல், எதிர்பாராது சென்ற பண்டிதர் ஐயா அவர்கள், எடுத்து விமர்ச்சனஞ்செய்த பாடல் கொத்தமங்கலம் சுப்பு அவர்களது பாடல் என்பது சபையோருக்கு ஈற்றிலேதான் வெளிவந்தது.

### தக்ஷகாண்ட உரை

1966 ல் வைத்திய கலாநிதி, பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம் சைவசமய நூல் ஒன்றை வெளியிட விரும்பியிருந்த காலம். கந்தபுராணம் தக்ஷகாண்டத்திற்குப் பண்டிதர் ஐயா உரை எழுதிப் பூர்த்தியடையும் சமயம். பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் வேறு விஷயமாய்ச் சந்திக்க வந்திருந்த சமயம் உரை விஷயத்தைக் கேள்விப்பட்டதும் 'வாய்ச்சுப் போச்சுது' என்றுர். தக்ஷகாண்ட உரை மின்னல் வேகத்தில் அச்சாகியது. 5-1-67 புதன்கிழமை பேராதனைப் பல்கலைக் கழகக் கலை மண்டபத்தில் கந்த புராணம் தக்ஷகாண்ட உரை வெளியீட்டுப் பெருவிழா, பல சமூகத்தையும் சேர்ந்த பேராசிரியர்கள் நிறைந்திருந்த அம்மண்டபத்தில் சிங்களப் பேராசிரியர் டீ. ஈ. ஹெட்டி ஆராச்சி பேசத் தொடங்கினுர்.

11 ஆம் நூற்றுண்டில் பராக்கிரமபாகு மன்னன் ' பூஜாவளி ' என்ற நூலை யானைமீதேற்றி நகர் வலம் வந்து அரங்கேறச் செய்தான், அதன் பின் இருபதாம் நூற்றுண்டில் இன்றுதான் அப்படியான பெருவிழாவாகக் கந்த புராணம் தக்ஷகாண்டம் உரைநூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்திருக்கிறது என்றுர்.

பேராசிரியர் திரு வி. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் பண்டிதர் ஐயா அவர்களுக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவிக்க, மருத்துவப் பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத் தக்கவை.

இவ் விழாவை யடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 23-6-67 ல் பொற் பல்லக்கில் தக்ஷகாண்ட உரைநூல் பட்டுப் பீதாம்பரங்களினுல் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் சென்றதை யடுத்து வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற பெருவிழா '' யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் தான்'' என்பதை உறுதி செய்வதாய் அமைந்தது என்றுல் மிகையாகாது.

கந்த புராணம் தக்ஷகாண்ட உரையின் அருமை பெருமையினை உணர்ந்த இலங்கை சாகித்திய மண்டலம் ஆயிரம் ரூபா பரிசும் அளித்து இலங்கை சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதும் வழங்கிக் கௌரவித்தது.

4-11-68 திங்கள் முற்பகல் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில்

கலாசார அதிபர் திரு. ஹேமஸ்ரீ. பிரேம வர்த்தன அவர்கள் தொடக்கவுரையை நிகழ்த்திக் குறித்த விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள். பேராசிரியர் வி. செல்வ நாயகம் அவர்களது அன்றைய சிறப்புரை பொன் எழுத்துக்களாற் பொறிக்கும் சிறப் பைப் பெற்றது என்றால் மிகையாகாது'

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர் களது 'இலங்கை வள' த்துக்குப் பண்டிதர் ஐயா எழுதிய நீண்ட விமர்சனம் பிரசித்த மானது. விமர்சன முடிவில்,

'தாரமாய்த் தாயானாள் கையிருக்கக் கண்ணுக்கு வேண்டும் கவி' என்றபோது சின்னம்மையின் கண்ணுக்குப் பாட்டுப் பாடினார் தங்கத் தாத்தா. இனிமையான பாடல் அது. பண்டிதர் ஐயாவை விழித்து,

'இன்பொடு கேட்குந ரன்பொடு மகிழத்
தூக்கி விலை உரைக்கும் வாக்கினில்'
வல்லோய்!
எல்லாம் வல்ல இறைவ னருளால்
பல்லாண்டு வாழ்வும் உடனலப் பாடும்
கைக்கவி யிருக்க கட்கவி வேண்டிய
அற்புத நுண்மதிப் பொற்புயர் செல்வ!
என்றார்

## சோதிடத்தில் நம்பிக்கை

பண்டிதர் ஐயாவுக்குச் சோதிடத்தில் அபார நம்பிக்கை. அவரது சாதகத்தை எழுதிய பிரபல சோதிடர் 69 வயதிற்கு மேல் பலன் எழுதவில்லை. 69 கிட்டக்கிட்ட அடிக்கடி சாதகத்தைப் பார்க்கும் இயல்பும் பண்டிதர் ஐயாவுக்கு உண்டாயது. இன் னும் பத்து இருபது என்று வயசு நீளவேண் டுமென்பது எங்கள் போன்றோர் உள்ளத் துடிப்பு. சாதகம் ஒரு நாள் திடீரென்று மறைந்து விட்டது. எழுபது போய் இன்று என்பதையும் எட்டிப்பிடித்து விட்டார்கள்.

## இடையிலே ஒரு கதை

பண்டிதர் ஐயாவின் மாணவரும் பிரபல சோதிடருமான ஆசிரியர் ஒருவர் சமீபத் தில் என்னைக் கண்டு 'பண்டிதர் ஐயாவுக்குத் தொண்ணூறு என்று இராத்திரி அம்மா (அம்பிகை) சொன்னவ, என்றார். நண் பரைப் பார்த்து '' ஏன் நூறு க்க முடியாதா? '' என்றேன். இந்தத் தொண் ணூறுக் கதையைக் கதையோடு கதை யாகப் பண்டிதர் ஐயாவுக்குச் சொன்ன போது ' அப்ப இனி உறியிலே கட்டித் தொங்க விடவேண்டியது தான் ' என்றார். அதிலே கூட ஹாஸ்யம் பிறந்தது.

## ஆழமான பேச்சுக்கள்

ஹாஸ்யமாக இருந்தாலும் கருத்தா ழம் மிக்க இவ்வசனங்களைக் கேட்டுக் கேட் டுச் சிந்திக்கச் சிந்திக்க எம்மை யறியாமலே மனம் கிளர்ச்சியடையும். ஒவ்வொரு எழுத்தும் சிந்திக்க வைக்கும். சில வார்த் தைகள் சில பேச்சுக்கள் உடன் விளங்காது போனாலும், காலகதியில் விளங்கிக் கொள் ளும்போது தாயினுடைய கையினால் நல்ல உணவினை உண்டு பூரிப்படைந்த குழந்தை மகிழ்ச்சி மேலீட்டினால் தாயை அணைத்து முத்தமிடுவது போன்றதோர் உணர்ச்சி ஏற்படும். அந்த உணர்ச்சியோடு அவரி ருக்கும் குடிசையை நோக்கிச் செல்லும் போது அந்த உணர்ச்சி ஏதோ மறைந்து குருநாதர் என்கின்ற பயபக்தியோடு கூடிய ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறதே; 31-5-78 புதன் கிழமை மாலை இப்படியான ஒரு புத்துணர்ச்சி பண்டாரநாயக்கா ஞாப கார்த்த மண்டபத்தில் எனக்கு ஏற்பட்டது. தலைப்பட்டணத்தில் ஏற்பட்ட தலையாய விழாவுக்குப் பல்லாயிரம் மக்கள் நிறைந்தி ருந்தனர். குளிரூட்டிய அம்மண்டபத்தில் குண்டூசி விழுந்தாற் கேட்கும். அவ்வளவு நிசப்தம். அம்மண்டபச் சிறப்பையும், பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிகளையும் விபரிக் கப் புகின் அதுவே ஒரு தனிக்கட்டுரையாய் விடும்.

விசேட பட்டமளிப்பு முறைப்படி உரியவர்களினால் ஒவ்வொருவரும் அறி முகம் செய்து வைக்கப்பட்டார்கள். சிறப் பாகத் தேசிய உடை அணிந்திருந்த யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியா னந்தன் அவர்கள் எழுந்தார்கள். வேட்டி, சால்வை, ' நாஷனலுடன் ' கம்பீரமாகக் காட்சியளித்த பேராசிரியர் அவர்கள் ஒரு

தமிழ்த் தலைப்பாகையும் அணிந்திருந்தாலோ என்ற எண்ணம் – ஒரு அங்கலாய்ப்பு ஏற்பட்டது. பேராசிரியர் அவர்கள் கணீர் என்ற குரலில் ' பல்கலைக் காவலவேந்தர் அவர்களே ' இவ் விசேட பட்டமளிப்பு விழாவிலே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மரபு வழித் தமிழ்க் கல்வி அறிஞர்களுள் மிகவும் பிரபல்யம் வாய்ந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு அவர் சமுகமளிக்காதிருந்த நிலையில் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளும் அரிய வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது என்று தொடங்கி இரத்தினச் சுருக்கமாக தமது அறிமுகப் பேச்சைக் கச்சிதமாக நடத்திப் பூரணப்படுத்திய அந்தக் காட்சி என்றும் பசுமையாகவே சமுகமளித்தவர்களின் உள்ளங்களில் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது இவ்விழா.


நாவலர் சிலையை யாம் முற்றவெளியில் நிறுவலாமா? கீரிமலையில் நிறுவலாமா? பொதுசன வாசிகசாலை முன் நிறுவலாமா? என்று அபிப்பிராய பேதம் நிலவிய ஞான்று நாவலர் பெருமான், குருபூசைகள் நடத்திய இடம் – ஓதுவார்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்து தங்கச் செய்து பாராயணம் செய்வித்த இடம் - தேவராப் பாடசாலைக்கென நாவலர் பெருமானிடத்து கார்த்திகேயஐயர் ஒப்பித்த நல்லூர் தெற்கு வீதிக் காணியே, நாவலர் பெருமானுக்குச் சிலை நிறுவி வழிபட ஏற்றஇடம் என்று பண்டிதர் ஐயா அவர்கள் வெளியிட்ட அபிப்பிராயம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாவலர் பெருமான் சிலை உருவில் நல்லூரில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார். நாவலர் பாதம் பட்ட அந்த மண்ணில் சிலை நிறுவுவது பொருத்தமென்று அழுத்தம் திருத்தமாகக் கூறிய பண்டிதர் ஐயா அவர்கள், சைவ, தமிழ் உலகுக்குத்தான் ஏதாவது செய்திருந்தால் அதற்கு வழிகாட்டியாய் அமைந்தவர் மௌன தவமுனிவரான உபஅதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்களே என்பார்கள் ஒருகாலத்தில் பேரறிஞர் பொ. கை. அவர்களது பாதம் பட்ட பரமேசுவர மண்ணில் இன்று பண்டிதர் ஐயாவுக்கு யாம். வளாகம் பாராட்டு விழா எடுப்பதும் சாலப் பொருத்தமுடையதே.

---

## பண்டிதமணி பெற்ற பட்டம்

பட்டம் மிகப் பெரியது; தனித்துவம் வாய்ந்தது; 'D. Litt' என்றால்தான் அதன் பெருமை புலனாகும். 'Litt' இல் உள்ள இரட்டை 't' என்ன என்பதைப் பலர் அறியார்கள். D. Litt என்றால் Doctor of Literature. இலக்கிய கலாநிதி எனப் பொருள் செய்வது சர்வ சாதாரணம். உண்மையில் அதன் பொருள் Doctor of Letters என்பதே. இலக்கியப் பேரறிஞரை 'Man of Letters' என்பது ஆங்கில மரபு. ஆங்கிலேயரே அந்தப் பட்டத்தை அவர்களின் தெய்வ மொழியாகிய லத்தீனில் 'Doctor Litterarum' என்று வைத்துக் கொண்டனர். தெய்வத் தமிழை வளர்த்துவரும் பண்டிதமணி அவர்களுக்குத் தெய்வ மொழியிற் பட்டம் வழங்கப் பட்டது மிகப் பொருத்தமே.

— ந. சபாரத்தினம் —




பண்டிதமணியவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகக் கலை மண்டபத்துக்குப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் புடைசூழ அழைத்துச் செல்லப்படுகின்றார்.



பேராதனை விழாவில் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் பண்டிதமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி வணக்கம் செலுத்துகின்றார்.



நாவலர்விழாவில் நாவலர் மகாநாட்டு மலரைப் பண்டிதமணி அவர்கள் பார்வையிடுகிறார்கள். நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் தலைமைதாங்குகிறார். இவ்விழாவில், நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பண்டிதமணி அவர்கள் உரையாற்றுகின்றார்.



இலக்கியகலாநிதிப் பட்டம் பெற்றதையொட்டி யாழ் வளாகத்தில் 25-6-78 ஞாயிறன்று கலாநிதிக்கான சான்றுப் பத்திரத்தை யாழ் வளாகத்தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் வழங்குகிறார்கள். திரு வித்தியானந்தன் அடுத்து தலைமையுரை ஆற்றுவதையும் இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பதில் உரை கூறுவதையும் காணலாம்.

# இலக்கியகலாநிதி பண்டிதமணி
# சி. கணபதிப்பிள்ளை
## அவர்களுக்கு
## யாழ் வளாகத்தினர் எடுத்த
# பாராட்டு விழா.

தொகுப்புரை

## வரலாறு காணாத மாபெரும் விழா

25-6-78 ஞயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தின் வரலாற்றிலே மறக்க முடியாத பொன்னாள்.

> கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
> தாம் வரம் பாகிய தலைமையர்

ஆன பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கியதை யொட்டி அந்நாளைப் பாராட்டு முகமாக யாழ் வளாகத்தினர் விழா ஒன்றினை அன்று ஏற்பாடு செய்திருந்தனர். இராமநாதன் மண்டபம் தொடக்கம் வளாக வாயில்வரை தோரணங்கள் தூக்கி, மங்கல விளக்கேற்றி நிறைகுடம் வைத்துப் பண்டிதமணியை வரவேற்றனர். மண்டப நுழைவாயிலிலே வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பெரியாரை மாலை சூட்டி மங்கல வாத்தியம் முழங்க விழா மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். தமிழ் வாழ்த்துடன் தொடங்கிய பாராட்டுவிழாவிலே வளாகத் தலைவர் உட்பட அறிஞர்கள் பலரும் கலந்துகொண்டு பண்டிதமணியின் மாண்புகளை விரித்துரைத்தனர். பாமாலையும், பூமாலைகளும் மண்டப மேடையிலே அவருக்குச் சூட்டப்பட்டன. பண்டிதமணியின் நண்பர்கள், மாணவர்கள், அன்பர்கள் என ஆயிரக் கணக்கானோர் விழா மண்டபத்திலே நிறைந்திருந்தமை கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்விழா தமிழும், சைவமும் அரியணை ஏறியதை எமக்கெல்லாம் எடுத்துக் காட்டிய இனிய விழா என்பதில் ஐயமில்லை.

### 1. நல்லைநகர் நாவலரும், நன்மணியாம் பண்டிதமணியும்

பேராசிரியர், சு. வித்தியானந்தன் (தலைவர் யாழ் வளாகம்)

இன்று யாழ்ப்பாணத் தமிழ், யாழ்ப்பாணக் கலாசாரம் ஈழத்து இலக்கியம் என்றெல்லாம் பெரிதாகப் பேசுகின்றோம். இவற்றிற் கெல்லாம் வித்திட்டு வழி வகுத்தவர்களுள் ஆறுமுக நாவலருக்கும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதை நாம் மறக்கலாகாது. நாவலர் பல சைவப் பாடசாலைகளை நிறுவி, ஆசிரியர்களை நியமித்துச் சைவத்தை

யும் தமிழையும் வளர்த்தார்; அவர் உண்டாக்கிய பரம்பரைபோலப் பண்டித மணிக்கும் ஒரு பரம்பரை உண்டு. அப்பரம்பரையைச் சேர்ந்தவர்களே, இன்று ஈழத்து மூலை முடுக்குகளில் பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருந்து தமிழையும், சைவத்தையும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். நாவலரின் வசன நடை எவ்வளவு தனிச் சிறப்புப் பெற்றதோ, அவ்வாறே வேறு வகையிற் பண்டிதமணியின் வசன நடையும், தனித்துவம் வாய்ந்தது. பண்டிதமணி இலக்கணத்தை அதிகம் கவனியாது தமிழ்நடையை மலினமாக்கி உபயோகிக்கிறார் என்று சில பண்டிதர்கள் குறை கூறுவதுண்டு. ஆனால் இவரது நடை இவருக்கே அமைந்த கொடை. அந்த நடைதான் இவரின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றது. ஆறுமுக நாவலர் பல உரைகள் எழுதியிருக்கிறார். அவற்றுள் திருமுருகாற்றுப்படைக்கு எழுதிய உரை பெரிதும் போற்றப்படுகின்றது. பண்டிதமணி எழுதிய உரைகளிலே அவருக்கு உரையாசிரியர்கள் வரிசையிலே சிறப்புப் பட்டத்தை அளித்தது கந்தபுராணத் தக்ஷகாண்டத்திற்கு அவர் எழுதிய உரையாகும்.

இப் புராண உரை அரங்கேற்றமும் தனித்துவம் பெற்றது. இதனைப் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவ மன்றத்தினர் அரங்கேற்றம் செய்ய உதவியவர் வைத்திய கலாநிதி பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள்; தமிழ் மன்னர் இறுதியாகச் செங்கோலோச்சிய கண்டிமாநகரிலே, தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த மலைப்பிரதேசத்திலே பேராதனைப் பல்கலைக்கழக வீதிகளிலே, யானை மீது ஊர்வலம் வந்த கந்தபுராண உரைச்சுவடி கலைமண்டபத்திலே அரங்கேறிய காட்சி புனிதமானது. எனவே இலங்கைப் பல்கலைக் கழகம் பண்டிதமணிக்குப் பல வகைகளிற் கௌரவமளித்துப் பெருமைப்படுத்தியது.

இன்று யாழ் வளாகம் இவரைக் கௌரவித்துப் போற்றுகின்றது. இப் பாராட்டு விழா யாழ் வளாகத்தில் நடப்பது ஒரு வகையிலே பொருத்தமாகத்தான் இருக்கிறது. இவருக்குப் பல வகைகளிலே, பல துறைகளில் ஊக்கமளித்து வழி காட்டியாக இருந்தவர், திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த கைலாசபதியவர்கள். அவர் காலெடுத்து வைத்த மண்ணிலே பரமேஸ்வராக் கல்லூரி மண்டபத்திலே இந்த விழாவை நாம் இன்று எடுப்பது பொருத்தமாகவுள்ளது. மிக விரைவிலே ஒரு பல்கலைக்கழகமாக அமையவிருக்கும் யாழ் வழாக மண்டபத்திலே மரபு வழி வந்த அறிஞர்களுக்கு முதன் முதலாக அளிக்கப்படுகின்ற கௌரவப் பட்டத்தின் சான்றிதழை இன்று உங்கள் முன்னிலையிலே அவருக்கு அளிப்பதிற் பெருமை யடைகின்றேன். இப்பொழுது அச் சான்றிதழைப் பல்கலைக் கழகத்தின் சார்பிலே உங்கள் முன்னிலையில் அவருக்கு அளிக்கின்றேன்.

## 2. பணடிதமணியின் மாணவ பரம்பரை

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
(இந்து கலாச்சாரப் பீடாதிபதி; யாழ் வளாகம்)

டாக்டர் பண்டிதமணி அவர்கள் சிறந்த ஆசிரியர் பரம்பரையை உருவாக்கியவர்கள் என்பதையிட்டு அவர்கள் மேலும் பாராட்டுக்கு உரியவர்கள். பண்டிதமணி அவர்களின் மாணவர் பரம்பரையில் அவருக்குரிய தனி முத்திரை பொறிக்கப்பட்டிருக்கக் காணலாம். நன்கு கற்றதனால் தெளிவும், உறுதியும், கம்பீரமும், துணிவுடன் தலை நிமிர்ந்து, துணிவுடன் பேசும் திறமையும் இம் மாணவர் பரம்பரைக்

குரிய சிறப்பான அம்சங்கள். இப் பரம்பரையைத் தோற்றுவித்து அது தொடர்ந்து வளருமாறு வழி வகுத்ததற்காகப் பண்டிதமணி அவர்களைப் பாராட்டுகின்றேன்.

நிறைந்த கல்வியை முறையாகப் பெறுபவர்களுக்கு அக் கல்விக்கேற்ற ஒழுக்கம் தானுகவே தொடர்ந்து அமையும். டாக்டர் பண்டிதமணி அவர்கள் கல்விக் கேற்ற ஒழுக்க நெறி நிற்பவர்கள். கற்றபின் அதற்குத் தக நிற்கக் கற்றவர்கள். அவர்கள் பெற்ற நிறைந்த கல்வியின் விளைவாக இயல்பாகவே அமைந்துள்ளது அவர்களிடம் குடிகொண்டுள்ள ஒழுக்கம். இவ்வொழுக்கச் சிறப்பு நம்மனோர்க்கு வழி காட்டியாகத் திகழ்கின்றது.

பண்டிதமணி அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், தமிழ்த் தொண்டையும் சைவத் தொண்டையும் இணைந்து ஆற்றுவதற்கு வேண்டிய உடல் வலிமையையும் உள வலிமையையும் அனுக்கிரகிக்குமாறு என் குலதெய்வமாகிய அம்பிகையைப் பிரார்த்தித்து என் உரையை முடித்துக் கொள்கின்றேன்.

## 3. முற் கொண்டு அமைந்து கிடந்தது

கலாநிதி அ. சண்முகதாஸ்

(தமிழ்த் துறைப் பொறுப்பு விரிவுரையாளர் யாழ் வளாகம்)

இறையனுர் அகப்பொருள் உரைகாரர் ஓரிடத்திலே பின் வருமாறு கூறுகின்ருர்.

ஏறுதி மோதிரம் செறித்தற்றிருவுடையான் ஒருவன், ஏறுதி மோதிரம் செறிக்கும் அத்திரு அவன் செறிகின்ற பொழுதே உண்டாயிற்றன்று முற்கொண்டு அமைந்து கிடந்தது. அரசு வீற்றிருந்த திருவுடையார் ஒருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு அரசு வீற்றிருக்கின்ற பொழுதே உண்டாயிற்று அன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது. அது பின்னை ஒரு காலத்து, ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும்.

பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தினைச் செறிக்கும்படி மாண்புமிகு பல்கலைக் கழக வேந்தரைப் பேராசிரியர் வித்தியானந்தன் பட்டமளிப்பு விழாவிலே வேண்டியபொழுது எனக்குக் களவியலுரைகாரரின் இக்கூற்றுக்களே நினைவில் வந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைப் பல்கலைக் கழகம் வழங்க விருக்கும் கௌரவப் பட்டங்களுக்குத் தகுதியானவர்கள் பெயர்களை, எங்கள் வளாக செனற் சபை தீர்மானித்து மூவருடைய பெயர்களை எங்களுடைய, வளாகம் பல்கலைக் கழகச் செனற்சபைக்கு அனுப்பியிருந்தது. அவற்றுள் பண்டிதமணியின் பெயரே இறுதியில் தெரிவாயிற்று. இது துணைக் காரணமாக அமைய முற்கொண்டு அவரிடஞ் செறிந்திருந்த திரு இவ்விலக்கிய கலாநிதிப் பட்டம் அவரிடந் தேடி வரவைத்தது. நாமெல்லாம் கலாநிதிப் பட்டத்தினைத் தேடி, இங்கிலாந்து வரை செல்ல வேண்டியிருந்தது. ஆனல் பண்டிதமணிக்கோ இலக்கிய கலாநிதிப் பட்டம் அவரைத் தேடி, திருநெல்வேலிக்கே வந்துவிட்டது. திருநெல்வேலி திருநெல்வேலியாயிற்று. அவ்வாறு அப்பட்டம் தேடி வந்ததற்கான காரணம் என்ன? சென்ற மாதம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலே அதற்கான காரணங் கூறப்பட்டது. இன்று அதனைப் பல்வேறு கோணங்களிலே பலரும் பலபடி விளக்கவுள்ளனர்.

திரு. வ. ஐ. சி. ஜெயபாலன் பண்டிதமணியின் புகழைப் பாவில் உரைத்தார்.

## 4, பட்டத்திற்கு மிகப் பொருத்தமானவர்.

திரு ச. அம்பிகைபாகன்

( முன்னாள் அதிபர், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் )

இலங்கையிலே கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர் பண்டிதமணி அவர்களே. தைத்திரிய உபநிடதத்தில் ஒருவன் எந்நிலையிலிருந்தாலும் எவ்வளவு வயது சென்றாலும் ஓதல் (சுவாத்தியாயம்) ஓதுவித்தல் (பிரவசனம்) ஆகிய வற்றைக் கைவிடக் கூடாதெனக் கூறியுள்ளது. பண்டிதமணி இத் தள்ளாத வயதிலும் நோய்வாய்ப் பட்டிருந்த போதிலும் இவ்விரு கடமைகளையும் தவறாது செய்து வருகின்றார். யாழ்ப்பாண வளாகத்திலுள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் அவர்கள் வாழ்க்கையை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

## 5: எங்கள் ஆசான்.

திரு க. சி. குலரத்தினம், சைவப் புலவர், பண்டிதமணியின் பழைய மாணவர், மில்க்வைற் செய்தி ஆசிரியர்.

நாவலர் வழியாக வந்த நம் ஆசிரியப் பெருந்தகை தமிழையும், சமயத்தையும் பேணிய பெருமை வாய்ந்தவர். அவர் 1942ஆம் ஆண்டு வரையும் செய்துவந்த தமிழ்த் தொண்டினை இடைநிறுத்திக் கொண்டு சமயத் தொண்டில் ஈடுபட்டு அரிய சேவை செய்துள்ளார். முன்னர் சீதையை மையமாகக் கொண்டு. இராமாயண ரசனை செய்தவர்; தம் ஆராய்வுகள் இரசனைக் குறிப்புகளை யெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தார். அவற்றை அன்னவர் சார்பில் ஏற்றுக் கொண்ட பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் அவை கடவுட் கொடை என்று நன்றி கூறினார்கள்.

வள்ளியம்மையாரை மையமாகக் கொண்டு கந்தபுராண இரசனையில் ஈடுபட்ட எங்கள் ஆசான் அது யாழ்ப்பாணக் கலாசார மூலம் எனக் கூறியும், எழுதியும் வந்தார். அவற்றின் பயனாக நூற்றுக் கணக்கான கட்டுரைகளை வெளியிட்டார். அவை கந்தபுராண போதனை, கந்தபுராண கலாசாரம் என்னும் நூல்கள் வடிவமாகவும் வந்தன.

கந்தபுராணத்தின் தஷகாண்டம் ஞானப் பகுதி. மிக்குள்ளதாய் நம்மவர்க்கெல்லாம் இரும்புக் கடலையாய் இருந்தது. அதனை அவர் தம் நெஞ்சில் ஊறவிட்டு இளக்கி எல்லோரும் எளிதில் படித்துப் பயன் பெறும் வகையில் உரை செய்து தந்தார். அதன் அருமையை அறிந்த முதுபெரும் பேராசிரியர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி அவர்கள் பேராதனை வளாகத்துப் பிரமுகர்களைக் கொண்டு பெருவிழா எடுத்துப் பொலிவுறப் போற்றினார். இன்று இப் பட்டமளிப்பு விழா கோலாகலமாக யாழ்ப்பாண வளாகத்தில் நடைபெறுகிறது.

சைவப்பற்று, தமிழபிமானம், குரு விசுவாசம் முதலிய கோட்பாடுகளில் திருக் கைலாய ஞான பரம்பரையைப் பாதுகாக்கும் ஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பணிபுரிய பரமேஸ்வரன் பேரருள் பெருகுவதாக.

## 6. பண்டிதமணிக்கு நடந்த வேறொரு பட்டமளிப்பு

திரு ந. சபாரத்தினம்.
முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

பட்டமளிப்பும், பாராட்டும் நடந்த இடம் கல்லுண்டாய்ப் பெருவெளி; மண்டபம் கார்; காலம் இதுபோல இரவு 7.30 மணி இருக்கும். பட்டமளித்தவர் அமரர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள். மண்டபத்தில் இருந்த ஒரே ஒருவன் அடியேன் மட்டுமே. 1932ம் ஆண்டு யாழ்ப்பாணக் கலா நிலையத்தில் பண்டிதமணி, சின்னத் தம்பிப் புலவரைப் பற்றி நிகழ்த்திய விரிவுரையைக் கேட்டு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு திரும்பும் போது நடந்த சம்பவத்தைக் குறிப்பிடுகின்றேன்.

'எப்படி இருந்தது பேச்சு?' என்று வினவினார் எனது மதிப்புக்குரிய சற்குரு அமரர் பேரின்பநாயகம். "நன்றாயிருந்தது" என்று ஒரு சொல்லிற் சமாளித்து விட்டேன். 'இது கேட்கவா நான் உன்னைக் கூட்டி வந்தது?' என்றவர், 'இந்த இளம் பண்டிதன் ஆங்கிலம் படித்தால் பேராசிரியர் பிராட்லியைப்போல் வருவான்' என்று வியப்பும் பாராட்டுங் கலந்த தொனியில் இறுக்கி விட்டார்.

'புகழ் வாய்ந்த திறனாய்வாளன்' பிராட்லியின் 'கவிதை பற்றிய சாரங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றில் சிலவற்றை நான் வாசித்திருந்த காலம் அது. அவருடைய அரிய கருத்துக்களைப் புரியமுடியாமல் திண்டாடிய காலம் அது. எனவே பண்டிதமணிக்கு அவர் அந்தக் காலத்திலேயே வழங்கிய பாராட்டை, இன்று எங்கள் பல்கலைக் கழகம் உறுதி செய்துள்ளது.

### பண்டிதமணியின் பதிலுரை.

பாராட்டுரைகளைத் தொடர்ந்து இலக்கிய கலாநிதி பண்டிதமணியவர்கள் பனியருவித் தாடி பளபளக்க அறிவுமலை ஒன்று கால் கொண்டெழுந்தாற் போல எழுந்து நின்றார். அவர் பேசிய சில கருத்துரைகளை அடுத்து அவரின் எழுத்துரையி லமைந்த சொற்பொழிவினை அவர்தம் அன்பு மாணாக்கர் திரு அ. பஞ்சாட்சரம் யாரும் கேட்டுப் பரவசமடையுமாறு வாசித்தார். அந்தப் பதிலுரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

திருவருளைச் சிந்திப்போமாக:

கனம் தலைவர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய சபையோருக்கும் வணக்கம்:

இன்றைய நிகழ்ச்சிக்குக் காரணர்களான அனைவருக்கும், பல்கலைக் கழக வளாகங்களுக்கும், பாராட்டு வழங்கியவர்களுக்கும், மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இச் சந்தர்ப்பத்தில் தக்கோர்களான பழைய தமிழ் அறிஞர்களையும், நிகழ்வு, எதிர்வு என்கின்ற காலங்களையும் நினைவு கூருகின்றேன்.

நான் எம் மாத்திரம்! என்ற எண்ணமே தலை தூக்குகின்றது. எனினும்,

இந்தப் பரமேசுவர வளாகத்தை எண்ணும் போது ஒரு புத்துணர்ச்சி உண்டாய் விடுகின்றது. இவ் வளாகம் புண்ணியாத்மாவான மகா புனிதர் ஒருவரின் பாதங்கள் தீண்டிய இடம். என்னைப் பொறுத்த வரையில் இது ஒரு மகா புனித ஸ்தலம்.

'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்ற குறிக்கோள் மந்திரத்தோடு தோன்றியது பரமேசுவரா. 1923ல் அங்கே உயர்தர விஞ்ஞான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அவ் வகுப்பிற் சேர்ந்து படிக்கும் பொருட்டு, மேற்குறிப்பிட்ட குறிக்கோள் மந்திரத்துக்கு நல்ல உதாரணம் என்று சொல்லத்தக்க ஒருவர் வந்து சேர்ந்தார். அவரே அந்த மகா புனிதர். அவரை இங்கே என் கண்கள் நிறையக் கண்டேன். 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்' என்கின்ற அநுமான் கூற்று நினைவுக்கு வருகின்றது.

அவர் நூதனமான ஒரு பிறவி. அவரது தோற்றம் பிரத்தியேகமானது. உயரம் அகஸ்தியரை நினைவு படுத்துவது. மிகமிக மிருதுவான தேகம். எண்ணத்தக்க சில மயிர்களாலான குடுமி. மிக்க தேஜஸ் — ஆழ்ந்த சிந்தனை — இவை ஓரளவு குறிப்பிடத்தக்கவை.

வகுப்பிலும் வெளிவிடுதியிலும் தாமரையிலையில் நீர் போல் அவர் வாழ்ந்து வந்தார்.

காலம் பறந்தது. 1930 ல் அவர் விஞ்ஞான பட்டதாரியாய்த் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் உப அதிபர் ஆனார். எனக்குப் பேரானந்தம். அவருடன் ஒருங்கு வாழும் பாக்கியமும் கிடைத்தது. கிடைத்தும் என்னே?

அந்த மகானால் அடையக் கடவ பயனை அடைந்தாயா? என்று என்னை நானே இன்றுங் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர் தர்மம் என்ற வாளின் கூர்மையில் சஞ்சரிப்பவராயிருந்தார். தம் தேவைக்கு மற்றவரை அவர் தீண்டுவதில்லை. குறிப்பறிந்து செய்பவரைத் தடுப்பதுமில்லை.

எவனொருவன் மற்றவர்களைத் தீண்டாமல் வாழ்கிறானோ, அவன் மற்றவர்களால் தீண்டப்படான் என்பது அவர் கண்ட முடிபுகளில் ஒன்று.

அவர் இரவில் போசனத்தின் பின் பெரும்பாலும் தனியிடம் நாடிச் சென்று விடுவார். சில சமயம் விடிந்தும் வருவார். மனத்தோடு போரிடுபவராயிருந்தார்.

1934 ல் மனத்தை வெற்றி கொண்டுவிட்டார் என்பதைப் பிற்காலத்திலே தான் அறிந்தேன்.

பரமாணுத்துணை மாசு மனத்திற் புகுந்தாலும் பெரிய உண்மைகள் மறைந்து பாழ்பட்டுவிடும் என்பது அவரது ஸ்திரமான கருத்து.

மனம் மாசகன்று மனக்கண் திறந்தவர்கள் முன்னிலையில் வெளிக் கண்கள் படுகுருடுகள் என்பது தெட்டத் தெளியத் தெரிந்தது.

முகத்துக் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்,
அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்.

என்பது திரு மந்திரம். அகத்துக்கண் — மனக்கண்.

மனக்கண் வெளித்தவர்கள் புத்தகங்களைப் படிக்கிற முறையே வேறு. ஒரு பக்கத்தில் ஒரு சொல் வாசித்தாற் போதும். அத்தியாயங்களின் தலைப்புக்களே போதியனவாகலாம்.

அவரை ஒரு கலைக் களஞ்சியமாகவே பாவித்தேன். அருமை தெரியவில்லை;

இவர் ஒரு ஏலாவாளி. ஏலாவாளிகள் சமயப் போக்குள்ளவர்களாய்க் காலங் கழிக்கிறார்கள் என்ற எண்ணமே எனக்கிருந்தது.

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அந்த மகானைப் பயன் படுத்திக்கொண்டு, ஜனநாயக உலகில் பறந்துகொண்டிருந்தேன். பெருங் கண்டனகாரன் என்ற பழிச் சொல்லும் எனக்குக் கிடைத்தது. அஞ்ச வேண்டியதற்கும் அஞ்சாத முரட்டுப் போக்கும் போதியளவு இருந்தது.

1942 ம் ஆண்டளவில் வாசிப்புக்கள் போய்ச் சிந்தனை உலகில் அவர் ஆழ்ந்திருந்தார். அப்பொழுது தோல்விகளின் மேல் தோல்விகள் எனக்குக் கிடைத்தன. அதன் பயனாக அந்த முனிவரை மெல்ல அணுகினேன். அவர் சொல்லுவது எனக்கு எட்டவில்லை;

‘மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுவ தெங்ஙனே.’

என்பது மேற்குறிப்பிட்ட திருமந்திரத்தின் பிற்பாகம்; அதுதான் நினைவுக்கு வருகின்றது.

எட்டாத போதும் அவர் சொல்லுவதை எழுதுவதென்று துணிந்தேன். அவர் தமது சாதனைக்கோ என்னவோ சொல்லிக் கொண்டேயிருப்பர். பத்து வீதத்துக்கு மேல் எனக்கு விளங்குவதில்லை. ஏனிவற்றைச் சொல்லுகிறார் என்று எண்ணுவது முண்டு.

‘சில விதைகளை எறிகிறது தான்; பருவ காலத்தில் அவற்றுட் சில முளைக்கவும் கூடும்.’ என்று ஒரு முறை சொன்னார்.

சில சமயம் ஒரு விக்கல் எழுந்து தடைசெய்யும். அப்பொழுது மௌனமாய் விடுவார்.

சில கருத்துக்களைக் கிரகிக்கப் பெரிய கணித அறிவு தேவையாயிருந்தது. நல்ல வேளை கணிதம் வல்ல இருவர் சமயப் போக்குள்ளவர்கள் அவரைத் தொடர்ந்து அந்தக்கரண விருத்திகளை விளக்கும் படங்கள் வரைந்ததுண்டு.

அப்படங்களுக்கு விளக்கந் தர முடியுமா என்று விஞ்ஞான கலாநிதியான பேராசிரியர் ஒருவர் வினவியதுண்டு. அப்பொழுது கணித மகா மேதையான இராமாநுஜத்தை அவருக்கு ஞாபகப்படுத்த நேர்ந்தது.

பாரிய கணக்குக்கள் இராமாநுஜத்துக்கு மனக்கணிதமாயிருக்கும்; உடனே மறுமொழி சொல்லிவிடும்; நூறுபடி போட்டுத்தான் அந்த மறுமொழியின் உண்மையைக் கணித மேதைகள் ஒருவாறு விளங்கிக் கொள்ளமுடியும். அப்படியும் முடியாத கணித முடிபுகளை விளங்கிக் கொள்ள முடியாதாயினும், அவற்றைப் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறேதான் இம் மகானின் சிந்தனைகளும் பரம உண்மைகள். பேணிப் பாது காத்து வைக்க வேண்டியவைகள்.

இவ்வளவு தூரம் அந்த மகானைப்பற்றிச் சொல்லுவதன் காரணம் வெளிப் படை. பரமேசுவரா வழங்கிய தத்துவ ஞானியைப் பற்றி வேறெங்கேதான் சொல்லுவது!

இவ் வளாகம் சமய பீடத்தின் ஒரு அங்கமாக அவரது தத்துவ ஞானசரித்திரத்தையும், ஆயிரக் கணக்கில் அவர் கண்ட உண்மைகளையும் ஏற்றவாறு அமைத்துப் பாதுகாத்துப் பேணுவது சாலவும் நன்று என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

அவரது சிந்தனைகள் எவ்வித சிக்கல்களையும் முட்டின்றி விடுவிக்கக் கூடியவைகள். அவரது சரித்திரமும் வெளிப்படையான சில கருத்துக்களுமே மனக்கவலை மாற்றும் மருந்துகளாயமையும். ஜனநாயக அலைகள் தாக்காமலே வாழ்க்கைக்கு வழிகாண உதவும்.

இத்துணையும் இங்கே சொல்ல நேர்ந்தது பேராதனைப் பல்கலைக் கழகத் தொடர்பு பத்து வருடங்களுக்கு முன்னமே அமைந்ததனாலேயேயாம்; தொடர்பு படுத்தியவர்களை நினைவு கூருகின்றேன்.

1968ல் நக்கீரர் கண்ட உரையைப் பேராதனை வளாகம் பெரு விழா எடுத்து மதித்தது. அம் மதிப்பு நாவலர் அவர்களின் மருகரான வித்துவசிரோமணி திரு. பொன்னம்பலம்பிள்ளைக்கே உரியதாகும். சிரோமணி வழிவந்த உரைக் குறிப்புக்களைத் தேடியெடுத்து ஒருவாறு பொருத்தி உரைப்படுத்தியதே நான் செய்தது.

1968 தொடக்கம் பேராதனை வளாகமும் மற்றைய வளாகங்களும் எனக்கு நெருங்கிய தொடர்புள்ளவைகள் ஆயின. அவற்றின் வளர்ச்சி என் வளர்ச்சியாயது. வளாகங்களின் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என் அன்பார்ந்த நன்றி உரியதாகுக. அண்மையில் பேராதனை வளாகத்தையே யாழ் வளாகத்தில் கண்டதும் என் மகிழ்ச்சி துள்ளி விளையாடுவதாயிற்று. இங்கே பயில்பவர்கள் சிலர் என்னோடு நெருங்கிப் பழகுகின்றார்கள்.

இவ் வளாகத்திலும் ஏனைய வளாகங்களிலும் பயிலும் தமிழிலக்கிய மாணவர்களுக்குச் சிறப்பாகவும், ஏனையவர்களுக்குப் பொதுவாகவும் தமிழ் பற்றி ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.

இவ் வளாகத்தோடு தொடர்பு பட்டவரான அந்த மகான் தமிழிலே பதினெட்டு வகைத் தமிழ் சொல்லுகின்றார். முதலாவது தமிழ் வாகடத் தமிழ், அப்பால் புராணத் தமிழ், சிவத்தமிழ் என்றிங்ஙனம் பலவேறு வகை சொல்லுகிறார். அவற்றுள் சங்கத் தமிழ் என்பதும் ஒன்று. அச் சங்கத் தமிழை எடுத்துக் கொள்ளுவோம்.

தமிழுக்குச் சிறப்பான இலக்கணம் பொருளிலக்கணம். பொருளிலக்கண மரபு குன்றிய காலத்தில், அதை நிறுவ எழுந்தது இறையனார் அகப்பொருள் என்ற இலக்கணம். அதற்கு அன்பினைந்திணைக் களவியல் என்று ஒரு பெயரும் உண்டு.

அதற்கு உரை கண்டவர் கடைச் சங்கத் தலைமைப் புலவரான நக்கீரர். அவ் வுரையில் 'அன்பினைந்திணைக் களவியல்' என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று'

என்றொரு வசனம் உண்டு. அவ் வசனத்தை எடுத்துக்கொண்டு சென்னையும், யாழ்ப்பாணமும் சேர்ந்து இதே இடத்தில் நடாத்திய மகாநாட்டில் 'தமிழ்' பற்றி நான் பேசியதுண்டு. அப் பேச்சில் சங்கம் ஒடுங்கியபின் தோன்றிய சிந்தாமணி முதலிய காப்பியங்களைத் 'தமிழ்' என்று சங்கம் அங்கீகரிக்குமா? என்ற வினவை எழுப்பியிருக்கின்றேன். என் பிரசங்கத்தை அப்படியே தினகரன் வெளியிட்டுத் தன் அபிப்பிராயத்தையும் ஆசிரிய வசனத்தில் தெரிவித்திருக்கின்றது.

தமிழ் என்றால் என்ன? சங்கம் ஏன் தோன்றியது? ஏன் ஒடுங்கியது? சங்கத்தில் இருந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்ன ஆராய்ந்தார்கள்? என்றின்னோரன்ன கேள்விகளை இப்பொழுதும் எழுப்பிக் கொண்டிருக்கின்றேன். தமிழ் பற்றிய ஆராய்ச்சியை வளாக மாணவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்பது என் அவா.

தமிழ் போலவே சமயம் பற்றியும் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதும் என் கருத்து. நமது சமயம் வைதிக சைவம். சமயத்தின் மூல தத்துவம் அத் வைதம். அஃதாவது இறைவன் இரண்டற்றிருக்கும் தன்மை. இந்த அத் வைதம் பற்றி 'அத் வைதமும் சித்தாந்த மகா வாக்கியமும்' என்றொரு கட்டுரை எழுதிக் கொண்டிருக்கின்றேன். இதே சமயத்தில் பிரசித்தி பெற்ற இந்திய தத்துவ சாத்திரம் எழுதியவரும், வித்தியாதிபதியுமாகிய திரு. லஷ்மணன் அவர்களை 'அத் வைதமும் வேதாந்த மகா வாக்கியங்களும்' என்ற தலைப்பில் வானொலியில் பேசும்படியும் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இது பற்றி அண்மையில் ஒரு பத்திரிகையில் திரு. லஷ்மணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அன்றி, எந்த மகானைப் பாராட்டுகின்றேனோ, அந்த மகானைப் பற்றி எழுதியிருக்கின்றார்கள்.

இவ் அத்துவித ஆராய்ச்சி விரைவில் முற்றுமாயின் அதனை இவ்வளாகத்துக்கு அர்ப்பணம் செய்யவும் நேரலாம்.

சொல்லவேண்டியவைகள் அநேகம். அவற்றை அடக்கிக் கொண்டு இங்கே சில குறிப்புக்களை ஒருவாறு குறிப்பிட்டிருக்கின்றேன்.

எங்கள் தலைவர் அவர்கள் பழைமைக்கும் புதுமைக்கும் ஒரு தனிப் பாலம். அதனால் நூற்றுக்கு நூறு பழம்போக்குள்ள என்னைத் தலைவர் அவர்கள் அணைத்துக் கொள்வதில் ஆச்சரியமில்லை.

எவர்கள் இக் கௌரவத்தை வழங்க வெகுகாலம் முயன்றார்களோ, அவர்கள் காலத்திலேயே அவர்களுக்கு ஊடாகக் குறிப்பிட்ட பட்டத்தை [அஃதாவது இலங்கைப் பல்கலைக் கழகம் 31-5-78ல் வழங்கிய இலக்கிய கலாநிதி பட்டத்தை] பெறுதற்கு வாய்த்த வாய்ப்பை என்ன என்பது!

தெய்வ சங்கற்பம் இருந்தவாறு.

இப்பொழுது இங்கே வழங்கிய பாராட்டுரைகளை அந்த மகானுக்கே அர்ப்பணம் செய்கின்றேன். பாராட்டியவர்களுக்கும், சபையோருக்கும் அன்பார்ந்த வணக்கம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

# 'இலக்கியக் கலாநிதி'

## பண்டிதமணிக்குப் பல்கலைக் கழகப் பட்டம்

திரு. நம-சிவப்பிரகாசம் அவர்கள்
(பிரதம ஆசிரியர், இந்துசாதனம்)

கல்விப் பெருந்தகைமைக் கண்ணியம் வாய்ந்த புலவர்கள் பண்டிதர்கள், வித்துவான்கள் பல்கலைக் கழகத்தைச் சாராதவர்களாய் இருக்கின்றனர். தரம் வாய்ந்த சங்கங்கள், ஆதீனங்கள், முதலியன கற்றோரைக் கண்ணியப்படுத்தும் முகமாகக் கௌரவப் பட்டங்களை வழங்கும் வழக்கம் உண்டு. இத்தகைய பட்டங்களைப் பல்கலைக் கழகம் பாராட்டுவதென்றால் அவர்கள் தங்கள் துறைகளிலே அரிய நூல்களையியற்றியும் ஆராய்ச்சிகளை வெளியிட்டும் தங்கள் ஆற்றலையும் தகைமையையும் நன்கு புலப்படுத்தி இருக்கின்றனர் என்றே கருதவேண்டும்.

தொல்கலைத் தூயதமிழ் தோய்ந்து சுருதிநெறி
மல்குகுலப் பண்டித மாமணியைப் — பல்கலை
காக்கும் கழகம் கலாநிதிக் காவலனாய்
ஆக்குதல் யாருக் கணி.

இலங்கைப் பல்கலைக் கழகம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு 'இலக்கியக் கலாநிதி' என்ற பெருமையைக் கழக விதிப்படி கணித்துப் பட்டம் அளிக்கின்றது. தமிழையும் அம் மொழிப் பெருமையையும் வளர்க்கும் பணியே பணியாகக் கொண்ட பண்டிதமணி புலமைப் பாரம்பரியப் பெருநிதிக்குரியவர். இரு மரபும் குருவழி தமிழ் சம்ஸ்கிருதம் சைவசித்தாந்தம் ஆகியவற்றைக் கற்று, கற்றதனை நன்மாணுக்கர்களுக்கு ஈந்து, கற்றுணர்ந்த சால்பின் வழி சார்ந்தொழுகி நிற்கின்ற குருநலப் பண்டிதமணி பற்றற்ற வாழ்வு நடத்தும் பிரமசாரி. அவர்க்குற்ற பற்றொன்றுண்டு. முத்தி பெற முயலும் வழியில் உத்தம நூல்களைக் கற்று ஆய்ந்து தெளிந்து தாம் பெற்ற அறிவின்பத்தை யாவரும் பெற உரைத்து உவகை கொள்வது அவரது உள்ளப் பெருக்காகும்.

இலக்கியம் ஓர்கலை; இன்பநிதி ஈது
நிலைக்கும் இருமையும்; நேராம்—இலக்கணம்
பண்டித மாமணி, பல்கலைச் சீர்க்கழகம்
கண்டமெய், கண்ட துலகு-

# புந்திமலர்ந் தன்பினுடன் வாழ்த்துகிறோம்

செந்தமிழாம் பூந்தடத்தில் மலர்ந்து கல்வித்
தேன்நிறைந்து புரிமளிக்கும் மலரே ! எங்கள்
சிந்தனைக்கு விருந்தான செம்மையனே ! இலக்கியத்திற்
சிறந்தபணி செய்துயர்ந்த கவிஞரும் சீராள !
விந்தையொடு கலாநிதியாம் பட்டமதைப் பண்பினொடு
விளங்குநல் வளாகத்தார் தந்துதவிப் பெருமையானார்
புந்திமலர்ந் தன்பினுடன் வாழ்த்துகிறோம். ஐயா ! நீ
புவனியிலே பல்லாண்டு பிணிநீங்கி வாழியவே!

புத்திதெரி யாதபல மாணவர்க்குப் புந்திசேரப்
புகலுரையால் அவருள்ளம் களிசிறக்கப் புரிந்தனிரால்
சித்திபெறு சைவநூல் சிறப்புடனே ஆராய்ந்து
சீரான பலநூல்கள் செம்மையுறச் செய்தனிரால்
மெத்துபல புகழ்பெற்று நாவலரின் வழியொழுகி
மேவுபிர மச்சரிய முறையில்நெறி பிறழாது
சுத்தநெறி ஒழுகிவளர் பண்டிதமா மணியே! நீ
சோர்விலனாய் இந்நிலத்தில் சுகமுடனே வாழியவே!

''நீர்வை முருகு''

# எமது வழிகாட்டி

செந்தமிழின் துறைதோய்ந்து செகமெல்லாம்
ஒளிகாலும் சிறப்பு மிக்கோன்
பைந்தமிழின் பசிகொண்டு படர்வோர்க்குக்
கடைத்தேறும் பசியைத் தீர்ப்போன்
சிந்தையிலே சித்தாந்தத் தேனூறிச்
சிவம்வளர்க்கும் செம்மை யாளன்
கந்தனென அழகுடையான் கலாநிதியாம்
கணபதிசீர்ப் பெயரி னோனே.

பேச்சினிலே கனிவிருக்கும் பொருளிருக்கும்
பேசரிய பீறுநடை வீறிருக்கும்
கூச்சமிலாக் கண்டனங்கள் குளிர்ச்சியொடு
இடையிடையே குலவித் தோன்றும்
ஓச்சிடுநல் உபகதைகள் உள்ளியுள்ளி
உடல்குலுங்கச் சிரிக்க வைக்கும்
மூச்சினிலே முத்தமிழும் முகத்தினிலே
சிவக்களையும் முகிழ்க்கு மன்றே.

[சேந்தன்]

# கலாநிதியெம் ஐயா வாழ்க !

1. கணபதிப் பிள்ளைப் பண்டித மணிக்குக்
கலாநிதி யெனுமுயர் பட்டம்
அணிபெற இலங்கைப் பல்கலைக் கழகம்
அளித்ததும் எண்பது வயது
அணுகிய பாங்கும் அறிந்தமா ணவர்கள்
அன்பர்கள் தமதுமெய்ப் பக்திப்
பணிவினைக் காட்டப் பெருவிழா எடுக்கும்
பணியினைக் கொண்டனர் நன்றே.

2. பண்டிதர் ஐயா நாவலர் பெருமான்
பணியறம் போற்றுகாப் பாளர்
தண்டமிழ் முனிவர் சைவ சித்தாந்த
சாகரம் தீங்குரற் செஞ்சொற்
கொண்டல்மூா மேதை சீலமார் ஞானி
குலவுமே ரறிஞரும் பிறரும்
கண்டிட இனிய விழாவென விளங்கும்.
காட்சியர் மாட்சியுள் ளாரே.

3. திருமகளின் அருள்ஒளிரும் திருநெல் வேலிச்
செழும்பதியைக் கலைமகட்கும் உறையு ளாக்கி
அருள்ஞானப் பிரகாச முனிவர் வாழ்ந்த
அப்பதியில் தவக்கோலம் பூண்டு நாளும்
பெருகுமன்பர் திருக்கூட்டம் களிக்க மேலாம்
பேருரைகள் வழங்கியுய்யும் வழியைக் காட்டும்
அருமைமிகு கலாநிதியெம் ஐயா ஈசன்
அருளாலே சுகம்பெற்றெந் நாளும் வாழ்க.

அருட்புலவர், பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள்

# சிவத்தமிழ்க் கோயில் கலாநிதி வாழ்க!

(திரு. வே. க. ப. நாதன்)

ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வரை அருந்தமிழ் வளர்த்த, சைவநெறி வளர்த்த ஆன்றோர்கள் யாவரும் ஒருங்கே திரண்டு உருவாக்கிய சிவத்தமிழ்க் கோயிலாகவே யான் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைக் காண்கின்றேன். அவர்கள் பண்பின் முழுப் படைப்பு; அன்பில் அந்தணர்; சான்றோர்க்குச் சான்றோரவர்;

அவர்களுக்கும் தமிழ் கைவரும் என்று இத்துணை காலம் கடந்த பின்பாவது இலங்கைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் 'கலாநிதி' என்னும் பட்டத்தை வழங்கியதைத் தமிழ் கூறும் நல்லுலகத்துடன் யானும் ஒருவனாகச் சேர்ந்து மனமார வாயார வாழ்த்தக் கடமைப் பட்டுள்ளேன்; வாழ்த்துகின்றேன்.

இங்கு ஒரு வார்த்தை.

1952ஆம் ஆண்டு பரமேசுவராக் கல்லூரியில் தமிழ் விழா நிகழ்ந்தது. பண்டிதர் ஐயா அவர்கள் 'தமிழ் நுதலியது களவு; 'களவு நுதலியது தமிழ்' என்பதை விரித்துரைத்தார்.

அன்றே தமிழ் கூறும் நல்லுலகம் பண்டிதர் ஐயா அவர்களைப் 'பண்டிதமணி' யாக ஏற்றுப் போற்றி வாழ்த்தி வணங்கத் தலைப்பட்டது.

அன்றுதான் பண்டிதமணியைத் தமிழ் அறிந்த சான்றோன் என்று இலங்கைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் 'கலாநிதி' என்னும் பட்டம் வழங்கவேண்டும் என்ற பேராசையும் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்தது.

எனவே சிறியேனும் பல தடவைகளில் தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்களுக்கும் மகா வித்துவான் கணேசையர் அவர்களுக்கும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் இலங்கைப் பல்கலைக் கழகம் 'கலாநிதி' என்னும் பட்டம் வழங்கவேண்டும் என்று தினகரன் நாளிதழில் தலையங்கங்கள் தீட்டினேன். அக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. வே. குமாரசுவாமி அவர்களும் அரசியல் வகையாலும் முயன்று பார்த்தார்கள்; அம் முயற்சிகள் யாவும் அக்காலத்தில் உரியவர்கள் செவிகளில் ஏறவில்லை. பின்னர் இது கனவாய்ப் பழங் கதையாய் விட்டது.

ஆனால் அண்மையில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராதனை வளாகத்தில் அப்போது தமிழ்த்துறைத் தலைவராகவிருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும், யாழ்ப்பாண வளாகத் தலைவர் டாக்டர் கைலாசபதி அவர்களும், மேலும் சில கல்விமான்களும் தமிழ் கூறும் நல்லுலகின் பேராவலை நிறைவேற்றி யுள்ளனர் என்பது கேட்டுப் பெரு மகிழ்வுற்றேன். அவர்கள் யாவருக்கும் தமிழ் மக்களின் வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் செய்ய எல்லாம் வல்ல எம்பிரான் அருள்புரிவானாக என மனமொழி மெய்களால் வந்தனைகள் செய்வோமாக.

வாழ்க கலாநிதி! வாழ்க செந்தமிழ்! வாழ்க சைவநெறி!

## நெறிப்படுத்தியவர்.

திரு. த. சோமசுந்தரம்.
( வட்டாரக் கல்வி அதிகாரி )

" முன்னைப் பழம் பொருட்கு, முன்னைப் பழம் பொருளே,
பின்னைப் புதுமைக்கும், போர்த்துமப் பெற்றியனே. "

— இது சைவம் இயம்பும் இறையின் தன்மை.

பழைமைக்குப் பழைமையாய், புதுமைக்குப் புதுமையாய் இறைவனைக் காண்பது சைவசமய மரபு.

பழைமை என்றால் பிற்போக்கு அல்ல. அது பின்நோக்கு. புதுமையென்றால் பழைமை வாதிகளால் வெறுத் தொதுக்கப்பட வேண்டியதுமல்ல. பழையன கழிதல் அவசியமாயின், நியாயம் என்கிறது தமிழ் மரபு.

சைவ மரபும், தமிழ் மரபும் முரண்பட்டன அல்ல. அவற்றை இணைத்தே பார்க்க வேண்டும்.

இத்தகைய இயல்பினைக் கொண்டதனாலேயே, சைவத் தமிழ் மரபு காலதேச வர்த்தமானங்களைக் கடந்து, உலகம் போற்ற நிற்கிறது.
' எந்த ஒரு செயலையும் முழுமையாகப் பழைமையான தென்றோ அல்லது அது முழுவதும் புதிய தென்றோ கூற முடியாது. ஒவ்வொரு செயலிலுமே பழைமைக் கூறுகளும் புதுமைப் பண்புகளும் இணைந்து காணப்படும்.'' இவ்வாறு மேலைத் தேசத் தற்காலச் சிந்தனையாளர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

சென்ற நூற்றாண்டில் சைவ மரபு, தமிழ் மரபு இரண்டையும் இணைத்து மறு மலர்ச்சிக்கு வித்திட்டு வளர்த்து, இயக்கி மாபெரும் சாதனையை நிலை நாட்டிய பெருமை யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் பெருமானையே சாரும்.

இதன் பயனாக, நாவலர் மரபு உதயமானது.

நாவலர் மரபு வழித்தோன்றல், எமது அன்பிற்கும், மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய குருதேவர் கலாநிதி, பண்டிதமணி ஐயா அவர்கள்.

முதுபெரும் அறிஞர் திலகமாக, சைவ ஆசார சீலராக வாழ்கின்ற பண்டிதமணி அவர்கள், நாவலர் மரபினைப் பேணிக் காத்து, நாவலர் பரம்பரையினை வளர்க்கும் அரும்பணியை மேற்கொண்டுள்ளார்.

பல தமிழ்ப் புலவர்களையும், சைவ சீலர்களையும் தந்த தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, பேரறிஞர் பொன்னம்பலம்பிள்ளை, ஆகியோரின் சேர்க்கையை இளம் வயதிலேயே பெற்றுக் கொண்டவர். நாவலரின் பெருமகன் ஸ்ரீமத் கைலாயபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆகியோரிடம் குருசிட முறையில் பக்தி சிரத்தையுடன் தமிழும், சைவமும் கற்ற நன் மாணாக்கர்.

எவ்வாறு நன்மாணுக்கரின் இலக்கணத்திற்கு அமைய விளங்கினாரோ, அவ்வாறே நல்லாசிரியனுக்குரிய பண்புகளுடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலும் தண்டமிழாசானாக மிளிர்ந்தார்.

கற்பவை கசடறக் கற்று, கற்றாங்கு ஒழுகுவது என்பது பரம சங்கடமான விடயம். ஆனால், பண்டிதமணி அவர்கள் சாதனையிலும் காண்பித்து வருகிறார்.

சிறந்த சிந்தனையாளர்; சிந்தித்துத் தெளிந்ததை அஞ்சாது ஆணித்தரமாக எடுத்துரைக்கும் தீரர். நடுநிலைமை பிறழாத விமர்சகர். அவரின் வசனநடை தனித்தன்மை வாய்ந்தது. ஈழநாட்டில் தோன்றித் தமிழ் வளர்த்த பெரியார்களின் உண்மை வரலாற்றினை மிக்க சிரமத்துடன் சேகரித்து உலகறியச் செய்யும் பெரும்பணியில் ஈடுபட்டவர். இவர்களின் வரலாற்றினைத் திரித்தும், மறைத்தும் இருட்டடிப்புச் செய்பவர்கள் பண்டிதமணி அவர்களிடமிருந்து தப்பவே முடியாது. நேருக்கு நேர் கண்டனஞ் செய்யத் தயங்க மாட்டார்.

பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவுகள் கருத்துடன் நகைச்சுவை நிரம்பியனவாயும், யாழ்ப்பாணத் தமிழில் இனிமை, எளிமை, ஆழமுடைமை கொண்டனவாயும் திகழும். அவரின் பேச்சையும், எழுத்தையும் பெரியார்கள் பலர் பாராட்டியுள்ளனர். '' முல்லையெலாம் தேமணக்கும், முற்றமெலாம் பூமணக்கும், கொல்லையெலாம் பாமணக்கும், கோதறு நற்பண்டிதரின் எல்லையெலாம் தமிழ் மணக்கும் ', என்று அவரின் தமிழ்ப் புலமையை வியந்து ஒரு கவிஞர் பாடுகின்றார்.

நல்ல குடிப்பிறப்போடு, வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு நிலம் படர்ந்தன்ன நலம்படர் ஒழுக்கமும், திங்கள் அன்ன கல்வியும், திங்களொடு ஞாயிறன்ன, வாய்மையும், அஃகா அன்பும், வெஃகா உள்ளமும்; உலகியலறிதலும், நிலை இய தோற்றமும்; பொறையும், நிறையும், பொச்சாப்பின்மையும்; அறிவும், உருவும், ஆற்றலும் புகழும்; சொற்பொருள் உணர்த்தும் சொல் வன்மையும் கொண்ட பண்டிதமணியவர்கள் இந்த நூற்றாண்டின் இணையற்ற தமிழ்முனி. அன்னாருக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டத்தை அளித்து, அதன் நிலையையும், அப் பட்டத்தின் தரத்தையும் உயர்த்திக் கொண்டுள்ளது.

ஒரூரவர் என்பதனால் அவர்மீது எனக்குப் பற்று. அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்த போது உண்டானது பக்தி. நாவலர் பற்றிய எனது நாடக நூலுக்கு அணிந்துரை வழங்கி என்னை நெறிப்படுத்தியமை எனது பாக்கியம்.

வாழ்க கலாநிதி பண்டிதமணியவர்கள்,

வளர்க அவர் சைவத் தமிழ்த் தொண்டு!

# ஆசிரிய உலகு அக மகிழ்கின்றது

## மன்னார் திரு. எம். டானியல் ரேச் அவர்கள்.

1931 ஆம் ஆண்டு மன்னார் தமிழாசிரிய சங்க அங்குரார்ப்பண தினத்தின் போது தாய்ச் சங்கத்திலிருந்து வந்த நால்வரில் பண்டிதமணி அவர்கள் நிகழ்த்திய உரை இன்றும் என் மனதில் இளமையோடு தொனித்துக் கொண்டிருக்கிறது.

ஆறடி உயரம். ஆசானுபாகுவான இளமைத் தோற்றத்துடன் எழுந்து நின்றார். இளமை தவழும் கவர்ச்சிகரமான புன்னகை அரும்பும் கன்னங்கள்; அறிவுக் கதிர் வீசும் கண் மணிகள் சபையில் இருப்போரைச் சுழன்று நோட்டம் போட்டன. அழகாக வாரி முடித்த பின் குடுமி.

கணீரென்று கனிந்த குரலில் 'கவி கவியாகின்றான்' என்னும் விடயம் பற்றிப் பேசப் போகிறேனென்றார். அவ்விதழ்களிலிருந்து அழகழகான செந்தமிழ்ச் சொற்கள் முத்து முத்துக்களாகச் சொரிந்தன. கேட்கக் கேட்க இன்பத்தேன் வந்து பாயும் செவிகளாக இருந்தன எங்கள் செவிகள்.

அதன் சாரமாவது :- பசியினால் தவித்துக் கொண்டிருந்த் கவி காளமேகம் ஒரு சாப்பாட்டிடத்தில் வந்து குந்தினார். அவருக்கெதிராக சடை சிதம்பிய தலையுடன் வந்து குந்திய இன்னொருவரும் சாப்பாடு போடப்போட ஆவலோடு அவதி அவதியாகச் சாப்பிடுவதையும், சோறு கவிஞர் பக்கம் சிதறுவதையும், பார்த்து ஆத்திரமடைந்த காளமேகம் ''பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பர்'' அந்தக் கொடிய பசி வேளையிலும்,

''சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா – திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்''

என்ற பாடலையும் பாடிக் கவி கவியாகிறான் என்று பண்டிதமணி பேசி முடித்த பாணி அழகாக இன்னும் என் ஞாபகத்திலிருக்கிறது.

ஒரு தமிழாசிரியப் பெருமகனை இலங்கைப் பல்கலைக் கழகம் 'கலாநிதி' என்ற உயர்ந்த பட்டத்தை வழங்கிக் கௌரவித்தமையைத் தமிழாசிரிய உலகு பாராட்டாமலிருக்க முடியாது. அப் பெருமகனை எனது உள்ளத்தில் எண்ணி எண்ணிப் போற்றுகின்றேன்.